பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 14 சனிக்கிழமை (28.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 183

# எமது பிரச்சினைகளை நாமே தீர்ப்போம் வெளிச் சக்திகளுக்கு இடமளிக்க முடியாது



02 காயத்தை மறைத்தார் கம்பீர்



14 ராஜீவ் கொலைக்கு திட்டமிட்டார் பிரபாகரன்



17 தகவல் அறியும் சட்டத்துக்கு அரசு அஞ்சுவது ஏன்



18 ஈழத்தின் முதற் பெண் கவிஞர்

## யுத்த வெற்றி விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 28

**நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும். அந்நிய தலையீடுகளினாலோ அழுத் தங்களினாலோ தீர்க்கமுடியாது. அதே வேளை, பயங்கரவாதிகளின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் கொடுக்கமுடியாது. மக்களின் விருப்பத்தின்படி தீர்மானங்கள் மேற்கொள் ளப்படும். அரசு மேற்கொள்ளும் நல்லிணக்கச் செயல் திட்டங்களுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இனக்குரோத உணர்வுகளைத் தூண்டி விவேண்டாம் - இப்படி ஜனாதிபதி சகல அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்க வேண்டுகோள் விடுத்தார்.**

நேற்று கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெற்ற யுத்த வெற்றியின் இரண்டு ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நாட்டு மக்களுக்கு உரையாற் றும்போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரி வித்தார்.



யுத்த வெற்றியின் இரண்டாம் ஆண்டுக் கொண்டாட்டங்கள் நேற்று காலிமுகத்தி டலில் நடைபெற்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படையினரின் அணி வகுப் பைப் பார்வையிடுகின்றார்.

யுத்த வெற்றியின் இரண்டாவது ஆண்டு பூர்த்திவிழா நேற்று காலிமுகத் திடலில் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. காலை எட்டு மணிக்கு ஆரம்ப மான விழா நிகழ்வுகள் 11 மணிவரை இடம்பெற்றன.

அங்கு நாட்டு மக்களுக்கு உரையாற் றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் நிலவிய முப்பது வருட பயங்கரவாதச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளோம். புலிகளின் பயங் கரவாதப் பிடியில் சிக்கியிருந்த பல

(29ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மண்சரிவு 5 பேர் பலி

கொழும்பு, மே 28

மழை, மண் சரிவு அனர்த்தங்களால் கேகாலை, காலி, களுத்துறை மாவட்டங் களில் 5 பேர் பலியாகினர். மேலும் 1,299 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் தெரிவித்துள்ளது.

கேகாலை மாவட்டத்தில் நேற்று மண்சரிவு காரணமாக நால்வர் பலியாகி யுள்ளனர்.

(29ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும்

கொழும்பு, மே 28

எஞ்சியுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடை பெறும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என தேர்தல் கள் செயலக வட்டாரங்கள் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித் தன.

அத்துடன், இந்த உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் கள் 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி நடத்தப்பட உள்ளன. இந்த நிலையில், 2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பு தயாரிப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. எதிர்வரும் 31ஆம் திகதி 2010ஆம்(29ஆம் பக்கம் பார்க்க)

## பஸில் நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், மே 28

முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில் கடனுதவி வழங்கும் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள் ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடை பெறவுள்ள இந்த நிகழ்வில் பாரம்பரிய மற்றம் சிறுகைத்தொழில்துறை அமைச் சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் புனர்வாழ்வளிக்கப்பட்ட ஆயி ரத்து 500 முன்னாள் போராளிகளுக்கு

(29ஆம் பக்கம் பார்க்க)

## இன்டர்போலின் பட்டியலில் மீண்டும் கே.பி.!

கொழும்பு,மே28

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாத னின் பெயர் மீண்டும் இன்டர்போல் பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டி யலில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

தேடப்படுவோர் பட்டியலில் கே.பி யின் பெயர் மீண்டும் சேர்த்துக்கொள் ளப்பட்டுள்ளதோடு அவர் தொடர்பான விசாரணைகள் இன்டர்போல் பொலிஸா ரின் உத்தியோகபூர்வ இணையத் தளத் தில் வெளியிடப்பட்டுள்ளன.

அண்மையில் இந்திய தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்ப வத்தை தமிழீழ விடுதலைப் புலிகளே திட்டமிட்டு மேற்கொண்டனர் என்று குமரன் பத்மநாதன் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே இந்தியாவின் நீதி மன்ற தேடப்படுவோர் பட்டியலில் தமி ழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அனைத்துலக உறவுகளுக்குப் பொறுப் பாளரான குமரன் பத்மநாதனின் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்டர்போல் பொலிஸாரும்

(29ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கைதான ஜே.வி.பி. ஆதரவாளர்கள் 7 பேரும் விடுதலை

கொழும்பு,மே 28

கிளிநொச்சி நகரில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது கைதுசெய் யப்பட்ட லலித் குமார் வீரராஜு உள் ளிட்ட ஜே.வி.பியின் ஆதரவாளர்கள் 7 பேரும் நேற்று விடுதலை செய்யப்பட் டனர்.

தமது கட்சி ஆதரவாளர்களை கைது செய்வதனால் அரசமைப்பில் வழங்கப் பட்டுள்ள கருத்துகளை வெளியிடுவ தற்கான உரிமை மீறப்படுகிறது என்று ஜே.வி.பி. விசனம் தெரிவித்துள்ளது.

இவர்களின் கைது குறித்து முன்ன தாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வரு மாறு:-

ஜே.வி.பியின் ஆதரவாளரான லலித் குமார் வீரராஜு உள்ளிட்ட 7 பேர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு கிளிநொச்சி நகரில் வைத்து இராணுவ பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டனர். (29ஆம் பக்கம் பார்க்க)

## வன்னேரிக்குளத்தில் மண்டையோடு மீட்பு

யாழ்ப்பாணம்,மே28

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் ஆனை விழுந்தான் 10ஆம் குறுக்குத் தெருவில் மனித மண்டையோடொன்று நேற்று மு.ப. 11 மணியளவில் மீட்கப்பட்டுள் ளது. குறித்த மண்டையோட்டுக்கு அருகில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் போராளிகளுக்கு வழங்கப்படும் இரண்டு இலக்கத் தகடுகளும் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் 10ஆம் குறுக்குத் தெருவில் அமைந் துள்ள அணைக்கு அண்மித்த பகுதி களில் கண்ணிவெடியகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் போது அணையுடன் அமைந்திருந்த கைவிடப் பட்ட காவலரண் முன்பாக மேற்குறித்த மனித மண்டையோடு மீட்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு நேரடியாக விஜயம்

(29ஆம் பக்கம் பார்க்க)

## 21 வயதுக்கு குறைந்தவர்களுக்கு சிகரெட், மதுபானம் விற்கத் தடை

### யாழ். சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே 28

பொது இடங்களில் புகைப்பிடித்தல், மது அருந்துதல் என்பவற்றைத் தடை செய்தல் மற்றும் 21 வயதுக்கு உட்பட் டவர்களுக்கு புகைபொருள்கள், மது பான வகைகள் விற்பனை செய்யப்படு வதை தடை செய்தல் போன்ற சட்டங் கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப் படும்.

இந்தன் சட்ட திட்டங்களை மீறுபவர் களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.


இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

மே மாதம் 31 ஆம் திகதி சர்வதேச

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்தை மறைத்தார் கம்பீர்: வெடித்தது புதிய சர்ச்சை



தோள்பட்டை காயத்துடன், மும்பைக்கு எதிரான ஐ.பி.எல் ஆட்டத்தில், கம்பீர் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் இருந்து நீக்கப்படுவார் என்று தெரிகின்றது.

ஐ.பி.எலில் கொல்கத்தா அணிக்காக ரூ. 11.04 கோடிக்கு வாங்கப்பட்ட இவர், அணித்தலைவராகச் செயற்பட்டார். இந்த நிலையில், கடந்த 22 ஆம் திகதி மும்பை அணிக்கு எதிரான ஐ.பி.எல் லீக் ஆட்டத்தில், களத்தடுப்பின் போது கம்பீரின் வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. உடனடியாக எம்.ஆர்.ஐ 'ஸ்கேன்' எடுத்து பார்க்கப்பட்டது. இதன் காரணமாக மும்பை அணிக்கு எதிரான 'பிளே ஓப்' போட்டியில் பங்கேற்க மாட்டார் என்றும், மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடருக்குச் செல்லமாட்டார் எனவும் செய்திகள் வெளியாகின.

எதிர்பார்ப்புக்கு மாறாக, மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் கம்பீர் மீண்டும் களமிறங்கினார். இந்த ஆட்டத்தில் பந்தை 'த்ரோ' செய்யும் போதெல்லாம், இவர் வலியால் அவதிப்பட்டார். இப்படி காயத்துடன் கம்பீர் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி யுள்ளது.

### எதையும் மறைக்கவில்லை

இதனிடையே கம்பீரின் காயத்தை, இந்திய கிரிக்கெட் சபையிடம் கொல்கத்தா அணி நிர்வாகம் மறைத்துவிட்டது என்று புகார் எழுந்துள்ளது. இது குறித்து இந்த அணியின் அதிகாரி வெங்கி மைசூர் கூறுகையில்,'உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் கம்பீருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து அவர் எங்களிடம் முன்னதாகவே தெரிவித்தார். அப்போதே 'ஸ்கான்' செய்து, சரியான நேரத்தில் விவரத்தை பி.சி.சி.ஐ க்கு அனுப்பி விட்டோம். தவிர, கொல்கத்தாவில் விளையாடிய போது வலி ஏற்பட்டதால், முன்னெச்சரிக்கையாக 'ஸ்கேன்' செய்து, அதையும் அனுப்பியுள்ளோம். பி.சி.சி.ஐ யிடம் நாங்கள் மறைப்பதற்கு ஒன்றுமில்லை- என்றார்.

### ஓய்வு தேவை

கம்பீரின் காயம் குறித்து கொல்கத்தா அணியின் உடலியக்க நிபுணர் அன்ரூ லெய்பஸ், பி.சி.சி.ஐ செயலர் சீனிவாசனுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இதில் 'உலகக் கிண்ண தொடர் முடிந்து, ஐ.பி.எல் தொடருக்காக கொல்கத்தா வந்த கம்பீர், தோள்பட்டை வலி குறித்து தெரிவித்தார். இந்த காயம் தற்போது அதிகமாகியுள்ளதால் குறைந்தது இவருக்கு 4 முதல் 6 வார கால ஓய்வு தேவைப்படும் - என்றார்.

### புதிய கேப்டன்

கம்பீர் சிக்கல் குறித்து பி.சி.சி.ஐ செயலர் சீனிவாசன் கூறுகையில், கம்பீர் காயம் குறித்து லெய்பஸ் அறிக்கை எங்களுக்கு வந்தது. இதை ஆராய்ந்து வருகின்றோம். ஒருவேளை அவர் உடல் தகுதி பெறவில்லை எனில், மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் இருந்து நீக்கப்படுவார். இவருக்கு பதில் புதிய வீரர் தேர்வு செய்யப்படுவார் - என்றார்.

### தேசத்தைவிட பணம் முக்கியம்

உலகக் கிண்ண தொடரின் போதே காயம் அடைந்த கம்பீர், தேசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஐ.பி.எல் தொடரை புறக்கணித்து இருக்க வேண்டும். போதிய ஓய்வு எடுத்திருந்தால் தற்போதைய மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடரில் இடம்பெற்றிருக்கலாம். ஆனால், காயத்தை மறைத்து பணத்துக்காக ஐ.பி.எல் தொடரில் பங்கேற்றார். இதனால், தேசத்துக்காக விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (15)

## தடைசெய்யப்பட்ட மருந்தைப் பயன்படுத்தினார் கம்பீர்:

தோள்பட்டை காயத்துக்காக கம்பீர் 'கார்டிகோ ஸ்டீராய்டு' ஊசியை போட்டுள்ளார். ஆனால் இதற்கு அவர் அனுமதி பெறவில்லை என்று புகார் எழுந்துள்ளது. கொல்கத்தா அணியின் உடலியக்க நிபுணர் லெய்பஸ் பி.சி.சி.ஐக்கு எழு திய கடிதத்தில், காம்பிர் காயத்துக்காக 'கார்டிகோ ஸ்டீராய்டு' ஊசியைப் பயன்படுத்தியுள்ளார் என்று தெரிவித்துள்ளார். கார்கோ ஸ்டீராய்டு ஊசி, உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பால் தடை செய்யப்பட்ட மருந்துகளில் ஒன்று. எனவே விளையாட்டு வீரர்கள் அதைப் பயன்படுத்துவதற்கு முன்பு தேசிய ஊக்க மருந்து தடுப்பு அமைப்பிடமோ, உலக ஊக்க மருந்து தடுப்பு அமைப்பிடமோ முன் அனுமதி பெற வேண்டும். ஆனால் கம்பீர் அனுமதி பெறவில்லை என்று இப் போது தெரியவந்துள்ளது.

இந்திய விளையாட்டு மருந்துகள் சம்மேளனத்தின் தலைவர் டொக்டர் பி.எஸ்.எம்.சந்திரன் கூறுகையில், ஸ்டீராய்டு ஊசிகள் மிகவும் ஆபத்தானவை என்பதால் அதில் மருத்துவர்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருப்பார்கள். இந்த ஊசிகளால் தற்காலிக நிவாரணம் மட்டுமே கிடைக்கும் என்றார். (15)

# கிளிஸ்டர்ஸ், சானியா அதிர்ச்சித் தோல்வி

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியில் முன்னணி வீராங்கனை கிம் கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். அத்துடன் இந்தியாவின் சானியாவும் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நகரில் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் தொடர் நடக்கின்றது. இதில் இன்று நடந்த பெண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ், நெதர் லாந்தின் அரன்ட்ஸா ரஷ் மோதினர்.


முதல் செட்டை 6-3 என்று கைப்பற்றிய கிளைஸ்டர்ஸ், இரண்டாவது செட்டை 5-7 என்று போராடி கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் மீண்டும் சொதப்பிய கிளை ஸ்டர்ஸ் 1-6 என்று இழந்தார். இறுதி யில் கிளைஸ்டர்ஸ் 6-3, 5-7, 1-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்.

இதேவேளை இரண்டாவது சுற்றில் இந் திய வீராங்கனை சானியா மிர்சா தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் போலந்தின் அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் சானியாவைத் தோற்கடித்தார். இந்த ஆட்டத்தில் அக்னீஸ்கா, சானியாவுக்கு கடுமையான சவால் அளித்தார்.

முதல் செட் முழுவதுமே அபாரமாக ஆடிய அக்னீஸ்கா அந்த செட்டை 6-2 என்ற கணக்கில் எளிதாக வென்றார். பிறகு நடைபெற்ற இரண்டாவது சுற்றிலும் அக்னீஸ்கா 6-4 என்ற கணக்கில் வென்று ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

2009 ஆம் ஆண்டில் இருந்தே சானியா மிர்சா எந்தவொரு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் இரண்டாவது சுற்றுக்கு மேல் முன்னேறியதில்லை. 2005 ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டியில் 4 ஆவது சுற்று வரை முன்னேறியதே அவரின் அதிகபட்ச வெற்றியாகும்.

ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சார்பில் சோம்தேவும், சானியாவும் பங்கேற்றனர். சோம்தேவ் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டார். இப்போது சானியாவும் தோற்றதன் மூலம் இந்தியாவின் ஒற்றையர் பட்டக் கனவு முடிவுக்கு வந்துவிட்டது. (15)



கிம் கிளிஸ்டர்ஸ்



# நட்சத்திரங்களும் கலக்கல்

தமிழ், கன்னடம், இந்தி திரைப்பட நடிகர்கள் பங்கேற்கும் நட்சத்திர கிரிக்கெட் போட்டி பெங்களூரில் ஜூன் மாதம் 4 ஆம் திகதி தொடங்குகின்றது.

இதுகுறித்து சென்னையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் நடிகர் சரத்குமார், முக்கிய நட்சத்திர வீரர் சூர்யா உட்பட போட்டியில் பங்கேற்கும் தமிழ் திரையுலக நட்சத்திரங்கள் பங்கேற்றனர்.இவர்கள் பங்கேற்கும் கிரிக்கெட் அணியின் பெயர் சென்னை ரைனோஸ். இந்த போட்டியில் நடிகர்கள் சரத்குமார், சூர்யா, மாதவன், ஆர்யா, விஷால், பரத், அபாஸ், விஷ்ணு, சாந்தனு, விக்ராந்த், ரமணா, மிர்ச்சி சிவா, ஜித்தன் ரமேஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர். அப்போது இந்த கிரிக்கெட் போட்டிக்கான ரீசேர்ட் மற்றும் லோகோ வெளியிடப்பட்டது.

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய நடிகர் சூர்யா, நிச்சயமாக சென்னை ரைனோஸ் அணி வெற்றி பெறும். அதற்கான பயிற்சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம் என்று உரக்க சத்தம் போட்டு உற்சாகமாக சொன்னார்.

அடுத்து பேசிய சரத்குமார், ஏற்கனவே இந்தி நடிகர்களுக்கும், தென்னிந்திய நடிகர்களுக்கும் நடந்த போட்டியில் தென்னிந்திய நடிகர்கள் வெற்றி பெற்றனர்.

அதேபோல் தென்னிந்திய நடிகர்களுக்குள் நடக்கும் போட்டியில் எங்கள் அணி வெற்றி பெறும்.

4 ஆம் திகதி பெங்களூரிலும், 5 ஆம் திகதி சென்னையில், 11 ஆம் திகதி ஹைத்ராபாத்தில் போட்டி நடைபெறுகிறது. இறுதிப்போட்டி ஹைத்ராபாத்தில் 12 ஆம் திகதி நடைபெறுகின்றது. அந்த இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறுவோம் என்பது உறுதி என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய ஆட்டத்தில் மும்பை தோல்வி

-அருண்மொழி-

கெயில் அதிரடியும், வெற்றோரியின் சுழலும் கைகொடுக்க பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 43 ஓட்டங்களால் மும்பையை வெற்றிகொண்டு இறுதி ஆட்டத்துக்கு சென்னையுடன் மோதத் தகுதி பெற்றது.

இறுதி ஆட்டத்துக்கு நுழைவது யார் ? இந்தக் கேள்விக்கு விடைகாண மோதிக் கொண்டன மும்பை இந்தியன்ஸ் அணியும், பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியும். சென்னையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் சச்சின் முதலில் தமது அணி களத்தடுப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி கெயிலின் அதிரடியுடன் இருபது ஓவர்களில் 185 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய அகர்வால் - கெயில் அணிக்கு சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இவர்கள் இருவரும் இணைந்து முதலாவது விக்கெட்டுக்காக 64 பந்துகளில் 113 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். முதலாவது ஓவரை வீசிய அஹமட் 27 ஓட்டங்களை வாரி வழங்கினார். கெயில் மூன்று பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக இந்த ஓட்டங்களைப் பெற்றார். முதலாவது ஓவரில் தொடங்கிய சரவெடி முதலாவது விக்கெட் வீழும் வரை தொடர்ந்தது. 20 பந்துகளில் 50 ஓட்டங்களை பெங்களூர் பூர்த்தி செய்தது.

கெயிலின் அரைச்சதம் 27 பந்துகளில் பூர்த்தியானது. 54 பந்துகளில் அணியின் சதம் பூர்த்தியானது. 113 ஓட்டங்களை அணி பெற்ற நிலையில் பொலாட்டின் பந்து வீச்சில் அகர்வால் ஆட்டமிழந்து வெளியேறினார். 31 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார். 47 பந்துகளில் 5 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 89 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் முனாப்பட்டேலின் பந்து வீச்சில் கெயில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து வந்த விராட் ஹோக்லி 8 ஓட்டங்களுடனும், பூமேஸ்பாஷ் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினார். 157 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்து பெங்களூர் அணி. டீ வில்லியர்ஸ், திவாரி இருவரும் இணைந்து இறுதியில் 185 ஓட்டங்களைப் பெறுவதற்கு உதவினர் டீ வில்லியர்ஸ் 15 பந்துகளில் 21 ஓட்டங்களையும், திவாரி 8 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத் தனர்.

பந்து வீச்சில் முனாப் பட்டேல் 2 விக்கெட்டுக்களையும், பொலாட், அஹமட் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். அஹமட் 4 ஓவர்கள் பந்து வீசி 56 ஓட்டங்களைக் கொடுத்தே ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். மலிங்க 4 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடு தார்.

186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பிளிசாட் - சச்சின் ஆடுகளம் நுழைந்தனர். ஆரம்பத்திலேயே அதிரடியாக ஆடியது மும்பை. இருந்தும் பெங்களூரின் பந்து வீச்சு தப்பிக்க விடவில்லை இவர்களை. பிளிசாட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். கொல்கத்தாவுடனான ஆட்டத்தில் முன்வரிசையில் களமிறங்கிய றர்பஜன் நேற்றைய ஆட்டத்திலும் முன்வரிசையில் களமிறங்கினாலும் 7 பந்துகளில் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ரோகித் சர்மா 13 ஓட்டங்களுடனும், பிராங்லின் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இறுதியில் இருபது ஓவர்க எட்டு விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை மாத்திரமே மும்பை இந்தியன்ஸ் அணி பெற்றுக்கொண்டது. இதில் சர்ரிஷ் 19 ஓட்டங்களையும், அஹமட் 18 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர். இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 43 ஓட்டங்களால் தோல்வியடைந்து இறுதிக்குள் நுழையும் வாய்ப்பை இழந்தது.

பந்து வீச்சில் பெங்களூர் ச க வெற்யோரி 3 விக்கெட்டுக்களையும், அரவின் யிட் மொஹமட் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாய் கெயில் தேர்வு செய்யபபட்டார்.

# பலமான நிலையில் இலங்கை


பிரசன்ன ஜெயவர்த்தன

தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 47 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை இழந்துள்ளது. முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 400 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதலாம் நாள் ஆட்டம் மழைகாரணமாக தாமதித்தே ஆரம்பமானது. அணித்தலைவர் டில்ஷான் மற்றும் பரவிதான இருவரும் 93 ஓட்டங்களை முதலாவது விக்கெட்டுக்காக இணைப்பாட்டமாகப் பெற்றனர். டில்ஷான் 50 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சுவானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். சஙகக்கார 11 ஓட்டங்களுடனும் மஹேல 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து அணி இக்கட்டான நிலையை ஏற்படுத்தினர். பரணவிதாரன 66 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரெம்லெட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இலங்கை அணி 159 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. பின்னர் ஜோடி சேர்ந்த திலான் சமரவீர, பிரசன்ன ஜெயவர்த்தன இருவரும் சிறப்பாக ஆடி அணியை மீட்டனர். 5 ஆவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்களை இருவரும் தமக்கிடையே பகிர்ந்தனர். 58 ஓட்டங்களுடன் அண்டர்சனின் பந்து வீச்சில் சமரவீர ஆட்டமிழந்து வெளியேறினார். பின்வரிசையில் மஹ்ரூப் 16 ஓட்டங்களையும் திஸ்ஸர பெரேரா, ஹேரத் இருவரும் தலா 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தனர்.

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பிரசன்ன ஜெயவர்த்தன 112 ஓட்டங்களுடன் 9 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்து வெளியேறினார். உதிரிகளாக 30 ஓட்டங்கள் கிடைக்க இறுதியில் இலங்கை சகல விக்கெட்டுக்களையும் இழந்து 400 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் அண்டர்ஸன், சுவான் தலா 3 விக்கெட்டுக்களையும், புரோட் 2 விக்கெட்டுக்களையும், ரெம்லெட் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் ஸ்ரோரஸ் 20 ஓட்டங்களைப் பெற்று லக்மாலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். குக் 24 ஓட்டங்களையும், அண்டர்ஸன் ஒரு ஓட்டத்தினையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர். (15)

# கிண்ணம் யார் கையில்?


கெயில்
சென்னை சூப்ப கிங்ஸ்

சென்னையில் இறுதியாட்டம் இடம்பெறுவது சென்னைக்கு சாதகமானது. இந்த முறை லீக் சுற்றில், இங்கு நடந்த 7 ஆட்டங்களிலும் சென்னைதான் வென்றது. உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு மற்றும் ராசியான சேப்பாக்கம் மைதானம் மீண்டும் அணிக்கு கைகொடுக்கலாம். தவிர, அணித்தலைவர் டோனியின் வியூகம், அஸ்வின் சுழல், ரெய்னா, மோர்கல், முரளி விஜய், ஹஸி ஆகியோரது அதிரடி ஆகியன சென்னை அணிக்கு, உள்ளூரில் கிண்ணத்தை கைப்பற்ற வாய்ப்பாகும்.

இது குறித்து அணியின் முன்னணி வீரர் மைக்கல் ஹசி கூறுகையில், சேப்பாக்கம் ஆடுகளத்தில் ஆரம்பத்தில் அதிரடியாக ஆடலாம். போகப் போக பந்து, துடுப்பு நோக்கி வரும் வேகம் குறைந்து விடும். பந்துக்காக காத்திருந்து துடுப்பெடுத்தாட வேண்டும். இதற்கேற்ப விளையாட கற்றுக் கொண்டதால் தான், உள்ளூரில் சென்னை அணி வலிமையானதாக திகழ்கின்றது. ஆடுகளத்தின் இந்த தன்மையை புரிந்து கொண்டு விளையாட மற்ற அணிகள் சிரமப்பட வேண்டியிருக்கும், என்றார்.

சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறுகையில், அணியின் மத்தியவரிசை பலமாக இருப்பதால் தான் இக்கட்டான நிலையிலும் வெற்றி பெற முடிகின்றது. சுழற்கூட்டணிக்கு அஸ்வின் தலைமை ஏற்கிறார். இவருக்கு பக்கபலமாக ஜகாதி உள்ளார். அல்பின் மோர்கல், பிராவோ, பொலஞ்சர் போன்ற வேகங்கள் இருப்பதால், எத்தகைய சவாலையும் சந்திக்க தயாராக உள்ளோம், என்றார்.

இதேவேளை மற்றைய அணியான பெங்களூர் கெயிலை மாத்திரமே முழுமையாக நம்பியிருக்கின்றது. கெயில் பெங்களூர் அணிக்கு திரும்பியதன் பின்னர் இரண்டு ஆட்டங்களிலேயே பெங்களூர் அணி தோல்வியைத் தழுவியது. அந்த இரண்டு ஆட்டங்களிலும் கெயில் சோபிக்கவில்லை. கெயிலின் விக்கெட் விரைவாக சென்னை அணியினால் வீழ்த்தப்பட்டால் மிகச் சிறந்த வெற்றியிலக்கை நிர்ணயிப்பது கடினமே.

பந்துவீச்சில் சகீர், அரவிண்ட இருவரும் கலக்குகின்றனர். இருப்பினும் சென்னைக்கு எதிரான தகுதி ஆட்டத்தில் இறுதி ஓவர்களில் இருவருமே அதிக ஓட்டங்களை வழங்கியதால் மீண்டும் சென்னைக்கு எதிராக இவர்களின் பந்து வீச்சு சிறப்பாக அமையுமென்று சொல்ல முடியாது.

அத்துடன் இந்த முறை ஐ.பி.எல் தொடரில் இரு அணிகளும் ஏற்கனவே மூன்று முறை மோதியுள்ளன. இதில் சென்னையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னையும், பெங்களூரில் இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூரும், மும்பையில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னையும் வெற்றி பெற்றன. அத்துடன் சென்னை மூன்று தடவைகள் ஐ.பி.எல் இறுதிக்கு நுழைந்துள்ளது. பெங்களூர் இரண்டாவது தடவையாக நுழைகின்றது.

2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற தொடரில் அரையிறுதியில் சென்னையைவீழ்த்தி பெங்களூர் இறுதிக்குத் தகுதி பெற்றது. தகுதி ஆட்டத்தில் தோற்றதற்கு பெங்களூர் பழி தீர்க்குமா? இல்லை சொந்த மண்ணில் மீண்டும் சென்னை தனது பலத்தை நிரூபிக்குமா ?



பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்
பொலிஞ்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மூவர் கைது

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்பைக் கொண்டிருந்த குற்றச்சாட்டில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரிகள் மூவர் கடந்த சில நாள்களுக்கு முன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உட்கட்டமைப்பு களுக்குள் ஊடுருவி பல முக்கியமான புலனாய்வுத் தகவல்களைப் பெற்று இறுதிக்கட்ட யுத்தத்தின் வெற்றிக்குக் கணிசமான அளவில் பங்களிப்பை நல்கிய மூன்று முக்கிய புலனாய்வு அதிகாரிகளே தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவர் இராணுவ பொலிசாரின் பாதுகாப்பிலும், இன்னொருவர் தற்போதைக்கு பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவினரின் தடுப்புக் காவலிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தடுப்பு உத்தரவில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளார்.

அதிலும் இராணுவப் பொலிஸாரின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அதிகாரிகள் இருவருக்கும் தமது உறவினர்களைச் சந்திப்பதற்குக் கூட அனுமதி வழங்கப்படாத நிலையில் கடும் கட்டுக்காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும் கைது செய்யப்பட்டுள்ள விடயம் வெளியில் வந்தால் யுத்த வெற்றியின் இரண்டாம் வருடப் பூர்த்தி தொடர்பான கொண்டாட்டங்கள் தொடர்பில் மக்களின் அதிருப்தி உருவாகிவிடும் என்ற காரணத்தால் இதுவரை அத்தகவல்கள் இரகசியமாக பேணப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள மூவரும் சரத் பொன்சேகாவின் தீவிர ஆதரவாளர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனரே தவிர, அவர்கள் ஒருபோதும் இராணுவத்திற்கு துரோகமாக நடந்து கொண்டவர்கள் இல்லையென்பதாக இராணுவப் புலனாய்வுச் சேவையின் இன்னொரு முக்கிய அதிகாரி தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் என்ற காரணத்தினால் இராணுவ புலனாய்வுச் சேவையின் திறமையான அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டும், பதவி நிலைகளிலிருந்து கீழிறக்கப்பட்டும், அவர்களின் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டும் பழிவாங்கப்படுவது தொடர்கதையாகிப் போயுள்ள நிலையில் தற்போது இராணுவப் புலனாய்வுச் சேவை ஒட்டுமொத்தமாக செயலிழந்து போயுள்ளதாக அறிய முடிகின்றது.

(தமிழ்வின்)(ஐ-10)

# போர்க் கருத்தரங்கை புறக்கணிக்க தென் கொரியாவுக்கும் கோரிக்கை

இலங்கை இராணுவம் நடத்தவுள்ள போர்க்கருத்தரங்கில் தென்கொரியா பங்கேற்கக் கூடாது என்று தென்கொரிய ஊடகம் ஒன்றில் மனிதஉரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜூஓங்அங் டெய்லி என்ற தென்கொரிய ஊடகத்தில் இலங்கையின் மனிதஉரிமை மீறல்கள், போர்க்குற்றங்களைச் சுட்டிக் காட்டியுள்ள பிரட் அடம்ஸ், இலங்கை இராணுவத்தின் போர்க்கருத்தரங்கை ஏனைய நாடுகளுடன் இணைந்து தென்கொரியாவும் புறக்கணிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களை மூடி மறைப்பதற்கு இலங்கை அரசு களம் அமைத்துள்ள இந்தக் கருத்தரங்கில் தென்கொரியா பங்கேற்குமானால் அது பல கேள்விகளை உருவாக்குவதாக அமையும். எனவே, உலக நாடுகள் பலவற்றின் புறக்கணிப்பைப் போன்று தென்கொரியாவும் புறக்கணிக்க வேண்டும்.

அந்த வகையில் அமெரிக்கா, கனடா, பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள், ஜப்பான், அவுஸ் ரேலியா போன்றவற்றுடன் இணைந்து தென்கொரியாவும் புறக்கணிக்க வேண்டும் என் றும் அவர் கோரியுள்ளார்.

தெனிகொரியா இதில் பங்கேற்கவுள்ளதாக கூறியுள்ள நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்றாலும் கூட, போர்க்குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்கு தென்கொரியா அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் பிரட் அடம்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

(புதினப்பலகை)(ஐ-323)

# நடேசனைக் கொல்லும் உத்தரவு தெரிந்த ஊடகவியலாளர் தப்பியோட்டம்

சரணடைய வரும் விடுதலைப் புலிகளின் தலைவர்களை சுட்டுக் கொல்லுமாறு தான் கூறிய விடயம் ஊடகவியலாளர் பிரசன்ன ஊடாகவே சரத் பொன் சேகாவிற்கு தெரியவந்ததை அறிந்து கொண்ட கோதபாய ராஜபக்ஷ பிரசன்னவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததையடுத்து அவர் நாட்டை விட்டு தப்பி தற்போது சுவிட்சர்லாந்தில் தஞ்சம் அடைந்திருக்கிறார். அமெரிக்க தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச்செயலாளர் றொபேட் ஓ பிளேக்கின் உதவியுடன் இவர் நேபாளத்திற்கு சென்றுள்ளார் என்று ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கிருந்து பின்னர் சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் பிரசன்ன. இவருடன் ரூபவாஹினி செய்தி ஆசிரியர் காமினியும் சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். இவ்விருவருக்கும் அரசியல் தஞ்சம் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக அதிர்வு இணையம் அறிகிறது.

பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினரில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர் அமெரிக்க மற்றும் சுவிஸ் அதிகாரிகளுக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவுக்கும் இந்த நாடுகள் ஊடாக சில ஆவணங்கள் உட்பட அறிக்கை ஒன்றையும் வழங்கியிருக்கிறார் என்பது தற்போது தெரியவந்துள்ளது. தற்போது பிரசன்ன என்ற இந்த ஊடகவியலாளர் சுவிஸில் வசித்துவருகிறார்.(அதிர்வு) (ஐ-323)

## தீக்கு இரையான பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 28

குடும்பத்தகராறு காரணமாக தனக்குத் தானே தீ மூட்டிய பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்தார்.

நெடுந்தீவைச் சேர்ந்த திருமதி ஏ.சகாயராணி (வயது 36) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது:

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் அந்தப் பெண் தனக்குத் தானே தீமூட்டியுள்ளார். இதனைத் தடுக்க முயன்ற கணவரும் காயமடைந்தார்.

தீமூட்டியதால் எரி காயங்களுக்குள்ளான நிலையில் நெடுந்தீவு வைத்தியசாலையில் பி.ப. 3.20 மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் இவரது கணவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நைலோன் ஆடை அணிந்திருந்தமையினால் பெரும் தீக்காயங்களுக்குள்ளானார். பின்னர் மாலை 6 மணியளவில் 'அம்புலன்ஸ்' படகு மூலம் அனுப்பப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த பெண் நேற்று மரணமானார். (2-13)

## வீதி விளக்குகளுக்குக் கட்டுப்பாட்டு ஆளிகள்

தென்மராட்சி, மே 28

சாவகச்சேரி நகரசபை எல்லைக் குட்பட்ட ஏ-9 வீதியில் பொருத்தப் பட்டுள்ள வீதி விளக்குகளை ஒரே நேரத்தில் ஒளிர விடுவதற்கான கட்டுப் பாட்டு ஆளிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகளில் ஒளிராமல் உள்ள பல்புகளுக்குப் பதிலாக புதிய பல்புகள் பொருத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)


**ஓராண்டு நினைவில் எங்கள் ஆசான்**



மண்மீது 10.10.1938

விண்மீது 08.06.2010

**அமரர் சுந்தரம் விநாயகமூர்த்தி**

[ஓய்வுபெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி]

கற்றுயர வேண்டும் தவறினும்
நற்பெயரோடு வாழ்ந்திட வேண்டும்
சொற்காத்திட வேண்டும் - ஏதும்
அற்றோர்க்கு உதவிட வேண்டும்
இத்தனையும் வேண்டிய எங்கள் ஆசானே
அத்தனையும் தந்து உங்கள் நினைவு
நாளில்
விழிநீர் சொரிந்து பாதம் பணிகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

1998 ஆம் வருட
க.பொ.த.(சா.த) மாணவர்கள்.

(சி/225)



**கண்ணீர் அஞ்சலி**

யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியர்
திருமதி சி.ஞானசேகரனின் பாசமிகு தாய்



அமரர் சிவகாமிப்பிள்ளை சுந்தரமூர்த்தி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(4619)



**கண்ணீர் அஞ்சலி**

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி சாந்தினிதேவி கருணாகரனின் பாசமிகு தந்தை

**குழந்தைவேலு காசிப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி,சாவகச்சேரி.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்.

(சி/574867)



**TV கள் மலிவு விற்பனை**

புதியமொடல் Sony Wega flat (மேல் பட்டன் AR, HW, BZ, BT) 21" TV கள் 18000/= (முதல்), Q, 13000/= 29- 25000/= (ரேடியோ மொடல்) SZ அம்பிளியர், Box, DVD, RX ரேடியோ சுசற் என்பன மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0771393670, 0778449829 R.S.மகேஸ்வரன் (அம்மன்கோவில்) சிவிரியர் (ஆர்ம்மா சாலை அருகில்) K.K.S வீதி இணுவில்.



**வீடு குத்தகைக்கு**

162/1, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குழியில் 2½ பரப்பு காணியில் அமைந்த 3 அறைகள், 2 மலசல கூடம், தண்ணீர் வசதி, மின்சாரத்துடன் வீடு குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- ஆர்.ஏ.ஜெயராஜ்.

(சி/534) T.P- 011 2854087



**புளிய மரம் விற்பனைக்கு**

வீதி அகலிப்புக் காரணமாக பன்றித் தலைச்சி அம்மன் கோவில் வடக்கு வீதி யில் உள்ள புளிய மரம் விற்பனை செய்யப் படவுள்ளது.

தொடர்புகளுக்கு:
தர்மகர்த்தா 0213735259



**கேன் புற்று நோயாளர் காப்பகம்**

- இந்தக் காப்பகத்தில் தாதி உதவியாளர் பதவிக்கு சேவை மனப்பான்மையும் தகுதியும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதி 15.06.2011.
- விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்
கேன் புற்று நோயாளர் காப்பகம்
இல.5, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

- இந்தப் பதவிக்குத் தகுதி உடைய, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
- விண்ணப்பப் படிவங்களை கேன் நிறுவன காரியாலயத்தில் 30.05.2011 தொடக்கம் 14.06.2011 வரை காலை 9.00-12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
- மேலும் விவரங்களை கேன் நிறுவனத்தில் விண்ணப்ப படிவம் பெறும் பொழுது பெற்றுக் கொள்ளவும்.

இல.5, சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம். (4625)

தலைவர்:
கேன் புற்று நோயாளர் காப்பகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எந்த ஆணைக்குழு வந்தென்ன!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு ஐந்து நீதியரசர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு ஒன்றை அரசு நியமிக்கவுள்ளதாகத் தகவல்கள். இந்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். உயர்நீதிமன்ற மற்றும் மேல் நீதிமன்ற நீதியரசர்கள் இன்னும் நால்வர் நியமிக்கப்படுவர். அவர்களில் இருவர் சிங்களவராகவும் ஒருவர் தமிழர் மற்றவர் முஸ்லிம் என்ற வகையில் அமைவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதத்தில் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்தகையோடு இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் அரசுக்கு அழுத்தங்கள் வந்தன. அவ்வாறு அழுத்தம் கொடுத்துள்ள நாடுகளில் அமெரிக்காவையும் இந்தியாவையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அளிப்பதில்லை என்று இலங்கை அரசு அறிவித்து விட்டது. எனினும் அதில் உள்ளடக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் சில குறித்து தனது கருத்துக்களையும் தெளிவுபடுத்துவதோடு சில தரவுகளையும் வழங்குவதென்று அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் போர் நடைபெற்ற காலத்தில், அரச தரப்பும் அதாவது அரசாங்கப் படைகளும் விடுதலைப் புலிகளும் இழைத்த மனித உரிமைகள் குறித்து மிக விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் உத்தேச ஆணைக் குழுவின் விசாரணைகள் அமையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

உள்ளக இடம்பெயர்வுக்கு உள்ளானவர்களிடம், அவர்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகள் குறித்து உத்தேச ஆணைக்குழு விசாரணைகளை நடத்தும் என்று மட்டுமே சொல்லப்படுகிறது.

புதிய விசாரணைக்குழுவின் நியமங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் நிவாரணங்களும் கிடைக்க வகை செய்யுமா என்பதனையும் இப்போது கணிப்பிட்டுச் சொல்வதற்கில்லை.

உத்தேச விசாரணைக் குழுவால் குற்றவாளியாகக் காணப்படும் படையினருக்குகோ அல்லது பொலிஸாருக்கோ எதிராகக் சட்ட நடவடிக்கை எடுக்க இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுமா என்பதும் இனித்தான் தெரிய வேண்டும்.

வடக்கு, கிழக்கு வாழ் மக்களைப் பொறுத்தவரை இத்தகைய ஆணைக் குழுக்கள், விசாரணைக் குழுக்களால் நிவாரணம் வழங்க இயலாது என்பது இந்த நாட்டின் சாபக்கேடாகும். சன்சோனி ஆணைக்குழு, லயன் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஆகியன தொடக்கம் இந்தச் செப்படி வித்தையையே ஆட்சிக்கு வரும் அரசுகள் தொடர்கின்றன.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதில் எவ்வாறு கடந்த ஆறு தசாப்தங்களாக ஏமாற்று வேலைகளும் ஏய்க்காட்டுதல்களும் தொடர்கின்றனவோ அதேவகை சார்ந்ததாகவே இந்த நாட்டு அரசுகளின் எந்த நடவடிக்கையும் அமையும் என்று நிச்சயமாகக் கூறலாம்.

ஆகப்பிந்தி, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டதைக் குறிப்பிடலாம். 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2009 வரை நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புக்களை விசாரணைகள் மூலம் கண்டறிவதே ஆணைக்குழு உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும்.

ஆனால் அந்தப் பணியைச் செய்வதற்கு வழங்கப்பட்ட கால எல்லைக்குள், அதனைச் செய்யமுடியவில்லை. இப்போது அதன் விசாரணைக் காலம் ஆறுமாத காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

பான் கீ-மூன், ஐ.நா. நிபுணர் குழுவை நியமிப்பதைத் தடுக்கும் நோக்குடனும் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆட்சிக் காலத்தில் நாட்டின் நலனுக்குக் குந்தகமாகச் செயற்பட்டதை வெளிப்படுத்தவுமே நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டதாக விமர்சனங்கள் வெளிவந்தன.

ஐ.நா நிபுணர் குழுவை பான் கீ-மூன் நியமிப்பதை, தலையைக் கீழே வைத்தாயினும் தடுக்க முயன்றும் முடியாமற் போனதும், ஐ.நாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், கையெழுத்துப் போராட்டங்கள் நடத்தியும் நினைத்ததை அரசினால் எய்த முடியாமற்போனதும் அண்மைக்கால அழியாப் பதிவுகள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் சிபார்சுகளின் அடிப்படையில், இங்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தைக் கொண்டு வர முடியும் என்று கூறி அதனை உயர்த்திக் காட்டிய போதிலும்- அமெரிக்கா, இந்தியா உட்பட்ட பல நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன் பின்னரே, ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கைக்குப் பதில் அளிப்பதில்லை என்றும் ஆனால் அதில் உள்ள சில அம்சங்களுக்குப் பதில் அளிக்கப் போவதாகவும் அரசு புதிய நிலைப்பாட்டைக் கையில் எடுத்துள்ளது.

இதேவேளை, தமிழர்களுடன் அரசியல் தீர்வு ஒன்றுக்குத் தீர்வு காண்பதில் தனக்கு உண்மையான அக்கறை உண்டென்று காட்டுவதற்காகப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளது. ஆனால் அதிலும் தாராளமாக இதய சுத்தியுடன் செயற்படுவதாக இல்லை.

இலங்கை அரசுகளின் பரம்பரைத் தந்திரங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக எவரையும் ஏற்க முடியாது; அதனைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் தமிழர்களே என்று கோணங்கித்தனமாகக் கூற ஆரம்பித்துள்ளது!

தமிழர்களின் அரசியல் உரிமைகள், ஏனைய வாழும் உரிமைகளை வழங்குவதில் நேர்மையான விசுவாசமான அக்கறை சிறிதும் இல்லாமல்-

எந்தப் பிரதேசத்தையும் தமிழர்கள் தங்களுக்குரிய தனிப்பிரதேசம், சொந்த மண் என்று உரிமை கொண்டாடாமல் தடுப்பதிலும், அவற்றில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதிலுமே அரசு உள்ளுணர்வுடன் செயற்படுகிறது.

இந்த இலட்சணத்தில், அரசு எந்த ஆணைக்குழுவை நியமித்தாலும் தமிழ் மக்களுக்குரிய நியாயமான உரிமைகள் எதுவும் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதே அழியாக் காட்சியாக விரிகிறது.

# ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் நான்காம் மாடியில் விசாரணையில்

## மாநகர சபைக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் கோமகன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் கொழும்பு நான்காம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவருகிறார். விரைவில் யாழ். சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்படுவார்.

இவ்வாறு யாழ். மாநகரசபை ஆளும் கட்சி உறுப்பினர் விஜயகாந்த் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தின் போது ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் தற்போது எங்கே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்? அவர் ஏன் கைது செய்யப்பட்டார்?

என்ற விடயங்கள் மர்மமாகவே இருக்கின்றன. எனவே கோமகன் தொடர்பாக நடந்த விடயத்தை தெளிவுபடுத்துமாறு முதல்வரிடம் ஆளும் கட்சி உறுப்பினர் எஸ். நிஷாந்தன் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு முதல்வர் பதிலளிப்பதற்கு முன்னர் தனது ஆசனத்திலிருந்து சடுதியாக எழுந்தார் ஆளும் கட்சி உறுப்பினர் விஜயகாந்த்.

எமது உறுப்பினர் கோமகன், எனது ஆருயிர் நண்பன் கோமகன் விடயத்தில் நிஷாந்தன் அக்கறை காட்டுவது ஆடு நனைய ஓநாய் அழுவது போல இருக்கிறது. இருந்தாலும் நான் அவரது கேள்விக்கு பதிலளிக்கிறேன் - என்றார்.

உறுப்பினர் கோமகன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது நான்காம் மாடியில் தடுத்துவைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகிறார். விரைவில் அவர் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்படுவார் - என்றார் விஜயகாந்த்.

எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கன கரத்தினம் எழுந்தார். தடுத்து வைக்கப் பட்டுள்ள ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் மாநகர சபைக் கூட்டங்களுக்குத் தொடர்ச்சியாக மூன்று தடவைகள் சமுக மளிக்கவில்லை.

சமுகமளிக்காமைக்கான காரணத்தையும் அவர் உரிய முறையில் தெரிவிக்கவில்லை. இதனால் உள்ளூராட்சி யாப்பு விதிகளுக்கு அமைய கோமகன் உறுப்புரிமை இழந்து விட்டார்.இந்த நிலையில் பத்து மாதங்களாக அவருக்கு உறுப்பினருக்குரிய சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றமை எந்த விதத்தில் நியாயமானது என்று முதல்வரைப் பார்த்துக் கேட்டார்.

மீண்டும் ஆளும்கட்சி உறுப்பினர் விஜயகாந்த் பதிலளிக்க ஆரம்பித்தார். அப்போது முதல்வர், விஜயகாந்தைப் பார்த்து 'நீர் ஆசனத்தில் அமரும் நான் பதிலளிக்கிறேன்' என்றார். விஜயகாந் இருக்கையில் அமர்ந்ததும் முதல்வர் பதிலளிக்க ஆரம்பித்தார்.

எமது உறுப்பினர் கோமகனுக்குத் தொடர்ச்சியாக உறுப்பினருக்கான சம்பளம் வழங்கப் பட்டு வருகிறது. அதில் ஏதும் தவறு இருப்பின் கணக்காய்வாளர் அதற்கு நடவடிக்கை எடுப்பார்.

உறுப்பினராகிய நீர் அவசரப்படத் தேவையில்லை எனப் பதிலளித்தார் முதல்வர் .

அத்துடன் விந்தன் மீண்டும் கேள்வி கேட்காத வகையில் கூட்டத்தின் அடுத்த விடயத்தில் கவனம் செலுத்தத் தொடங்கினார் முதல்வர். (த-14)

# சிவத்தொண்டன் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 28

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையில் நடத்தப்படும் சிவத் தொண்டன் மாநாடு இன்றும் நாளையும் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் மனிதநேயமாமணி, இந்து சிரோரத்தினம் வி.கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு களில் இந்தியா உட்பட இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சிவத்தொண்டர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டப சுவாமி விபுலானந்தர் அரங்கில் ஆய் வரங்கத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செற்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''இறைபணி நிற்க'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதனும் ''ஹவாய் சைவத்சிந்தாந்த ஆதினத்தின் முன் மாதிரி ஓர் அறிமுகம்'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி முரளிதரனும், ''சமகால ஆல யங்களில் சமய சமூகத் தொண்டு ஒரு நோக்கு' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி என்.கிருஷ்ண வேணியும் ஆய்வுரை நிகழ்த்துவர்.

''ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் 63 நாயன்மார்களும் பெரிய புராணக் கண்ணோட்டத்தில்'' எனும் தலைப்பில், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்ரவரநாதபிள்ளை குமரனும் ''யாழ்ப்பாணத்தில் சிவத் தொண்டு'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் ந.ஜெயக்குமாரும், ''நாயன்மார் பாடல் களில் பரோபகார சிந்தனை ஒரு சமூக வியல் பார்வை'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் சு.ராஜேஸ்கண்ணனும், ''இந்தியாவில் தொண்டாற்றிய ஈழத்து அறிஞர்கள்'' எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரித்துறை, முதுநிலைமாணி ப.கணேசலிங்கமும் ஆய்வுரை நிகழ்த் துவர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணிக்கு கிழக்குப்பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் ம.கைலாச நாதசர்மா தலை மையில் "சீரார்த்த தீபிகை" நூல்வெளியீடு இடம்பெறும்.

இதில் சிறப்புரையை இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் நிகழ்த்துவார். மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டப ஞானவித்தகர் வினாவித் தம்பி அரங்கில் பேரரங்கு இடம்.

அகில இலங்கை இந்து மாமன்றம் பொதுச் செயலாளர் கந்தையா நீல கண் டன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்வும் இடம்பெறும். (ம-313)

# விவசாய ஆராய்ச்சி உதவியாளர் நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 28

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டக் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சை நாளை மறு தினம் திங்கட்கிழமை தொடக்கம் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்டக் காரியாலயத்தில் நடைபெறுவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டுள்ளதாகவும், நேர்முகத் தேர்வுக்குரிய புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயப் பணியில் மட்டுமன்றி சமூகப் பணியுமாற்றியவர்

# குமாரசாமி சாந்தலிங்கம்



ஒருவனது வாழ்வியல் செயற்பாடுகள் எந்தளவுக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அவனது மரணத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம் என்பார்கள். அந்த வகையில் அமரர் குமாரசாமி சாந்தலிங்கம் அவர்களின் மரணமும் எமக்கு ஒரு நற்செய்தியை உணர்த்திச் சென்றிருக்கின்றது. அவருடைய வாழ்வு குடும்பப் பணியிலும், சமூக சமயப்பணியிலும் அறப்பணியிலும், ஆன்மீகப்பணியிலும், அரசியல் பணியிலும் எல்லாவற்றிற்கும் மேலாக தான் வகித்து வந்த ஆசிரியப் பணியிலும் ஆழமான வரலாற்றுத் தடத்தைப் பதித்துச் சென்றுள்ளது என்றால் அது முற்றிலும் பொருந்தும்.

## நீத்தார் நயப்புரை

வணக்கத்திற்கும், மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய இடம் ஆலயம் மட்டுமல்ல, தொழில் செய்யும் இடங்களுமே என்ற வாக்கியத்துக்கு இலக்கணம் வகுத்து, அதனைத் தன் வாழ்வில் யதார்த்தமாக்கிச் சென்றவர் அமரர் அவர்கள். தான் கடமையாற்றிய இடங்களில் எல்லாம் அர்பணிப்புடன் கூடிய தூய சேவையின் மூலம், ஆழமாகத் தடம் பதித்தவர். அவர் தன் தொழிலை நேசித்தார். அதற்கமையத் தொழிலும் அவரை நேசித்தது. ,இதனால் நிறைவான ஒரு ஆசிரியப் பணியை அவரால் செய்ய முடிந்தது. நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றினாலும் குறிப்பாக நயினை ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தின் ஆசிரியக் காலம் மிகவும் பெறுமதியானது. கணேசாவின் அதிபர்களில் அவர் ஒரு தனித்தன்மை வாய்ந்த அதிபராக நீண்ட காலம் சேவையாற்றி கணேசாவின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் கனதியான பங்களிப்பை நல்கியவர். கணேச வித்தியாலய சமூகத்தினர், ''கணேசநாதம்'' என்ற கௌரவபட்டத்தை தேகாந்திர நிலையில் அவருக்கு வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

அன்னதானம் என்னும் அறப்பணியாற்றி இன்று சர்வதேச ரீதியில் அறியப்பட்டு, இலட்சக்கணக்கான அன்பர்களின் மனதில் நிறைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் நீண்ட கால செயலாளராக இருந்து அதனைத் தூய வழியில், வழிநடத்தி நிறைவான சேவையை வழங்கியவர். அமரத்துவமாகும் வரை அந்த அறப்பணியை அர்பணிப்புடனும் துணிச்சலுடனும் வளர்த்துச் சென்ற அவரின் ஆளுமையை அமுதசுரபி தன் வரலாற்றில் ஒரு ஏடாகப் பதித்துச் செல்லும். நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய அறங்காவலர் சபையின் செயலாளராகக் கடமையாற்றி மிகவும் இக்கட்டான காலங்களில் எல்லாம் அதனை வழி நடத்தி ஆலயத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர். பெருங்குளம் ஸ்ரீ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபையின் தலைவராக நீண்ட காலம் அதவாது இறைபதம் எய்தும் வரை பணியாற்றி மீனாட்சியம்மன் ஆலயத்தை வளர்த்தெடுப்பதில் அதீத அக்கறைகாட்டி வளர்ச்சிக்கு சக்தியாக இருந்தவர் அமரர் அவர்கள்.

கணேசா சனசமூக நிலையம், கணேசா முன்பள்ளி , நயினாதீவு தெற்கு இந்து இளைஞர் மன்றம், கிராமமுன்னேற்றச் சங்கம் போன்ற சமய சமூக நிறுவனங்களில் மதிப்பார்ந்த போசகராக இருந்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி அவற்றை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற பெருந்தகை அமரர் அவர்கள்.

நயினை நா.யோகநாதன்.

# அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழி வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே 28

முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் அரச ஊழியர்களுக்குச் சிங்கள மட்டம் III, II வகுப்புகளை நடத்தவுள்ளது.

இந்த வகுப்புகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று சனிக்கிழமை நாவலர் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் செங்குந்தா இந்துக்கல்லூரியில் பிற்பகல் 2 மணிக்கும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கும் மானிப்பாய் பிரதேச சபையில் பிற்பகல் 4 மணிக்கும் மேற்படி வகுப்புகள் இன்று நடைபெறவுள்ளன.

நாளை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபையிலும் பிற்பகல் 3மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி நகர சபையிலும் வகுப்புகள் இடம்பெறவுள்ளன.

வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் அரச ஊழியர்களை குறிப்பிட்ட தினங்களில் குறித்த நேரங்களுக்கு தமக்கு வசதியான இடத்தைத் தெரிவு செய்து அந்த இடங்களுக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு வகுப்பிலும் ஆகக்கூடுதலாக 40 பேர் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேலதிகமாக வருபவர்கள் வேறொரு இடத்தில் நடைபெறும் வகுப்புகளுக்கே அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே குறிப்பிட்ட தினத்தில் குறித்த நேரத்துக்கு சமுகமளிப்பதன் மூலம் தாம் விரும்பும் வகுப்புகளில் கலந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மே.28

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 870 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "S" என்ற ஆங்கில எழுத்தும் 13/17/30/46 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 5 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சூப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்துலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 03 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 300 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,183 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 198,017 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 29,420 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

# போட்டிப் பரீட்சை

அச்சுவேலி, மே 28

வடக்கு மாகாண பொதுச் சேவையின் மண் பரிசோதகர் பயிலுநர் தரத்துக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவால் நடத்தப்படும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் புத்தூர் 10 ஆம் கட்டையில் உள்ள பொதுச்சேவை ஆணைக் குழுவின் அலுவலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள லாம் என்று வடக்கு மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.திவாகரன் அறிவித்துள்ளார். (ம-11)




## ஜயோதா
### உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 753 திகதி 26-05-2011

வெற்றி எண்கள்

04 05 23 52 U (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 12,495,530/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,495,530/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 06 | 50,000/= | 300,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 297 | 1,000/= | 297,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 471 | 1,000/= | 471,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 13002 | 60/= | 780,120/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6763 | 40/= | 270,520/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 169465 | 20/= | 3,389,300/= |
| ஆங்கில எழுத்து | 24632 | 20/= | 492,640/= |
| | | மொத்தம் ரூ. 6,800,580/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 மிதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 700081000-9-39 |
| பதுளை | 700086327-6-06 |
| யாழ்ப்பாணம் | 700083403-5-45 |
| நுவரேலியா | 700087823-9-19 |
| அம்பாந்தோட்டை | 700082082-7-27 |
| மொனராகலை | 700084558-2-42 |
| புத்தளம் | 700084667-7-27 |
| மாத்தறை | 700081203-8-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,200,580/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 12,827,290/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மே 30 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY



**நாய்க் குட்டி விற்பனை**

நல்ல இனம் Boxe 45 நாள் நிரம்பிய நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-021 223 0024, 0778694028

**கார் விற்பனைக்குண்டு**

நல்ல நிலையிலுள்ள TOYOTA CORSA, 300- xxxx இலக்கமும் 1300ccயும் கொண்ட கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777635926 (4624)

**வாடகைக்குண்டு**

ஊரெழு அம்மன் கோயிலுக்கும், உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கும் இடையில் அமைந்துள்ள கடைக் கட்டடத்தில் 4 கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 0779199823


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 27 * 06 * 1946



விண்ணில் 08 * 06 * 2010

### அமரர் செல்வரட்ணம் சண்முகநாதன்

திதி: ஏகாதசி

ஞாலத்தில் நம் வாழ்வு காணப்பொறுக்காதோர்
ஜாலத்தால் நாமும் பிரிக்கப்பட்டோம்
வாழ்வு பறிக்கப்பட்டோம் தனிமைப்படுத்தப்பட்டோம்
உள்ளம் சிதைந்து உருக்குலைந்து போனதையா
விதியை நொந்து நொந்து உங்கள் காலடிக்கு வருகின்ற
காலம் வரும்வரைக்கும் உங்கள் நினைவுடன்
எங்கள் விழி நீர்சுமக்கும்.

மணல்தறை லேன்,
திருநெல்வேலி. (4612)(21-23) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ 16 . 08 . 1986



கண் நெகிழ 29 . 04 . 2011

### அமரர் அன்ரனி ரகுநாதன் பிரபாஜினி

அறிவின் சிகரமாய் அன்பின் இருப்பிடமாய்
இருந்த எம் செல்வம்
நீங்காத துயரிலே எம்மை இருத்தி விட்டு
எங்கேயம்மா சென்றாய்?
எத்தனையோ கற்பனைகள்- உன் மனதில்
எல்லாம் கானல் நீராகி விட்டதம்மா
எந்நாளும் உன்நினைவுகளுடன் நாம்.

மீசாலை வடக்கு, மீசாலை. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விளக்குகளால் மின்சார சபைக்கு ரூ.267 கோடி நட்டம் என தெரிவிப்பு

கொழும்பு, மே 28

வீதி விளக்குகளின் இயக்கம் சரியாக நிர்வகிக்கப்படாத காரணத்தால் இலங்கை மின்சார சபைக்கு வருடாந்தம் சுமார் 267 கோடி ரூபா நட்டமேற்படுவதாக இலங்கை மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

பகல் முழுவதும் வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதாலேயே இந்த நட்டம் ஏற்படுகின்றது. அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பகல் நேரங்களில் எரிந்து கொண்டிருக்கும் வீதி விளக்குகள் பற்றிய தகவல்களை 1987 மற்றும் 1910 என்ற தொலைபேசி அழைப்புகள் மூலம் சபைக்குத் தெரிவிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் ஒளிர வைக்கப்படும் வீதி விளக்குகள் காலையில் அணைக்கப்படாமல் தொடர்ந்தும் எரிந்துகொண்டிருப்பதாக நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைத்து வருகின்றன.

மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்பட்டு வரும் இந்த மின் விளக்குகளை உரிய நேரத்தில் ஒளிரவிடவும் அணைக்கவும் ஊழியர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை. இது தேசியப் பொருளாதாரத்துக்குப் பாதகமாக அமைகின்றது.

மின் கட்டணங்கள் உரிய காலத்தில் செலுத்தப்படாவிட்டால் வீடுகள், தனியார், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மின் இணைப்புகளைத் துண்டிக்கும் மின்சார சபை பகல் நேரங்களில் ஒளிரும் வீதிவிளக்குகள் பற்றி அசமந்தப் போக்காக இருப்பது பெரும் தவறு என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த முறைகேட்டை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (ச-5)

# காய்ச்சல் குணங்குறிகளுடன் 100 சிப்பாய்கள் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, மே 28

காய்ச்சல் குணங்குறிகளுடன் 100 இராணுவச் சிப்பாய்கள் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 15 பேருக்கு டெங்குக் காய்ச்சல் பீடித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகர சபையின் பிரதம பொதுசன சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சிப்பாய்கள் பொல்ஹேன் கொட, மருதானை, டிரிப்போலி, புரூட்ஹவுஸ், மோதரை ரொக்ஹவுஸ் ஆகிய முகாம்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலைக் கட்டத்திலும் வைத்தியசாலை வளவிலும் டெங்கு குடம்பிகள் நிறைந்துள்ள பல இடங்கள் இனம் காணப்படுள்ளன.

வைத்தியசாலை வளவில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் கட்டடத்திலும் அலங்காரத்துக்கென வைக்கப்பட்டுள்ள பனை மரங்களின் இடுக்குகளிலும் வைத்தியசாலைக் கட்டடங்களின் சில மாடிகளிலும் டெங்கு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுபற்றி வைத்தியசாலை வட்டாரத்துக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அத்தகைய இடங்களைத்துப்புரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

# புற்றுநோயாளருக்கு வழங்கவென அமெரிக்காவிலிருந்து சத்துமா

யாழ்ப்பாணம், மே 28

யாழ். போதனா வைத்தியசாலையில் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கு வழங்கவென அமெரிக்காவிலிருந்து எடுத்துவரப்பட்ட ஒரு தொகுதி சத்துமா வைத்தியசாலையின் புற்று நோயாளர் விடுதிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தச் சத்துமா வழங்கும் நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர் விடுதியில் நேற்று இடம் பெற்றது.

புற்றுநோயார்களுக்கு மேலதிக சக்தியை வழங்குவதற்காகவும் இந்த சத்துமா வழங்கப்படுகிறது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் யாழ். மாவட்ட லயன்ஸ் கழக புற்றுநோய் நிதியத்தின் ஊடாக எடுத்துவரப்பட்டு வைத்தியசாலைப் புற்றுநோயாளர் விடுதிக்கு வழங்கப்பட்டது.

417 கிராம் கொண்ட சத்துமா ஒன்றின் விலை 6 ஆயிரத்து 500 ரூபாவாகும். 462 சத்துமா பொதிகள் இவ்வாறு நேற்று வழங்கப்பட்டன.

இந்தச் சத்துமா வழங்கும் நிகழ்வில் லயன்ஸ் கழக கொழும்பு கந்தானைப் பிரிவுத் தலைவர் சரத் ஆன் குணசேகர, அதன் உறுப்பினர் சாந்தி ஜோசப், புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமார், யாழ். மாவட்ட புற்றுநோய் நிதிய தலைவர் வைத்தியர் எஸ். சதாசிவம், செயலாளர் ஸ்ரீவன் லெனாட், பொருளாளர் ரி.சற்குணராஜா, வைத்தியர் ரி. சுசிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-4)



சர்வதேச லயன்ஸ் கழக அனுசரணையில் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழக புற்றுநோய் நிதியம் ஊடாக, யாழ் போதனா வைத்தியசாலையின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி சத்துமா இலவசமாக வழங்கப்பட்டது. லயன்ஸ் கழக கொழும்பு, கந்தானைப் பிரிவுத் தலைவர் சரத் ஆன்குணசேகர புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரிடம் சத்து மாவைக் கையளிப்பதைக் காணலாம்.

# துர்நாற்றம் வீசும் கழிவுகளை வீதியில் கொட்டியவருக்கு அபராதம்

நெல்லியடி, மே 28

துர்நாற்றம் வீசும் கழிவுகளை வல்வெட்டித்துறை சிவன் கோயில் பகுதியில் கொட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வல்வெட்டித் துறைச் சுகாதாரப் பிரிவினர், ஒருவர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை நீதிவான் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்த போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை, உடுப்பிட்டி வீதியில் துர்நாற்றம் வீசும் கழிவுப் பொருள்களை கொட்டிய மற்றுமொரு நபருக்கும் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-319)

# சிறைச்சாலைகளில் நிர்மாணப் பணிகள்; கைதிகளின் சேவையைப்பெற அறிவுறுத்து

கொழும்பு, மே 28

சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணப் பணிகளில் அங்குள்ள கைதிகளின் சேவையையும் பெற்றுக் கொள்ளுமாறு சிறைச்சாலை புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாண அமைச்சர் சந்திர சிறி கஜதீர அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கைதிகளின் பங்களிப்பின் மூலம் அவர்கள் கட்டட நிர்மாணத்துறையில் அனுபவத்தைப் பெறவும், விடுதலையான பின் அந்தத் தொழிலில் ஈடுபடவும் இந்த நடைமுறை பயன்படும். தற்போது நடைபெற்று வரும் நிர்மாணப் பணிகளுக்காக அமைச்சு செலவழிக்கும் பணம் கணிசமாக மிச்சப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு சரியான பயிற்சியை வழங்க ஜைக்கா நிறுவனத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

சிறைக் கைதிகளால் தயாரிக்கப்படும் தும்புப் பொருள்களுக்கு ஜப்பான் நாடு ஏற்கனவே கொள்வனவுக் கட்டளைகளை அனுப்பியுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ச-5)

# கட்டாக்காலி நாய்களைப் பேண திறந்தவெளி பராமரிப்பு நிலையங்கள்

## நாடு முழுவதும் அமைக்க ஏற்பாடு

கொழும்பு, மே 28

கட்டாக்காலி நாய்களைப் பேணிக் காப்பது தொடர்பாக நாடு முழுவதும் திறந்த வெளி நாய் பராமரிப்பு நிலையங்களை நிறுவ சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

நாய்களின் பெருக்கம் 2.5 லட்சங்கள் வரையில் அதிகரித்துள்ளமை பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அதற்கு மாற்றீடாகவே கட்டாக்காலி நாய்கள் தொடர்பாக இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைய நாய்களுக்கான முதலாவது பராமரிப்பு நிலையம் அனுராத புரத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

வடமத்திய மாகாணத்தில் கட்டாக் காலிகளாகத் திரியும் அனைத்து நாய்களும் இந்த நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு பராமரிக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாகாணங்களிலும் இவ்விதம் கட்டாக்காலி நாய்களைப் பராமரிக்கும் நிலையங்களை நிறுவுமாறு நீர் வெறுப்பு நோய்த் தடுப்புத் திட்ட அதிகாரிகளுக்கு சுகாதார அமைச்சர் பணிப்புரைகளை விடுத்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறக்கும் வரை நாய்களைப் பராமரிப்பது மற்றும் நாய்க்கடிகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பது இந்தத் திட்டத்தின் குறிக்கோள் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-22)

# இலங்கையின் புலனாய்வாளர்களால் கண்காணிக்கப்படுகிறார் எஸ்.பி!

கொழும்பு, மே 28

இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களில் ஒருவரான எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் இருந்து வருகிறார் என்று தெரிகிறது. இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 'எல்லாளன்' திரைப்படத்துக்காகப் பாடி இருக்கிறார்.

கரும்புலிகளால் அனுராதபுரம் விமானத்தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலைச் சித்திரிக்கும் முழு நீள திரைப்படம் 'எல்லாளன்'.

படத்தின் எழுத்தோட்டத்தில் பாடியவர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் என்று இவரின் பெயரும் குறிப்பிட்டுள்ளது. படத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பாடல் வரிகளை இவர் பாடியுள்ளார். (ம-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மெகா வாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே 'நொதேர்ன் பவர்' இப்போது தருகிறது

## இதனாலேயே மின்தடை என்கிறார் பொறியியலாளர்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். குடாநாட்டுக்கு மின்சார விநியோகத்தை வழங்கி வரும் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கியில் பழுது ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த நிறுவனம் தான் ஒப்பந்தம் செய்த 30 மெகாவாட்ஸ் மின்சாரத்துக்குப் பதிலாக 12 மெகாவாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே தற்போது வழங்கி வருகிறது. இதனாலேயே கடந்த 25 ஆம் திகதி முதல் அடிக்கடி மின்வெட்டு அமுல் படுத்தப்படுகின்றது என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த மூன்று தினங்களாக யாழ். மாவட்டத்தில் சீரற்ற மின்விநியோகம் இடம்பெற்று வருகின்றது. இரவு, பகல் என்ற வேறுபாடின்றி மின்வெட்டு பல பகுதிகளிலும் அடிக்கடி இடைவிடாது அமுல்படுத்தபடுகிறது.

அது மட்டுமன்றி அடிக்கடி மின் விநியோகம் தடைப்படுவதும் பின்னர் சில நிமிடங்கள் கழிந்து மீண்டும் வருவதுமாக சீரற்ற நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக மின்சார உபகரணங்களும் செயலிழந்துள்ளதாகப் பாதிக்கப்பட்ட சிலர் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் வழமையான செயற்பாடுகளும் இந்த மின்வெட்டினால் பாதிப்படைந்துள்ளன. இதனால் தமது தேவைகளை நிறைவேற்றிச் செல்லும் பொது மக்களும் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக மின் பொறியியலாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'நொதேர்ன் பவர்' நிறுவனம் இலங்கை மின்சார சபைக்கு 30 மெகாவாட்ஸ் மின்சாரத்தை வழங்குவதாக ஆரம்பத்தில் ஒப்பந்தம் செய்திருந்தது. அதனையே வழங்கி வந்தது. எனினும் கடந்த 25 ஆம் திகதி 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கி ஒன்றில் பழுது ஏற்பட்டு அது செயலிழந்துள்ளது. 12 மெகாவாட்ஸ் மின்சாரத்தை மட்டுமே நிறுவனம் இப்போது வழங்கி வருகிறது.

இதன் காரணமாக மாவட்டத்தின் சில பகுதிகளில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அடிக்கடி சிறிது நேரம் மின் தடையும் ஏற்படுகின்றது. இன்றுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என நம்புகிறேன் - என்றார். (த-14)

# சன சமூக நிலையத்தை இயக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 28

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் கடந்த சில மாதங்களாக மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இந்தச் சனசமூக நிலையம் மூடப்பட்டுள்ளமையால் அந்தப் பகுதி வாசகர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேறு சனசமூக நிலையங்களும் தூரத்தில்உள்ளமையால் பத்திரிகைகளைப் பார்ப்பதற்காக வாசகர்கள் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த சனசமூக நிலையத்தை விரைவில் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

# பிணையில் விடுதலையானவர்கள் அனுமதியின்றி வெளிநாட்டுக்கு

## பிணையாளரின் பணம் பறிமுதல்

தென்மராட்சி, மே 28

வழக்கின் சந்தேக நபர்கள் இருவர் நீதிமன்றின் அனுமதியின்றி வெளிநாட்டுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டதால் அந்த இருவரும் நீதிமன்றினால் பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன் இருவருக்கும் பிணையொப்பமிட்டவர்களின் பிணைத் தொகையான தலா 25 ஆயிரம் ரூபாவினை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

கடந்த 2010 ஓகஸ்ட் 14 ஆம் திகதி கைதடி மேற்குப் பகுதியில் கைதடி தெற்கைச் சேர்ந்த செல்லையா சிவசுப்பிரமணியம் என்பவரை பொல்லுகளாலும் கற்களாலும் தாக்கி காயப்படுத்தியதாக இப் பகுதியைச் சேர்ந்த 15 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரனை நடைபெற்று வருகிறது. இந்த 15 பேரும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்கின் ஆறாம், பன்னிரண்டாம் சந்தேக நபர்கள் நீதிமன்றில் சமுகமளிக்காததால் இவர்களுக்குப் பிணையாளராக ஒப்பமிட்ட இருவரும் நீதி வான் முன்னிலையில் தோன்றி மேற்குறித்த சந்தேக நபர்கள் வெளிநாட்டுக்குச் சென்று விட்டதாகத் தெரிவித்தனர்.

வழக்கு முடிவுற முன்னர் நீதிமன்றின் அனுமதியின்றி வெளி நாடு செல்லக்கூடாது என்ற விதி முறை உள்ள போதிலும் அதனை மீறி வெளிநாடு சென்றமை நீதிமன்றினை அவமதிக்கும் செயலாகக் கருதி இருவருக்கும் பகிரங்க பிடியாணை பிறப்பித்ததுடன் சந்தேக நபர்களின் பிணையாளர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான் இருவரும் பிணையாக செலுத்திய தொகையினை (தலா 25 ஆயிரம் ரூபா) பறிமுதல் செய்து அரசுடமையாக்குமாறு உத்தரவிட்டார். (த-207)

# மக்கள் நலனுக்காக...



*நல்ல முயற்சி: உலக தரிசன நிறுவனமும் வலி. மேற்கு பிரதேச சபையும் இணைந்து அராலி உப அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் நீர்த்தாங்கி ஒன்றை அமைத்துக் குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின் ஆரம்ப வைபவம் அண்மையில் இடம்பெற்றது.*
*இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் ஆகியோர் மங்கல விளக்கேற்றித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்றனர்.* (த-302)

# வலி. வடக்கின் அபிவிருத்திக்கு 90 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்குகிறது

யாழ்ப்பாணம், மே 28

வலி. வடக்கில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 90 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்த தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி. வடக்கில் இதுவரை 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 90 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது.

இதில் 60 வீதமான நிதி உட்கட்டுமான அபிவிருத்திக்கும், 30 வீதமான நிதி வாழ்வாதார தேவைகளுக்கும், மிகுதி 10 வீதமான நிதி சன சமூக, சமூக அபிவிருத்தி சங்கங்களின் அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படவுள்ளன.

முதற்கட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு 12 மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டு ஏனைய நிதி கட்டம் கட்டமாக அபிவிருத்திகளின் அடைவு மட்டங்களின் அடிப்படையில் வழங்கப் படவுள்ளது - என்றார். (த-9)

# நெல்லியடி ம.விக்கு தேசிய விருது

நெல்லியடி, மே 28

இலங்கைச் சாரணர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய சாரணர் அணிகள் தெரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி தேசிய ரீதியில் முதலிடம் வென்றுள்ளது.

'வளர்ந்துவரும் சாரணர் சமூகம்' என்னும் தொனிப் பொருளில் பாடசாலை ஆண், பெண் சாரணர் அமைப்புகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் பற்றிய தேசிய மதிப்பீட்டின் அடிப்படையிலேயே நெல்லியடி மத்திய மகாவித்தியாலய சாரணர் அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதற்கான விருது வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாரணர் தலைமைச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த விருதை வழங்கிக் கௌரவிப்பார். (த-311)

# 240 போத்தல் சாராயத்துடன் சுன்னாகத்தில் பிடிபட்டது வாகனம்

## இருவருக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா அபராதம்

வலி.வடக்கு, மே 28

அனுமதிமதிப்பத்திரம் இன்றி சாராயம் கொண்டுசென்ற இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் ஒரு லட்சத்தி எழுபதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பிரதான வீதியில் பயணித்த வாகனம் ஒன்றை பொலிஸார் மறித்துச் சோதனையிட்டனர்.

இதன்போது குறிப்பிட்ட வாகனத்தில் 240 போத்தல் சாராயம் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

வாகனத்தையும், சாராயப் போத்தல்களையும் உடன் கைப்பற்றிய பொலிஸார் இவற்றைக் கொண்டுசென்றவர்களை மல்லாகம் மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். சந்தேக நபர்கள் இருவரும் தமது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இருவருக்கும் தலா 85 ஆயிரம் ரூபா



அபராதமாக விதிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையைச் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார, பொலிஸ் பரிசோதகர் பிரதீப் நிசாந்தகுமார, பொலிஸ் சார்ஜண்டுகளான குலசூரியா, தம்மிட்ட மற்றும் பொலிஸ் அலுவலர்களான குமார, அபய[illegible] ஆகியோர் இணைந்து மேற்கொண்டனர். (த-26)

# கைதடி முதியோர் இல்ல அபிவிருத்தி குழுவுக்குப் புதியவர்கள்

நாவற்குழி, மே 28

கைதடி அரச முதியோர் இல்லத்தின் அபிவிருத்திக் குழுவுக்கு புதியவர்கள் இணைக்கப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக நன்மதிப்புப் பெற்ற சமூகப் பெரியார்கள் இதற்குத் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

இவர்களைத் தெரிவு செய்து தருமாறு யாழ். மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி ஆ.ஞானவேல் பிரதேச செயலர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (த-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் வணிகமாணி கற்கைக்கு அனுமதி

## மானியங்கள் ஆணைக்குழு வழங்கியது

நெல்லியடி, மே 28

யாழ்.பல்கலைக்கழகத்தின் வணிகமாணிக் கற்றை நெறி மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழத்தில் கடந்த இரண்டு வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந் தக் கற்கைநெறியைத் தொடர முடியாமல் யாழ்ப்பாண மாணவர் கள் பல்வேறு பிரச்சினைக ளுக்கு முகம்கொடுத்து வந்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தக் கற்கை நெறியை யாழ்.பல்கலைக் கழகத்தில் தொடரமுடியாதபடி யால் வேறு பல்கலைக்கழகங் களில் அதனைத் தொடரவேண் டிய நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக உரிய தரப்புகளின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டது.

இதனையடுத்து இந்தக் கற்கை நெறியை மீண்டும் யாழ்.பல் கலைக் கழகத்தில் ஆரம்பிப் பதற்கான அனுமதியை பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இப்போது வழங் கியுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பல் கலைக்கழக வணிக முகாமைத் துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

இந்தக் கற்கை நெறியை யாழ்.பல்கலைக்கழகத்தில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இதுதொடர்பான உத்தி யோக பூர்வக் கடிதம் விரைவில் கிடைக்கும். அதன் பின் கற்றை நெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (த-319)

# சாரதிக்குப் பொலிஸ் விசாரணை அதுவரை காத்திருந்த பயணிகள்

தென்மராட்சி, மே 28

பயணிகளுடன் சென்ற வாக னத்தைப் பொலிஸார் தடுத்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றதால் அதில் பயணித்த அரச உத்தியோகத் தர்கள் உட்பட்ட பயணிகள் பொலிஸ் நிலையத்தில் காத் திருந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு சென்று கொண்டி ருந்த பேருந்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக பொலிஸார் நிறுத்தி நுணாவி லில் உள்ள பொலிஸ் நிலையத் துக்குக் கொண்டு செல்லுமாறு பணித்தனர்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பேருந்தின் சாரதி விசார ணைக்காக அழைத்துச் செல்லப் பட்டார். இந்தப் பேருந்தில் பயணித்த கொடிகாமம், பளை கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் உள்ள அரச திணைக்களங்களில் பணிபுரி வோர் சாரதியின் விசாரணை முடிவடையும் வரை காத்திருந்து சாரதியை விடுவித்த பின்னர் பயணத்தைத் தொடர்ந்து 12 மணிக்குப் பிறகு அலுவலகத் துக்குப் போய்ச் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிரே பொலிஸ் வாகனம் வந்ததைக் கவனிக்காமல் மற் றொரு வாகனத்தை முந்திச் சென்றமைக்காகவே சாரதியை விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட் டது. (த-207)

# இராச வீதி மோசமாகச் சேதம்

யாழ்ப்பாணம், மே 28

குடாநாட்டில் தற்போது போக்குவரத்து அதிகரித்துக் காணப்படும் இராச வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள் ளது. இதனால் இந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

கடந்த டிசெம்பர் மாதத்தில் பெய்த மழையால் இந்த வீதி கடுமையாகச் சேதமடைந்தது.

வீதியில் காணப்படும் பெரிய குழிகளால் போக்குவரத்துச் செய்யும் மக்களும் மற்றும் வாகனங்களும் அவற்றில் விழுந்தெழும்பியே பயணம் செய்ய வேண்டியுள்ளது.

குடாநாட்டின் தற்போதைய பிரதான போக்குவரத்து மார்க் கங்களில் ஒன்றான இந்த வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-26)

## மாநகர அபிவிருத்தியில்...



கவனம் எடுப்பார்களா?: யாழ். மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள புல்லுக்குளம் நீண்ட காலமாகத் துப்புரவு செய்யப்படாமல் கழிவுப் பொருள்களால் நிரம்பியுள்ளதுடன் தாமரைச் செடிகளாலும் மூடப்பட்டுள்ளது. இதனால் அங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கெனப் புனரமைக்கப்பட்ட இந்தக் குளத்தின் துப்புரவுப் பணியில் மாநகர சபை கவனம் செலுத்துமா?. (த-26)

# பரீட்சைப் பெறுபேறு வெளியாகவில்லை

நாவற்குழி, மே 28

வடமாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் 2009 ஆம் ஆண்டு டிசெம்பரில் சமூக சேவை அதிகாரிகளை யும் கிராம அபிவிருத்தி அதிகாரி களையும் முதலாம் வகுப்புக்கு தரம் உயர்த்துவதற்காக நடத் தப்பட்ட வினைத் திறமை காண் தடைப்பரீட்சையின் பெறு பேறுகள் இதுவரை வெளி யிடப்படவில்லை.

30 இற்கு உட்பட்ட அதிகாரி களே இந்தப் பரீட்சைக்குத் தோற் றிய போதிலும் பெறுபேறுகள் வெளியிடுவதில் அசிரத்தை காட்டப்படுவது குறித்து அவர் கள் தமது கவலையை வெளியிட் டுள்ளனர்.

முதலாம் வகுப்புக்குப் பதவி உயர்த்தப்பட வேண்டிய சேவைக் காலத்தை அடைந்த சில அதிகாரிகள் இந்தத் தாமதத் தால் தாம் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் கவலை தெரிவிக் கின்றனர். (த-121)

# கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக மதுமதி

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரா கத் திருமதி மதுமதி வசந்தகுமார் கடந்த திங்கட்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை கூட்டுறவு ஆணை யாளராகப் பதவி வகித்த எஸ். அருள்ராஜ் கிழக்கு மாகாண சபைக்கு மாற்றலாகிச் சென்று விட்டார்.

இதனையடுத்து யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையா ளராக இருந்த திருமதி மதுமதி வசந்தகுமார் கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக மரிய தாசன் ஜெகூ நியமிக்கப்பட் டுள்ளார். (த-26)

# ஆளும் கட்சி உறுப்பினர்களின் வீடுகளில் வேலை செய்யவா தற்காலிக தொழிலாளர்

## மாநகர சபைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி கேள்வி

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாநகர சபையில் உள் வாங்கப்பட்டுள்ள தற்காலிகத் தொழிலாளர் நியமனம் தொடர் பாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே நேற்று முன்தினம் அனல் பறந்த வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்றன.

ஆளும்கட்சி உறுப்பினர் களின் வீடுகளில் வேலை செய் யவே தற்காலிக தொழிலாளர் கள் நியமிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிக்குற்றம் சாட்டியது.

யாழ். மாநகர சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த வருடத்துக்கான ஐந்தாவது மாதாந்தக் கூட்டத்தில் தற்காலிக தொழிலாளர் விடயம் விவாதத் துக்கு வந்தபோதே உறுப்பினர் களிடையே சூடான விவாதம் இடம்பெற்றது.

மாநகர சபை பிரதம கணக் காளரினால் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த 11 ஆம் திகதி நிதிக் குழுக் கூட்ட அறிக்கை மாநகர சபைக் கூட்டத்தின்போது பிரேரணைக் காகச் சமர்ப்பிக்கப்பட்டது. தற் காலிக தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்காகத் தேசிய சேமிப்பு வங்கியில் நிலை யான வைப்பிலுள்ள யாழ். மாநகர சபைக்குரிய 53 லட்சத்து 33 ஆயிரத்து 732 ரூபாவை மீளப் பெறுவதற்காகவே இந்தப் பிரே ரணை கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரேரணைக்கு ஆத ரவு தெரிவித்து ஆளும்கட்சி உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப் பினர்களும் தமது கருத்துக் களை வெளியிட்டனர்.

தற்காலிக தொழிலாளர்களை நியமிக்க வேண்டிய [illegible] யாழ். மாநகர சபைக்கு [illegible] ஆளும் கட்சியின் அரசியல் தேவைக்காகவும் அவர்களின் வீடுகளில் வேலை செய்ய வுமே தற்காலிகத் தொழிலாளர் கள் பலர் உள்வாங்கப்பட்டுள்ள னர் என எதிர்க்கட்சி உறுப்பினர் கள் இதன் போது குற்றஞ் சாட்டினார்கள்.

நிரந்தரத் தொழிலாளர்கள் பலர் அடிக்கடி லீவு எடுப்பதன் காரணமாகவே தற்காலிகத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டி ஏற்பட்டது என ஆளும் கட்சியின் ஈ.பி.டி.பி உறுப் பினர் விஜயகாந்த் இதன்போது பதிலளித்தார்.

தொழிலாளர்களின் லீவு விட [illegible] உறுப்பினர்களின் தலையீடும், சிபார்சும் இருப்பதாகத் தொழி லாளரை மேற்பார்வை செய்யும் அதிகாரி ஒருவர் இதன்போது இரகசியத்தைப் புட்டு வைத்தார்.

அப்போது ஆசனத்தை விட் டெழுந்த எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன், ஆளும் கட்சி உறுப் பினர்களின் தலையீடு காரண மாகவே தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியா துள்ளது. அந்தத் தொழிலாளர் கள் தமது வேலையைச் செய் கிறார்களோ இல்லையோ ஒழுங் காகச் சம்பளம் மட்டும் பெறு கின்றனர். இந்த நிலையில் அவர்களை எப்படிக் கட்டுப் படுத்த முடியும் என உரத்துக் கேட்டார்.

நிரந்தரத் தொழிலாளர்கள் 1240 பேர் பணியில் உள்ள போது தற்காலிகத் தொழிலாளர் களாக 420 பேர் உள்வாங்கப் பட்டுள்ளனர். இந்தத் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம் 60 லட்சம் ரூபா சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இது தேவை தானா? என எதிர்க்கட்சி உறுப் பினர் அ.பரஞ்சோதி கேள்வி எழுப்பினார்.

இந்தப் பிரேரணைக்கு எதிர் கட்சி கடும் எதிர்ப்பைத் தெரி வித்தது. இந்த நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் அந்தப் பிரேரணை எதிர் கட்சிகளின் எதிர்ப்பு களுக்கு மத்தியில் நிறைவேற்றப் பட்டது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை இடம்மாறுவதால் மக்களுக்கே சிரமங்கள்

கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை தற்போது இருக்கும் இடத்திலிருந்து புளியம் பொக்கணைச் சந்திக்கு இடம்மாறவுள்ளதால் கண்டாவளைப் பிரதேச மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இந்த உதவி அரச அதிபர் பணிமனைக்கு புளியம்பொக்கணைச் சந்தியிலுள்ள காணியில் புதிய கட்டடம் அமைக்கப் போவதாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் அண்மையில் நடைபெற்ற யாழ். செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

தெரிவு செய்யப்பட்ட புதிய இடத்தில் விரைவில் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் செயலகம் பழைய இடத்திலிருந்து புதிய இடத்துக்கு இடம்மாற்றப்பட்டால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுமென இந்தப் பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், போரின்பின் தற்போது மீளக்குடியமர்ந்த மக்கள் தமது அன்றாட வசதிகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நிலையில் தற்போது இல்லை. அது மட்டுமன்றி, இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்தச் செயலகம் இடம்மாற்றம் செய்யப்படவுள்ளதால் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தாமதத்தையும் சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டி வரும்.

**கண்டாவளை உதவி அரச அதிபர் பணினை தற்போது இருக்கும் இடத்திலிருந்து புளியம் பொக்கணைச் சந்திக்கு இடம் மாற்றம் செய்யப்படவுள்ளதால் கண்டாவளைப் பிரதேச மக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். தற்போது அமைந்துள்ள பணிமனை ஒரு மத்திய இடத்திலே அமைந்துள்ளது.**

கண்டாவளை என்னும் கிராமம் ஐரோப்பியர் காலம் தொடக்கம் கரைச்சியின் பிரதானமான நிர்வாக மையமாக விளங்கி வந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு பதவியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் திட்டவரைபுக்கமைய 1977 இல் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசால் புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்கப்படும் போது புராதன நிர்வாக மைய வரலாற்று அடிப்படையில் கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவு தற்காலிக செயலகமாக 1978 ஆம் ஆண்டும், நிரந்தர செயலகமாக 1982 ஆம் ஆண்டும் உருவாக்கப் பெற்றது.

1978 ஆம் ஆண்டிலிருந்து இடம் பெயர்வுக் காலங்கள் உட்பட இன்றுவரை 33 வருட காலமாகக் கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை தொடர்ந்தும் கண்டாவளைச் சந்தியிலேயே இயங்கி வருகிறது.

ஆங்கிலேய அரசின் வட மாகாண அரச ஏஜன்டாக இருந்த றசல் துரையின் உத்தரவின் பிரகாரம் வட்டக்கச்சியைச் சேர்ந்த கதிர்காமர் வேலாயுதம் என்பவர் கண்டாவளைப் பிரதேசத்துக்கான முதலாவது உடையாராக நியமிக்கப்பட்டார். மேற்குறிப்பிட்ட கடிதம் பிரித்தானிய சின்னத்துடனான நியமனக் கடிதமாக உள்ளது.

பிரித்தானியரின் கடிதத்தின் பிரகாரம் கண்டாவளை மிக நீண்ட காலத்துக்கு முன்பே நிர்வாகமையமாக இருந்து பல புராதன கிராமங்களுக்கும் சேவையாற்றி வந்துள்ளது.

அதன் அடிப்படையில் 1978 ஆம் ஆண்டு கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கப் பெற்றது.

1972 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் ஆளும் கட்சி அமைப்பாளராக தபால் தந்தி தொடர்புகள் அமைச்சர் செ.குமாரசூரியர் நியமிக்கப்பட்டார். அவர் கிளிநொச்சி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதில் அதிக அக்கறை காட்டினார்.

அரச கொள்கையின் அடிப்படையிலும் அமைச்சர் குமாரசூரியரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரையின் அடிப்படையிலும் 1978 ஆம் ஆண்டு கண்டாவளைப் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் நிலப்பகுதி மேற்குத் திசையில் குடமுறுட்டியில் இருந்து தேராவில் ஆறு வரை பரந்தன் முல்லைத்தீவு வீதியில் விரிந்துள்ளது.

குடமுறுட்டியில் இருந்து இன்று பிரதேச செயலகம் அமைந்துள்ள கண்டாவளைச் சந்திக்குமான தூரம் ஏறக்குறைய 10 மைல்களுக்கும் அதிகமானது. அதேவேளை, கண்டாவளைப் பிரதேச செயலகம் இப் போது இருக்கும் இடத்திலிருந்து தேராவில் ஆறுவரை ஏழுமைல் தூரமுடையதாகவே உள்ளது.

இவ்வாறு நோக்கினால் இப்போது அமைந்துள்ள கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனையானது ஒரு மத்திய இடத்திலேயே அமைந்துள்ளது. மக்கள் அனைவரும் உப தேவைகளையும் இலகுவில் பூர்த்தி செய்யக் கூடிய செயலகமாக இது விளங்குகிறது.

இந்த உதவி அரச அதிபர் பிரிவில் 16 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. கே.என் 43/ குமரபுரம், 44/ பரந்தன், 45/ உமையாள்புரம், 46/ ஆனையிறவு, 47/ தட்டுவன்கொட்டி, 48/ கோரக்கன்கட்டு, 49/ ஊரியான், 50/ முரசுமோட்டை, 51/ கண்டாவளை, 52/ பெரியகுளம், 53/ கல்மடு, 54/ தர்மபுரம் மேற்கு, 55/ தர்மபுரம் கிழக்கு, 56/புளியம் பொக்கணை, 57/ புன்னைநீராவி, 58/ பிரமந்தனாறு ஆகியவையே அவையாகும்.

கறுப்பி

கண்டாவளை உதவி அரச அதிபர் பணிமனை இன்று அமைத்திருக்கும் பகுதிக்கு மேற்கிலிருந்து கிழக்காக குமாரபுரம் தொடக்கம் பெரியகுளம் ஆகிய கிராம சேவர் பிரிவுகளும் கண்டாவளைச் சந்திக்கு கிழக்கே 6 கிராம சேவகர் பிரிவுகளும் அமைந்துள்ளன.

இந்தச் செயலகத்தை புளியம் பொக்கணைச் சந்திக்கு நகர்த்துவதால் கிராம சேவகர் பிரிவுகளின் தொகை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

(தொடரும்)



ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1938.10.10 இறப்பு: 2010.06.08

சுந்தரம் விநாயகமூர்த்தி

பிள்ளையாரின் நாமத்தை உங்களின் நாமத்தில் தொடக்கமாகக் கொண்டவரே உங்களின் அமைதியான ஆனால் ஆளுமையான தோற்றம் உங்களின் ஆசிரியத் தொழிலுக்கு சிறப்பைத் தந்தது. உங்களின் கற்பித்தல் சிறப்பினால் சக ஆசிரியர், மாணவர்களால் பாராட்டப்பட்டீர்கள். உங்கள் பிள்ளைகள் அறுவரின் கல்வியில் கண்ணும் கருத்துமாய் இருந்து அன்போடும் பண்போடும் வழிநடத்தி அவர்களை நல்வாழ்க்கை வாழ வைத்தீர்கள்.
இல்லத்துக்கு ஒளி தந்து இன்முகம் காட்டி இன்பந்தந்து உண்மைக்கு உதாரணமாய் வாழ்ந்தீர்கள். உங்களின் அன்பு முகம் பார்த்து அக மகிழ்ந்து நாம் இருந்தோம்.
இவ் இன்பம் தொடருமென நாம் இருந்தவேளை என்னையும் பிள்ளைகளையும் மருமக்களையும் பேரப்பிள்ளைகளையும் கலங்கவைத்து எங்கு சென்றீர்கள்.... என் தெய்வமே.
உடலால் என்னை விட்டுப் பிரிந்தாலும் என்முன்தான் நிற்கின்றீர்கள். எங்கும் நீங்கள் போய்விடவில்லை.
உங்களின் ஆத்மா சாந்தியடைய நீங்கள் கட்டி எழுப்பிய கலட்டி ஆலயத்தில் குடிகொண்ட விநாயகப்பெருமானை வேண்டுகின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை வடக்கு, மீசாலை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48,22,50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை ஆணைக்குழுவால் கிளிநொச்சியில் விசேட செயற்திட்டம்

கிளிநொச்சி, மே 28

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டத்துக்கென புதிய மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நேர்முகத் தேர்வு நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மனித உரிமைப் பாதுகாவலர்கள் தலைமையில் இவை இடம்பெற்றன. இந்த நேர்முகத் தேர்வில் 50 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் ஜூன் மாதமளவில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் மாதத்தில் இரண்டு நாள்கள் என்ற அடிப்படையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-313)

# சிலவகைத் தொழில்களுக்குத் தடை

பூநகரி, மே 28

கிளிநொச்சி, பூநகரி நாச்சிக்குடா யாகப்பர் கடற்றொழிலாளர் சங்கம் சிலவகைத் தொழில்களுக்குத் தடை விதித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்தக் கடற்றொழிலாளர் சங்கம் நீண்டகால நலன் கருதி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஆலோசனையுடன் பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தங்கூசி வலைத்தொழில், டைனமைற் பாவித்தல், இழுவைப் படகு பாவித்தல், கடலாமைகளைப் பிடித்தல், சினை நண்டுகளைப் பிடித்தல், சினை சிங்கி இறால்களைப் பிடித்தல் போன்றவற்றுக்குத் தடை விதித்துள்ளது.

இதனைமீறித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சங்கச் செயலாளர் ஜெனி தெரிவித்தார். (க-406)

# மாவட்ட சமூக சேவைகள் அதிகாரியாக பதவியுயர்வு

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி கே. குணசிங்கம் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அத்துடன் இவர் மாந்தை கிழக்குப் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி பொறுப்பையும் மேலதிகமாகக் கவனிக்கின்றார். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவின் சமூக சேவைகள் அதிகாரி கே.கதிரமலை யாழ். மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலகப் பிரிவுக்கு மாற்றம் பெற்றுக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கே.சிவகரன் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளார். (க-121)

கலைநயம்...



அழகான கூடுகள்: வெசாக் தினத்தன்று முல்லைத்தீவு அளம்பில் இராணுவ முகாமுக்கு முன்பாக வைக்கப்பட்ட அலங்கார வெளிச்சக் கூடுகள். (555)

# மாதா கோயில் பெருநாள்

பூநகரி, மே 28

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, முழங்காவில் வேளாங்கண்ணி மாதா ஆலயத்தின் ஆண்டுப் பெருநாள் எதிர்வரும் 31 ஆம் திகதி சிறப்பாக நடை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தின்போது இந்தக் கிராமம் பெரிய அழிவுகளைச் சந்தித்தது. இங்கு மக்கள் மீள் குடியமர்ந்த பின்னர் இந்த ஆலயத்தின் பெருநாளை இந்த ஆண்டு சிறப்பான முறையில் கொண்டாடவுள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடு சிறப்பாக நடைபெறவுள்ளது. அடுத்தநாள் ஆண்டுப் பெருநாள் சிறப்பாக நடைபெறும்.

முழங்காவில் பங்குத் தந்தை அருட்திரு மரியதாஸ் அடிகளார் பெருநாள் நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-406)

# குறைந்த தூரத்துக்கு அதிக கட்டணம் அறவிடும் தனியார் பேருந்துகள்

அளம்பில், மே 28

பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் தனியார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகள் அதிக கட்டணத்தை அறவிடுவதாக பயணிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் பேருந்துக்கள் 150 ரூபாவினை அறவிடுவதாகவும் பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் பேருந்துகள் 180 ரூபாவினை அறவிடுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு வரையான தூரத்தை விடவும் பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு வரையான தூரம் கிட்டத்தட்ட 12 கிலோமீற்றர்களால் குறைவாகக் காணப்படுகின்றது.

அதிகளவு தூரத்தைக் கொண்ட முல்லைத்தீவு - யாழ்ப்பாண வழிக்கு 150 ரூபா வெனில் குறைந்தளவு தூரத்தைக் கொண்ட பருத்தித்துறை - முல்லைத்தீவுக்கு எவ்வாறு 180 ரூபா அறவிட முடியுமென பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதற்கெல்லாம் காரணம் யாழ்ப்பாணத்திலிருந்தும், பருத்தித்துறையிலிருந்தும் அரச பேருந்துகள் முல்லைத்தீவுக்கு போக்குவரத்தில் ஈடுபடாமையே என்றும் அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

எனவே தனியார் போக்குவரத்துக் கழகங்களும், இலங்கை போக்குவரத்துச் சபையும் இதைச் கருத்தில் கொண்டு முல்லைத்தீவுக்குச் சீரான போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்யுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-555)

# ஆடு, மாடு ஏற்றும் வாகனத்தில் பாடசாலை மாணவர்கள் பயணம்



செம்மலை, மே 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகள் இன்னமும் சீரடையாததால் அங்கு வாழும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

போக்குவரத்து வசதிகள் சீரின்மையால் கண்ணில் தென்படும் எத்தகைய வாகனங்களிலும் இவர்கள் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அண்மையில் ஆடு, மாடுகளை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படும் வாகனமொன்றில் செம்மலை மகாவித்தியாலய மாணவர்கள் பிரயாணத்தை மேற்கொண்ட அவலம் நிகழ்ந்துள்ளது.

இந்த மாணவர்கள் நாடகப் போட்டியொன்றுக்கு அதற்குத் தேவையான நாடக ஆற்றுகைப் பொருள்களுடன் ஆடு மாடுகளை ஏற்றுவதற்கு பயன்படும் ஹண்டர் ரக வாகனத்தில் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

வெளியிலிருந்து வாகனத்தினுள் தூசி பரவியதால் இவர்கள் துணிகளால் தமது முகத்தை மூடியவாறு பிரயாணம் செய்தமை பார்ப்பதற்குப் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

இன்னும் எவ்வளவு காலம் தான் தாங்கள் இவ்வாறு துன்பப்படப் போகிறோமென இவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (க-555)

# இடர்களுக்கு மத்தியிலும் சங்கம் வெற்றிநடை

## முத்துஐயன்கட்டு ப.நோ.கூ. சங்கத்தலைவர் கூறுகிறார்

முல்லைத்தீவு, மே 28

பல்வேறு இடர்களை நாம் சந்தித்துள்ள போதிலும் எமது சங்கம் தொடர்ந்து வெற்றி நடை போடுகிறது. இவ்வாறு கூறியிருக்கிறார் முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர்.

முத்துஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த அனர்த்தத்தினால் மாறி மாறி இடம்பெயர்ந்து பல லட்சம் ரூபா நட்டத்தினை எமது சங்கம் எதிர்கொண்டது. நாம் பல கூட்டுறவாளர்களையும் ஊழியர்களையும் இழந்துள்ளோம்.

ஆனால் மக்கள் சேவையில் தொய்வின்றி நாம் உழைத்ததன் பலனாக இன்று எமது சங்கம் வெற்றிநடை போடுகின்றது.

அடுத்த மாதம் 89 ஆவது கூட்டுறவு தினவிழா குருநாகலையில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்பதாக எட்டுக் கிளைக் குழுக்களுக்கான தேர்தலை நாம் நடத்தி முடிக்க வேண்டும். கிளை உறுப்பினர்கள் அனைவரும் தமது பங்குப் பணத்தினைச் செலுத்தி உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒற்றுமையுடன் உழைப்பதன் மூலமே எமது எதிர்கால இலக்கை அடைய முடியும்.

யுத்தத்துக்கு முன்னர் எமது சங்கம் பூரண வளர்ச்சி அடைந்த நிலையில் இருந்தது. ஆனால் யுத்தத்தின் பிடிக்குள் சிக்கி சங்கம் பெரும் நட்டத்தை எதிர்கொண்டது. தற்போது படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

இரவு பகலாகத் தமது குடும்பத்தையே மறந்து பணியாற்றிய இரு சங்க ஊழியர்கள் யுத்தத்தின் போது பலியாகியுள்ளனர். அன்றைய கால கட்டத்தில் உயிருடன் திரும்பி வருவோமென்று நாம் எதிர்பார்க்கவில்லை.

நடைபெறவுள்ள கிளைக் குழுத் தேர்தலில் நன்றாகச் செயற்படக்கூடிய கூட்டுறவாளர்களைத் தெரிவு செய்ய வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார் (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28 மே 2011 சனிக்கிழமை

# மாநகர சபைக்குரிய நிலம் மீட்டெடுக்கப்பட வேண்டும்

## கல்முனை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்து

அம்பாறை, மே 28

கல்முனைப் பிரதேச செயலகக் கட்டடம் அமைந்துள்ள நிலம் எமது மாநகர சபைக்குச் சொந்தமான தாகும். அதனை மீட்டெடுத்து நமது தேவைக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கல்முனை மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற மாதாந்த சபை அமர்வில் மாநகர சபைக்குப் புதிய கட்டடத் தொகுதி அமைப்பது தொடர்பான பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான பி.ரி.உதுமா லெப்பை, எம்.எஸ்.எம். நிஸார் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

கல்முனை மாநகரசபைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு நாம் இடம் தேடுகின்றோம். ஆனால் நமது கண் முன்னே இருக்கின்ற பிரதேச செயலகம் அமைந்துள்ள நிலம் நமது மாநகர சபைக்கே சொந்தமானது. அவ்வாறாயின் ஏன் அவ்விடத்தில் நாம் மாநகர சபைக் கட்டடத்தை நிர்மாணிக்க முடியாது என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த மாநகராட்சி முதல்வர் செனட்டர் மசூர் மௌலானா, அந்த நிலம் இப்போது நமது மாநகர சபைக்குச் சொந்தமானதல்ல- என்றார். இதனை உறுப்பினர்கள் மறுத்ததோடு மேலும் வினாக்களைத் தொடுத்தனர்.

அவற்றுக்கு முதல்வர் மௌலானா விளக் கமளிக்கையில்:

நாம் இந்தச் சபையைப் பொறுப்பேற்பதற்கு முன்னரே அது பிரதேச செயலகத்திற்கு சொந்தமாகிவிட்டது. அதற்கான ஒப்பந்தம் உத்தியோகபூர்வமாகச் செய்யப்பட்டிருக்கிறது. பிரதேச செயலகத்திற்கே இப்போது சட்ட பூர்வமான உரிமை உள்ளது. ஆகையினால் அந்த இடத்தைக் கோருவதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது- என்றார்.

அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து நமது நிலத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் பி.ரி. உதுமா லெப்பை குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து உறுப்பினர் நிஸார் தெரிவித்ததாவது:

அந்த இடம் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டு விட்டது என்றால் நமது மாநகர சபையின் எல்லை எது எனத் தெரியப்படுத்த வேண்டும்.

அத்துடன் ஒரே நுழைவாயில் இருக்க முடியாது. நமது சபைக்கு என்று தனிச் சுற்று மதிலும் தனி நுழைவாயிலும் அமைக்கப்பட வேண்டும். மாநகரசபைக் குரிய வளங்களும் சொத்துகளும் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று வலியுறுத்தினார். (ச)



அக்கரைப்பற்று,13ஆம் கிராம சேவகர் பிரிவில் சோவ்சா அமைப்பினால் அமைக்கப்பட்ட வடிகால் மக்களின் பாவனைக்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்து விடப்பட்டுள்ளது. (ச)

# கிழக்கில் கைதுசெய்யப்பட்ட ஐவரில் இருவர் நீதிமன்றில் விடுதலை

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் இருவரும் கடந்த புதன்கிழமை இரவு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாகாணசபை உறுப்பினர் எட்வின் கிருஷ்ணானந்தராசா உட்பட 5பேர் மட்டக்களப்பு பொலி ஸார் மற்றும் கொழும்பில் இருந்து வந்த இரகசியப் பொலிஸார் ஆகியோரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் மாகாணசபை உறுப்பினர் கிருஷ்ணானந்தராசாவின் பிரத்தியேக செயலாளர் கோல்டன் பென்சமீன், பரணி எனப்படும் இந்திரயோதி திலிஸ்குமார் ஆகியோர் கடந்த புதன்கிழமை இரவு மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ச)

## திருமலை மாவட்டத்தில் 26 சிறுகுளங்கள் புனரமைக்க ரூ.50 மில்லியன் ஒதுக்கீடு

திருகோணமலை, மே 28

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 26 சிறுகுளங்கள் 50 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குளங்களே இந்தப்புனரமைப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ச)

**வீடு வாடகைக்கு**

அமைதியான சூழலில் 7 அறைகளுடன் பல வாக னங்கள் நிறுத்தக் கூடிய 5 ஆயிரம் சதுர அடி பரப் பளவைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.(யாழ். வைமன் வீதியில்).

தொடர்புகளுக்கு:
வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/199) 0212226982.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் (80/=) சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் 02.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். தொ.பே இல:- 021 222 6944. (4605) (36)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: 28.05.2011

## வைத்திலிங்கம் மாணிக்கராசா

பிறப்பு
28.03.1927
இறப்பு
08.06.2010

வாழ்வு எனும் கொடையை
இவ் வையகத்தில் எமக்குத்தந்து
எம்மைவிட்டு வானகம் சென்றுவிட்ட
எங்கள் அன்பு அப்பாவே!
மறைந்தோடியது ஓராண்டு
மறக்கத்தான் முடியுமா?
உங்கள் அன்பு முகம் ஓராண்டு என்ன?
ஆயிரம் ஆண்டுதான் ஆனாலும் அழியாது
உங்கள் அன்பு முகம் எம் இதயத்தில்.
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு.
அன்பு மனைவி- பராசக்தி,
பொ.மகேந்திரன் (மருமகன்)
(49,19,21)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
18.04.1927

உதிர்வு:
28.04.2011



அமரர்
## வல்லிபுரம் முத்துவேலு

மருகர் என வந்த எம்மை மகன்போல் காத்து
மருவு நல் வழிகாட்டி மண்ணில் ஏத்தி
பெருகு நறும் புகழாக்கி புதுமை காட்டி
புவிபோற்ற வாழ்வீந்து மாமா நீங்கள்
கருமனத்து காலனவன் கண்ணிற்பட்டு
கலங்கியழ வைத்தின்று கனலாய் ஆனீர்
உருகியழ மருகர் எம்மை ஓங்கும் துன்பம்
உடைந் திடவே மண்மீதில் மீண்டும் வாரீர்

அன்பின் நினைவுடன் :
மனைவி: மு.சிவபாக்கியம்
மருமகன்: வாரித்தம்பி நவரத்தினம்
(யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி)
(48,25,19)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## சிவசம்பு அமிர்தலிங்கம்

(பப்பா)



அன்னை மடியில்:
26.06.1926
[illegible]
30.04.2011

கடந்த 30.04.2011 சனிக்கிழமை சந்நிதியான் பாதார விந்தம் சென்றடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (30.05.2011) திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும். அத்துடன் அன்று நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தவர்கள்
சந்நிதி வீதி,
கதிரிப்பாய், அச்சுவேலி.
(48,20,50)

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன்,நல்லூர்.

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை வீதி, பூதர் மடத்தடியில் (பிரதான பாதை)
6பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 986 4524.

**கணினி விற்பனைக்கு**

P/V 1.7GHZ முழுமையான கணினி 15, 750= மட்டுமே. ஒரு வருட உத்தரவாதம் மற்றும் கணினி சம்பந்தமான அனைத்துப் பொருள்களும் உண்டு.
SKY Computer, 737, K.K.S Road Jaffna.
(யாழ். இந்துக் கல்லூரி முன்பாக)
021 222 1417 - 4865, 075 069 8608.

**Soft View**
**Academy for Computing & IT**
**Center For Information Technology (P vt)Ltd**
**102, Main Street, Jaffna.** [சிறைச்சாலை முன்பாக]
**T.P:021 222 4885, 0779053545**

MS Office, DTP, Hard ware, Kids Program, Internet & Email, Type Setting, Web Designing, Video Editing, Graphic Designing, Computerized Accounting.

Note: மாணவர் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான நேரத்தைத் தேர்ந்தெடுக்கலாம். (7.30 a.m to 9.30 p.m)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் வெற்றி விழாக்கள் கிழக்கில் துப்பாக்கிச் சூடா?

## அரியம் எம்.பி.கேள்வி

மட்டக்களப்பு,மே28

விவசாயி ஒருவர் பட்டப் பகலில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அரசின் வெற்றிவிழா கொண்டாட்டங்கள் நடைபெறுகின்ற இவ்வேளையில் கிழக்கில் துப்பாக்கிச் சூடா?.

நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம், இருக்கின்ற நற்பெயரைக் குழப்புகின்ற செயலாக இருக்கலாமா என்ற கேள்வியை தோற்றுவிக்கிறது. இதன் பின்னணியை அரசு உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, பொண்டுகள்சேனை, பூலாக் காட்டைச் சேர்ந்த தியாகராசா குகன் என்ற இளம் குடும்பஸ்தரான விவசாயி சுடப்பட்டமை குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

சுதந்திரமாக விவசாயத்தைச் செய்யக்கூடிய சூழல் உருவாகியுள்ள நிலையில் நடந்துள்ள துப்பாக்கிச் சூடானது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப்பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதே சங் களில் ஒன் றாகும்.

இந்தப் பிரதேசத் தில் காணி அபகரிப்புச் செய்து வருபவர்களின் செயலாக இது இருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு அரசு பூரண விசாரணை நடத்தி விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (ச)

## குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறுத்தானை பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொண்டுகள்சேனை, பூலாக்காட்டைச் சேர்ந்த தியாகராசா குகன் (வயது 26) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தவராவார்.

# ஆயுர்வேத மூலிகைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

மட்டக்களப்பு, மே 28

அக்கரைப்பற்று கலா ஆயுள் வேத வைத்தியபீடம் அளிக்கம்பைப் பகுதியில் மேற்கொண்டு வந்த ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் அபிவிருத்தி செய்யப் படவுள்ளது.

இந்தத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு வைத்திய பீடத்தின் பணிப்பாளர் நாயகம் இ.குருநாதபிள்ளையிடம் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் டாக்டர் துரையப்பா நவரெத்தினராஜா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மண் வெட்டிகள், நீர் இறைக்கும் கருவிகள் போன்றவற்றை வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் டாக்டர் துரையப்பா நவரெத்தினராஜா கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

எமது பரம்பரையான ஆயுர்வேத வைத்தியங்களை அபிவிருத்தி செய்வதற்கு இது போன்ற அமைப்புக்கள் முன்வரவேண்டும். இதற்கான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு கிழக்கு மாகாணசபை ஆயத்தமாக இருக்கிறது.

மக்கள் குடியிருக்கும் வளவுகளிலும் மூலிகைகளை வளர்ப்பதில் ஆர்வங்காட்டுங்கள். அந்த மூலிகைகளை மூலிகைக் கூட்டுத்தாபனம் நல்ல விலையில் கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய முடியும். முற்காலத்தில் கிழக்கு மாகாணத்திலே கைதேர்ந்த ஆயுர்வேத வைத்தியர்கள் இருந்து சேவையாற்றியதை நாம் அறிவோம்.

எதிர்காலத்தில் இந்த நிலையை ஏற்படுத்துவதற்கு எமது இளம் சந்ததியினர் மத்தியில் ஆயுர்வேத மூலிகைகளை நடுவதிலும், ஆயுர்வேத வைத்திய முறைகளை கற்றுக் கொள்வதிலும் ஆர்வம் காட்ட வேண்டும்.

அதற்கு ஏற்ற முறையில் இன்றுள்ள ஆயுர் வேத வைத்திய அமைப்புக்களும் செயல்பட வேண்டும்-என்றார். (ச)

## மான் வேட்டையாடிய இருவருக்கு ரூ.50 ஆயிரம் அபராதம்

நுவரெலியா, டயகமவை அண் மித்த தேயிலைத் தோட்டப் பகுதியில் இரண்டு மான்களை வேட்டையாடிய இருவருக்கு நுவரெலியா மாவட்ட நீதிவான் ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றவாளிகள்தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

அக்கரபத்தனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வை. எம்.சோமரத்ன தலைமையிலான பொலிஸார் இவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (ச)

## யாத்திரிகர்கள் குற்றங்களால் அரசுக்கு ரூ.2 லட்சம் வருமானம்

நுவரெலியா,மே28

நிறைவடைந்த சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் பருவ காலத்தின்போது பல்வேறு குற்றச் சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசு சுமார் 2 லட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது என நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனில் பிரசன்ன ஜயசிங்க தெரிவித்தார்.

மதுபோதையில் இடையூறு விளைவித்தவர்கள், கஞ்சா சுருட்டுகளுடன் மலைக்கு வந்தவர்கள் என சுமார் 61 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோதே இந்தத் தொகை அபராதமாக விதிக்கப்பட்டது. இதில் கஞ்சா சுருட்டுடன் வந்தவர்கள் 42 பேருக்கு ஒரு லட்சத்து 61 ஆயிரமும், மதுபோதையில் கைதுசெய்யப்பட்ட 19 பேருக்கு 47,500 ரூபாவும் தண்டம் அறவிடப்பட்டுள்ளது. (ச)

## நோயின்றி வாழ......



சிரமதானம்:- உலக உணவு நிகழ்ச்சித்திட்ட வேலைத் திட்டத்தின்கீழ் அக்கரைப்பற்று, 5 ஆம் கட்டை அஷ் சிபாயா வித்தியாலயத்தில் சிரமதான நடவடிக்கை நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது. இந்த வேலைத் திட்டத்தில் 230 பேர் கலந்துகொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ச)

## மட்டு. வைத்தியசாலைக்கு நவீன உபகரணங்கள்

மட்டக்களப்பு,மே 28

மட்டு. போதனா வைத்தியசாலைக்கு நவீன வசதிகளுடைய கட்டில்கள், சக்கர நாற்காலிகளை மட்டக்களப்பு விமான நிலைய இணைப்பதிகாரி அலன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மீள்குடியேற்ற பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பொன். ரவீந்திரன், வைத்தியசாலைப் பணிப்பாளர் கே.முருகானந்தம், வைத்தியர்கள், தாதியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## கஞ்சா வைத்திருந்த மூவருக்கு விளக்கமறியல்

கஞ்சாவை பைகளில் அடைத்துக்கொண்டிருந்த வேளையில் கைதுசெய்யப்பட்ட மூவரையும் எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த மூவரும் நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருகோணமலை, ஐமாலியா பகுதியிலுள்ள வீடொன்றில் கஞ்சாவை பைகளில் அடைத்துக் கொண்டிருந்தபோது நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## போகம்பரை சிறைக் கைதிகளின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கண்டி, மே 28

கண்டி, போகம்பரை சிறைச்சாலையின் கூரையின் மீதேறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்த 12 சிறைக்கைதிகளும் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையில் கடந்த புதன்கிழமை பேச்சு இடம்பெற்றது. இதனையடுத்து இந்தக் கைதிகள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

# கண்டி மாநகர சபையிலும் முறைகேடுகள் அம்பலம்

## ரூ.40 லட்சம் பெறுவதியான நீர் குழாய்கள் மாயம்

கண்டி,மே28

கண்டி மாநகரசபையில் கடந்த நான்கு வருடங்களில் சுமார் நற்பது லட்சத்து 34 ஆயிரத்து 128 ரூபா பெறுமதியான நீர்க் குழாய்கள் காணாமல்போயுள்ளன என சபையின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரை அங்குல விட்டமுள்ள 724 குழாய்களே இவ்வாறு காணமால் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நீரிணைப்புகளுக்கு 172 குழாய்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு ஒன்பது லட்சத்து 58 ஆயிரத்து 384 ரூபா கையாடப்பட்டுள்ளது என கணக்காய்வாளர் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பிய அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த நான்கரை வருட காலப் பகுதியில் நீரிணைப்புக் காக 4372 குழாய்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் உண்மையில் 4200 குழாய்களே விநியோகிக்கப்பட்டுள்ளன எனதெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த மோசடி தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் மாநகரசபை ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். (ச)

## கம்பளை நகரசபை செயலர் மீது தாக்குதல்

கம்பளை,மே 28

கம்பளை நகர சபைச் செயலாளர் இனந்தெரியாத குழுவொன்றினால் தாக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு மீள்சுழற்சி திட்டமொன்றை பார்வையிட சென்ற பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் 11 பேரும் உள்ளாகியுள்ளனர்.

முச்சக்கர வாகனமொன்றில் வந்தவர்களே தாக்குதல் மேற்கொண்டனர் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கம்பளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பல நாள்களாக தள்ளிவைத்த வேலை ஒன்றை இன்று அவசரமாக முடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். பெண்கள் கணவரின் அன்பு, பாராட்டைப் பெறுவர். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். உறவினர் ஒருவரின் விட்டிற்கு திடீரென செல்லலாம்.

**இடபம்:**
சோர்வு, சோம்பல் இல்லாமல் எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் சிலரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். உடன் பிறப்புக்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும். பரிசு, பாராட்டுக்களைப் பெறலாம்.

**மிதுனம்:**
மனக் குழப்பங்கள் இல்லாமல் எதிலும் தெளிவான முடிவு எடுக்கும் நாள். வீண் பழிகள் விலகி பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். உறவினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பர். நல்ல செய்தி கேட்கலாம்.

**கடகம்:**
உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். தொழில் ரீதியாக உங்களின் செயற்பாடுகளை மற்றவர்கள் பாராட்டலாம். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றை சாதிப்பதற்காக மற்றவர்களை நச்சரிப்பீர்கள். விருந்து, விசேடங்களில், சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். பதற்றம், படபடப்பு அதிகரிக்கும்.

**சிங்கம்:**
ஊக்கம், உற்சாகத்தைக் குறைக்கும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். பிள்ளைகள் விடயங்களில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். வாகனங்கள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். புதிய முயற்சிகளை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி:**
நண்பர்கள் மூலம் சில வேலைகளை முடித்துக் கொள்ள முற்படுவீர்கள். கடன் மிகுதி ஒன்றை தீர்ப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொடர்பு கொண்டு முக்கிய தகவல்களைக் கேட்கலாம். உங்களுக்காகவோ அல்லது குடும்பத்தினருக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம்.

**துலாம்:**
குடும்ப உறுப்பினர்கள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். இதோ, அதோ என, இழுத்துக் கொண்டிருந்த பணவரவுகள் வரலாம். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு தரும்.

**விருச்சிகம்:**
ஒருவர் மூலம் சில காரியங்களை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றொருவர் மூலம் முடிக்கலாம். நண்பர் ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். வெளியூர் பயணம் சென்ற சிலர் மீண்டும் ஊர் திரும்பலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சில வேலைகளுக்காக இருமுறை அலையலாம்.

**தனுசு:**
மற்றவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். அடுத்து நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். மனதில் பட்டதை வெளிப்படையாகச் சொல்வதன் மூலம் சிலரின் அதிருப்திக்கு ஆளாகலாம். வேண்டிய ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதால் எரிச்சல், கோபம் அடையலாம்.

**மகரம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். ஒருவரிடம் கடனாகக் கேட்ட பணம் கிடைக்கும். புதியவர்களின் சந்திப்பு நிகழும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். நல்ல வாய்ப்புகள் தேடி வரலாம்.

**கும்பம்:**
ஆரவாரம் இல்லாமல் அமைதியாகச் செயற்படும் நாள். வீட்டுக்குத் தேவையான உணவுப்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். நீண்ட தூர பயணம் செல்லலாம்.

**மீனம்:**
திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கலாம். சில விடயங்களில் தன்னிச்சையாகச் செயற்பட முற்படுவீர்கள். பெண்கள் பிறந்த வீட்டின் உதவிகளைப் பெறலாம். சொந்த பந்தங்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். கடந்த கால தவறு ஒன்றை நினைத்து மனவருத்தம் அடைவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம்.

# ராஜீவ் காந்தியைக் செ பிரபாகரன் திட்டமிட்டது மறுக்க முடியாத உண்

**முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் கே.பி.என்றழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு இந்திய உளவு அமைப்பான 'றோ' வின் தூண்டுதலின் பேரில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் நீண்ட பேட்டி.**

கே: பின்னர் இந்திய அமைதிப் படை வந்தது இல்லையா?

ப: அமைதிப் படையினர் இலங்கை வந்த போது புலிகளுக்கு அவர்களுடன் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. ஆனால் தவறான புரிதல்கள் வெளிக்கிளம்பிய போது இந்தியப் படையினருக்கு எதிராகப் புலிகள் போரை ஆரம்பித்தார்கள்.

கே: ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு பிரபாகரன்தான் திட்டமிட்டாரா என்பதை ஒரேயொரு தடவை எங்களுக்காகச் சொல்ல முடியுமா?

ப: அது மறுக்க முடியாத உண்மை. அந்த உண்மை எல்லோருக்குமே தெரியும். புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இருந்து இந்தக் கொலையுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அது நன்கு திட்டமிடப்பட்டு பிரபாகரனாலும் பொட்டு அம்மானாலும் மேற்கொள்ளப்பட்டது. அந்த உண்மை எல்லோருக் குமே தெரியும்.

### ராஜீவைக் கொன்றவர்கள் விடுதலைப்புலிகள்தான்

இந்திய மக்களுக்கு, குறிப்பாக காந்தி குடும்பத்துக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும்... பிரபாகரனின் தவறுக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். எங்களை மன்னித்துவிடுங்கள்; நாங்கள் இரஞ்சுகிறோம். எமது மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எமது மக்கள் மனிதர்களாக வாழ்வதற்கு உதவுங்கள். எல்லாவற்றுக்குமாக மன்னித்துக் கொள்ளுங்கள். ராஜீவ் காந்தியின் மகனது உணர்வுகளை நாம் புரிந்துகொள்கிறோம். தந்தையும் மகளும் எவ்வளவு தூரம் நெருக்கமாக இருப்பது இயற்கையானது. எங்களுக்கு அதுவும் புரிகிறது.

கே: தமிழர்கள் கடந்த காலங்களை மறந்து தம்மை அபிவிருத்தி செய்யக் கூடிய வகையில் அமைந்த அமைதி வழியிலான தீர்வு ஒன்றை எட்டும் வகையில் இந்திய அரசு இலங்கையுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று நீங்கள் கேட்கிறீர்களா?

ப: சர்வ நிச்சயமாக அப்படித்தான். 50 வருடங்க ளுக்கு முன்னர் நீங்கள் பார்த்திருந்தால் எமது மக்கள் தான் கல்வி ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முதலிடத்தில் இருந்தார்கள். இன்று அவர்களில் (சிங்களவர்கள்) இருந்து 50 வருடங்கள் பின்தங்கி இருக்கிறோம். விடயம் இதுதான்... நவீன தொழில் நுட்ப உலகில் எமது மக்களும் பணியாற்ற வேண் டும்; வாழ வேண்டும். இது ஒரு புதிய தசாப்தம். உங்கள் நாட்டில் எந்த இடத்தைப் பார்த்தாலும் இணையமும் கணினிகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் முழங்காவிலுக்கு நீங்கள் போனால் அங்கு எதுவுமிருக்காது.

நான் நினைக்கிறேன் எமது மக்களும் மனிதர்களாக வாழவேண்டும். நாங்கள் ஏற்கனவே அதிக விலை கொடுத்துவிட்டோம். இனிக் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை.

கே: தமிழ் நாடு அரசியல்வாதிகளிடம் இருந்தும் நீங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறீர்களா?

ப: நிச்சயமாக. தமிழ்நாட்டு மக்கள் மிகவும் உணர்வுபூர்வமானவர்கள். எங்கள் இருவருக்கும் ஒரே மொழி ஒரே மதங்கள். உணர்வுகளை நாங்கள் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும்; பாதகமாக அல்ல. தமிழ் நாடு மக்கள் தமது சொத்துக்களையும் சிந்தனைகளையும் சாதகமாகப் பயன்படுத்தினால் சில வாரங்களிலேயே எமது மக்களை வளர்த்து விட்டுவிடலாம்.

கே: தமிழ் நாடு அரசியல்வாதிகளிடம் இருந்தும் நீங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறீர்களா?

ப: நிச்சயமாக. தமிழ்நாட்டு மக்கள் மிகவும் உணர்வுபூர்வமானவர்கள். எங்கள் இருவருக்கும் ஒரே மொழி ஒரே மதங்கள். உணர்வுகளை நாங்கள் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும்; பாதகமாக அல்ல. தமிழ் நாடு மக்கள் தமது சொத்துக்களையும் சிந்தனைகளையும் சாதகமாகப் பயன்படுத்தினால் சில வாரங்களிலேயே எமது மக்களை வளர்த்து விட்டுவிடலாம்.

கே: தமிழ் மக்கள் நினைத்தால், அவர்கள் சாதகமாக நடந்துகொண்டால் ஒரே வாரத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்துவிடலாம் என்றா சொல்கிறீர்கள்..?

ப: ஆம். காளான் உற்பத்தித் திட்டம் தொடர்பாகக் கற்பிக்க தமிழ் நாட்டில் இருந்து மூவர் இங்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் தொழில்நுட்பம் இருக்கிறது. மற்றொரு குழு உணவு உற்பத்தி தொடர்பில் படிப்பிக்க வர இருக்கிறது. வாழ்க்கையை எப்படி ஆரம்பிப்பது என்று அவர்கள் கற்றுக் கொடுப்பார்கள். மலேசியாவில் உள்ள இந்திய வம்சாவளியினர் சிலரும் கூட வர இருக்கிறார்கள்.

### தமிழ் நாடு அரசியல்வாதிகளுக்கு

தமிழ்நாடு அரசியல்வாதிகளுக்கு ஒன்று சொல்ல வேண்டும், குறிப்பாக வைகோவுக்குச் சொல்ல வேண்டும், இங்கே வாருங்கள், வந்து பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று ஆராயுங்கள். இங்கே இருக்கும் மக்கள் போதியளவு வலிகளை அனுபவித்து விட்டார்கள். இந்த மக்களுக்கு நீங்கள் உதவ விரும்பினால், உண்மையில் உங்களுக்கு அந்த உணர்விருந்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீங்கள் உதவலாம்.

எங்களுக்கு ஒரு அலுவலகம் இருக்கிறது. நீங்கள் வரலாம்; எவர் வேண்டுமானலும் வரலாம். ஏதாவது அரச சார்பற்ற நிறுவனங்கள் வேண்டுமானால் நான் ஏற்படுத்தி தருகிறேன். பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் பெற்றுத் தருகிறேன். நேர்மையான மனிதாபிமானத் திட்டங்களுடன் இங்கு வாருங்கள். எந்தவொரு அரசியல் வேலைத் திட்டத்துடனும் வராதீர்கள். எங்களுக்கு அரசியல் வேண்டாம்; மனிதாபிமான உதவிகள்தான் வேண்டும். அதனால் தமிழக அரசியல்வாதிகளுக்கு நான் சொல்வதெல்லாம், முரண்பாடுகள் எதையும் வளர்க்காதீர்கள். மீண்டும் ஒரு தடவை மோதல்களுக்குள் எமது இளைஞர்களைத் தள்ளிவிடாதீர்கள். எல்லாம் போதும்.

கே: பழயவற்றை எல்லாம் மறந்துவிட வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அப்படிச் செய்யப்படுவதற்கு முன்னால் கடந்த காலங்களில் நடந்த உண்மைகள் சொல்லப்பட வேண்டும். நீங்கள் புலிகளின் மிக மூத்த உறுப்பினர்; உங்களுக்கு உண்மைகள் தெரியும். பெருமளவு தமிழ் மக்களை வன்முறைக்குள் தள்ளிவிடுவதற்கும் அதற்கு ஆதரவளிப்பதற்கும் பல அரசியல்வாதிகளும் கட்சிகளும் முன்வந்தன என்பது உண்மைதானே? அப்படிப்பட்ட கட்சியின் பெயரைச் சொல்ல முடியுமா? அதாவது உண்மையைச்சொல்ல முடியுமா?

ப: எமது போராட்டத்தின் போது சில சமயங்களில் நாங்கள் தமிழ்நாட்டில் தங்கியிருந்தோம். எமது போராட்டம் ஆரம்பமான போது அது தெளிந்த நீரோடை போல சுத்தமாக இருந்தது. இந்திய அரசியல் வாதிகளுடன் எந்தத் தொடர்புகளும் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ால்ல
# 3
# மை



எமக்குப் பிரச்சினைகள் வந்த போது இந்தியாவுக்குச் செல்வோம் பின்னர் திரும்பிவிடுவோம். அங்கு யாரையும் சந்திப்பதில்லை. இது போராட்டத்தின் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. முதல் தடவையாக நாங்கள் தமிழக அரசியல்வாதிகளைச் சந்தித்த போது (அப்போது பிரபாகரனும் உமாமகேஸ்வரனும் வீதியில் சுட்டுக் கொண்டதற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்) எமது ஆட்களைப் பிணையெடுக்கவே கோரிக்கை வைத்தோம். அப்போதிருந்துதான் தமிழ் நாடு அரசியல்வாதிகளின் செல்வாக்கு ஆரம்பித்தது.

**தனிநாடு கொள்கையுடையோர் மாற்றங்களை ஏற்கவில்லை**

அதற்குப் பிறகு தமிழ் நாட்டில் என்ன பிரச்சினை இருக்கிற என்பதை நாங்கள்தெரிந்து கொண்டோம். திராவிடர் கழகத்தை ஆரம்பித்த பெரியார் வடக்கே டில்லியிடம் இருந்து சுதந்திரம் பெற விரும்பினார். ஆந்திரா, கேரளா, தமிழ்நாடு ஆகியவை வடக்கிலிருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார். இந்த சமூக அரசியல் பின்னணியில் இருந்துதான் அண்ணாத்துரையும் (தமிழ்நாடு முன்னாள் முதல்வர்) கருணாநிதியும் வந்தார்கள். அந்த இயக்கம் தோல்வி அடைந்துவிட்டது (தனித் தமிழ்நாடு இயக்கம்). ஆனால் அந்தக் கொள்கையை உடையவர்கள் இன்றும் தமிழ் நாட்டில் உள்ளனர். மாற்றங்களை அவர்கள் ஏற்கவில்லை; ஆனால் உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது.

எங்களுக்குக் கனவுகள் இருக்கலாம். ஆனால் அது சாத்தியமாகுமா இல்லையா என்பதை நாம் மதிப்பிட வேண்டும். கணக்கீடுகள் அவசியம். ஆனால், கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் திராவிடர் கழகம், பெரியார் போய்ச் சேர்ந்த பின்னரும் கூட தனது கொள்கைகளை பிரபாகரன் போன்றவர்களிடம் கையளித்துக் கொண்டே இருக்கிறது. குறிப்பாக பிராமண எதிர்ப்பாளர்களிடம் இந்தக் கொள்கை கையளிக்கப்படுகிறது. அதேபோன்று பிரபாகரனின் பிராமண எதிர்ப்புக் கொள்கையும் பிரச்சினைகளுக்கு உள்ளானது.

இந்தக் களச் சூழலில் பிரபாகரனை மிகப் பெரிய கதாநாயகனாக தமிழக அரசியல்வாதிகளே ஆக்கினார்கள். பழம்பெரும் தமிழ் அரசர்களுடன் பிரபாகரனை அவர்கள் ஒப்பிட்டார்கள். அதனால் தான் அவர் ராஜீவ் காந்திக்கு எதிராக இத்தகைய குற்றத்தை அரங்கேற்றினார்.

கே: ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு, ஏதோ ஒரு வகையில் கொள்கை ரீதியாகத் திராவிட முன்னேற்றக் கழகமும் காரணமாக இருந்தது என்று நீங்கள் சொல்கிறீர்களா?

ப: இதற்கு ஆம் என்று நான் பதிலளிக்க முடியாது. ஆனால், பிரபாகரன் மீது திமுகவின் செல்வாக்கு எப்படி இருந்தது என்பது உங்களுக்கே தெரியும். அவர்கள் (தமிழக அரசியல்வாதிகள்) பிரபாகரன் பிராமணர்களுக்கு எதிரானவர் என்று எண்ணினார்கள். அதனாலேயே அவர் (பிரபாகரன்) இந்தியப் பிரதமரை வெறுத்தார். அவர் (ராஜீவ்) ஓர் இளம் தலைவர்; விரைவாக எல்லாம் நடக்க வேண்டும் என்று நினைப்பவர். எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக எமது பிரச்சினையை முடிக்க வேண்டும் என்று அவர் நினைத்தார்.

**வைகோ வன்னிக்கு எப்படி வந்தார்**

கே: பிரபாகரனின் அருகே வைகோ அமர்ந்திருக்கும் ஒளிப்படங்கள் பல உண்டு. எப்படி அவரால் வன்னிக்கு வரமுடிந்தது?

ப: அந்தச் சமயத்தில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததுடன் திமுகவிலும் இருந்தார் என்று நினைக்கிறேன். கட்சிக்குள் அவருக்குப் பிரச்சினைகள் இருந்தன. கருணாநிதிக்குப் பின்னர் கட்சியின் தலைவராக வருவதற்கு அவர் விரும்பினார். ஆனால், கட்சிக்குள்ளே சிலர் அவரை விரும்பவில்லை. அடுத்த தலைவராக ஸ்டாலின் வருவதையே அவர்கள் விரும்பினர். எனவே புலிகளை அடிப்படையாக வைத்து புகழ் பெறுவதற்கு வைகோ விரும்பினார். அவருக்குப் புலிகளின் ஆதரவு தேவையாக இருந்தது. ஏனென்றால் தமிழ் நாட்டு மக்கள் உணர்வு பூர்வமானவர்களாக இருந்ததுடன், அவர்கள் புலிகளின் பின்னால் அணிதிரண்டிருந்தார்கள். அதனால் சட்டத்தைப் புறக்கணித்து விட்டு வைகோ இங்கு வந்து பிரபாகரனைச் சந்தித்தார்.

தன்னைச் சந்திக்கும் வரைக்கும் வைகோ வருகிறார் என்பதோ அதிலும் கருணாநிதியின் அனுமதியின்றி வருகிறார் என்பதோ பிரபாகரனுக்குத் தெரியாது. அவர் ஆச்சரியப்பட்டதுடன், எப்படி கருணாநிதியின் அனுமதியின்றி வரலாம் என்றும் கேட்டார்.

விடயம் என்னவென்றால், அது வைகோவின் தனிப்பட்ட விருப்பால் நடந்தது. சில மனிதர்கள் தமக்கென தனியான நிகழ்ச்சி நிரலைக் கொண்டு செயற்படுகிறார்கள்.

நீங்கள் பாருங்கள் ஜெயலலிதாகூட அப்படித்தான். இது மாறும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அதனை மாற்றும்படி அவர்களிடம் கேட்கலாம்.

கே: மதிமுக எப்படி? நீங்கள் எப்படி மதிமுகவுக்கு ஆதரவளித்தீர்கள்?

## தமிழில்: ரேணு பிரேம்

ப: வைகோவும் வேறு சில மதிமுக நாடாளுமன்ற உறுப்பினர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் எமக்கு மிக நெருக்கமானவர்கள். கருணாநிதி ஒரு மூத்த அரசியல்வாதி. ஆனால் அவர் கூட புலிகள் என்ற துருப்புச் சீட்டைக் காலத்துக்குக் காலம் பயன்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார். ''நான் பிரபாகரனுக்கு நெருக்கமானவன்'' என்று சொன்னால் அவருக்குக் கொஞ்சம் வாக்குகள் கிட்டும். அவரது கட்சி மிகப் பெரியது; இருந்தாலும் அவருக்கு வேண்டியதெல்லாம் வாக்குகள் மட்டுமே.

கே: ஜெயலலிதா பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: அவர் மிகக் கெட்டிக்காரர். சிறந்த கல்வியறிவு கொண்ட பெண். எல்லாவற்றையும் எப்படிக் கையாள்வது என்பது அவருக்குத் தெரியும். அவர் முதலமைச்சராக வரக்கூடும்... காத்திருந்துதான் பார்க்க வேண்டும். மக்களுடைய ஒரே பலம் அவர்தான்.

கே: விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்குகளில் ஒன்றாக அவர் எப்போதாவது இருந்திருக்கிறாரா?

ப: அது அவருடைய எண்ணம். சிலசமயம் புலிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அவர்கள் முயன்று பார்த்திருக்கக்கூடும். ஏனென்றால் அவர் எப்போதுமே புலிகளுக்கு எதிரானவராகத்தான் இருந்திருக்கிறார். புலிகளுக்கு எதிராகவே எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார். எல்லோருக்குமே தெரியும் புலிகள் தங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்யவே நினைப்பார்கள் என்பது.

(தொடரும்)

## இதுதான் இராமாயணம்



இராமாயணத்தில் தசரதன் என்று ஒரு பெயர். இராவணனுக்கு தசக்கிரீசவன் என்று பெயர். தசரதன் புதல்வன் இராமன். தசக்கிரீவனை அவன் வென்றான் என்பது கதை.

இராவணனைத் தசக்கிரீவன் என்றால் என்ன பொருள் தெரியுமா? பத்துத்தலை உடையவன் என் பது தான். யாராவது பத்துத் தலையோடு இருக்க முடியுமா? இன்றைக்கு வகுப்பறையில் போய் இராமாயணம் சொல்லி இராவணனுக்குப் பத்துத் தலை என்றால் மாணவர்கள் கேலி பேசுவார்கள். கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள்.

''..... பத்துத் தலை என்றால் வரிசையாக நேர்கோடாக இருந்ததா? கரகம் மாதிரி ஒன்றுக்கு மேல் ஒன்றாக இருந்ததா? வட்டமாக ஒன்று பின்னால் ஒன்று இருந்ததா? என்பார்கள். ''எப்படி இருந்தால் உனக்கென்ன?'' என்று ஆசிரியர் பதில் கேள்வி கேட்டால் நியாயமான காரணங்கள் சொல்வார்கள். எப்படிக் கற்பனை பார்த்தீர்களா?

புராணம் சொல்கிறவர்கள் பொறுப்பாகச் சொல்ல வேண்டிய காலம் இது. பத்துத்தலை என்றால் என்ன பொருள்? மனிதனை ஆட்டிப் படைப்பவை பொறிபுலன்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி அவற்றில் நுகரும் இன்பச் சுவைகள். இவை பத்தும் தலை விரித்தாடினால் அவன் இராவணன். அதாவது இந்திரியங்களை அல்லது பொறிபுலன்களை அடக்க முடியாமல் தலை விரித்தாடுபவர்கள் எல்லோரும் இராவணர்களே.

வாயால், நாசியால், செவியால், உடம்பால், கண்களால் எதையாவது அனுபவிக்க வேண்டும் என்று கட்டுப்பாடே இல்லாமல் வாழ்பவர்கள் இராவணர்கள். இதற்கு நேர் மாறாகப் பத்து இந்திரியங்களையும் பொறிபுலன்களையும் ஓட விடாதபடி அடக்கியவன் தசரதன். அதாவது ஆத்ம இராமன். தசரதன் என்றால் பத்து ரதங்கள். அவற்றை அடக்கியவன் தசரதன். அவனது வெற்றியே இராம ஜெயம்.

ஆத்ம ஞானம் பெற்று வெறிபிடித்து தலைவிரித்தாடும் இந்திரியங்களை அடக்குதலே இராம இராவண யுத்தம். எவ்வளவு ஆழமான செய்தி பாருங்கள். உடனே பொறிபுலன்களை, இந்திரியங்களை மட்டும் என்று வெறுக்கக் கூடாது. அவை சக்தி மிக்கவை. அபரிதமான பலன் உடையவை. அவற்றை ஆள வேண்டுமே ஒழிய வெறுக்க முடியாது.

இந்திரியங்களின் சக்தி கருதியே அவற்றைப் பத்துக் குதிரைகளையுடைய ரதம் என்கிறது இராமாயணம். குதிரைகள் தேரை விரைவாக இழுக்கும் வலிமை உடையவை. கொஞ்சம் ஏமாந்தால் தேரை அதள பாதாளத்தில் தள்ளும் ஆபத்தும் உடையவை. பத்து இந்திரியங்களையும் மோட்சம் என்ற இலக்கை நோக்கிச் செலுத்தும் பலமுடையது தியானம் மட்டுமே.

குதிரைகள் தேரைக் கவிழ்க்கும் அபாயம் உடையவை என்பதால் கழுதை மாதிரி வேறு எதனையும் பூட்டினால் ஆபத்து இல்லை. ஆனால் பயணம் நிகமும் உத்தரவாதமும் இல்லை. எனவே இந்திரியங்கள் ஆபத்தானவை. அதே சமயத்தில் உங்களை மோட்சத்தில் செலுத்தும் வலிமை உடையவை. இந்திரியங்கள் தலை விரித்தாடினால் 'எயிட்ஸ்' எனும் நோய் வீட்டில் உங்களை வீழ்த்தும். கட்டுக்குள் வைத்திருந்தால் பிரமச்சாரியம், ஞானம் என்கிற மோன மோட்சத்துள் புகுத்தும். இதுவே இராமாயணத்தின் உட்பொருள்.

ஆனால் வாழ்வில் வீணாகிச் சீரழிந்தவர்கள் தங்கள் வீழ்ச்சிக்கு இந்திரியங்கள்தான் காரணம் என்று காரணம் காட்டித் தப்பிக்க முடியாது. இந்திரியங்களை அப்படி ஆடவிட்டதால்தான் வீழ்ச்சிக்குக் காரணம் என்று ஒப்புக் கொள்ளவேண்டும். ஓஷோ ஒரு நகைச்சுவை சொல்கிறார்.

குடித்துக் குடித்துக் குடி வெறியில் கொலை, திருட்டு, கற்பழிப்பு என்று பல குற்றங்கள் செய்து அகப்பட்டான் ஒருவன். தீர்ப்பு எழுதிய நீதிபதி வருத்தத்துடன் '' நான் உன்னை எப்படிக் குற்றவாளி ஆக்குவேன்? சாராயம், அற்கஹோல் இவை தான் உன் எல்லாக் குற்றங்களுக்கும் காரணம்'' என்றார். அவன் மகிழ்ச்சியுடன் ''எல்லா மூடர்களும் நான்தான் குற்றவாளி என்றபோது எஜமான் நீங்கள் மட்டும்தான் நானல்ல.... சாராயம்தான் குற்றவாளி என்று சரியாகக் கண்டுபிடித்தீர்கள். என் வாழ் நாளில் நான் சந்தித்த முதல் அறிவாளி நீங்கள்தான்'' என்றான்.

எமது இந்திரிய ரதங்களை எமது ஆத்ம ராமன் ஜெயிக்க வேண்டும். மாறாக இராவணன் போல் பத்துத் தலை விரித்தாடினால் அழிவுவரும். இதுதான் இராமாயணம். இந்த இராமாயணத்தை எந்தப் பெரியாரும் எதுவும் செய்ய முடியாது.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் சிறுவர்களுக்கான அருணலு கணக்கு வைத்திருந்தவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கொமர்ஷல் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை சிரேஷ்ட முகாமையாளர் எ.ஆர்.குலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பரிசளிப்பு நிகழ்வில் 2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் சித்திபெற்ற 10 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ம-311)



# சுயகற்றலில் ஈடுபட்ட மாணவர்களே வெற்றிபெற்றவர்களாக விளங்குகின்றனர்

## ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், மே 28

சுயகற்றலில் ஈடுபட்ட மாணவர்களே பரீட்சைகளில் வெற்றி பெற்றவர்களாக விளங்குகின்றனர். சுயகற்றல் மூலமே சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கற்கமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு மாணவத் தலைவன் கு.யசிந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று உயர்தரமாணவர்கள் ஒரு பாடத்தை 5,6 ஆசிரியர்களிடம் கற்று அதிக நேரத்தை வீணடிக்கின்றார்கள். உண்மையில் கற்றல் என்பது குறித்த விடயத்தை விளக்கிகொள்வதில் தான் உள்ளது. இதற்காக மாணவர்கள் நேரத்தை ஒதுக்கி ஒய்வாக இருந்து மீட்டலில் ஈடுபடுவதன் ஊடாக நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

இதனைப் படிப்படியாக மேற்கொள்வதன் ஊடாகத் தேர்வுகளில் வெற்றிபெறுவது இலகுவாகும்.

உயர்தரப் பரீட்சை ஒரு மாணவனின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிக்கும் முக்கிய தேர்வு ஆகும்.

அந்த வகையில் இருக்கும் காலத்தைத் திட்டமிட்டு கற்க வேண்டும்.

தேவையற்ற பொழுது போக்குகளில் ஈடுபட்டுக் காலத்தைக் கடத்தி பரீட்சை நெருங்கும் காலத்தில் அவசர அவசரமாகக் கற்றுப் போதிய ஆயத்தமின்றி பதற்றத்தில் தேர்வை எழுதுவதால் உரிய இலக்கை எட்டுவது கடினமாகிவிடும்.

எனவே, மாணவர்கள் தமது எதிர்கால வாழ்வின் தேவை கருதியும் பெற்றோரின் கனவுகளை நிறைவேற்றவும் பொறுப்புணர்வுடன் தேர்வுகளை எழுத வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் பாடசாலை முதல்வர் இ.இராஜமகேந்திரன் பிரதி அதிபர் செல்வி வ.சிவலீலாதேவி ஆகியோரும் உரையாற்றினர். (ம-72)

# பாடசாலைகளில் அருங்காட்சியகங்கள் அமைக்க முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், மே 28

பாடசாலைகளில் நூலகங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்படுகிறதோ அதே போல் அருங்காட்சியகங்களை அமைப்பதற்கும் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும். எமது வரலாற்றையும் தொன்மையையும் பேணுவதற்கு இது அவசியமாகிறது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்லைக்கழக அருங்காட்சியக விரிவுரையாளர் ஜீவரட்ணம் ஜெயதீஸ்.

ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். இந்துக்கல்லூரியில் அண்மையில் 'அருங்காட்சியகங்கள்' முற்கற்பிதங்களும் யதார்த்தங்களும் என்னும் தலைப்பில் முன்பள்ளி ஆசிரியர் களுக்குக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

'அருங்காட்சியகம்' என்ற பதத்துக்கு ஒவ்வொரு சாராரும் ஒவ்வொரு கருத்துக்களை முன் வைப்பர். ஆயினும் பொதுவாக உண்மைப் பொருள்களைப் பேணுவதோடு ஒருமைப்பாட்டைப் பேணுவதே அதன் கருத்தாக உள்ளது.

தொன்மையான பொருள்களைச் சேரிகரிக்கும் இடமாகவும், ஓர் ஆடம்பரமான சுற்றுலா மையமாகவும் அகழ்வாராய்ச்சியின் பொருள்களைப் பேணும் இடமாகவும் அருங்காட்சியகம் விளங்குகிறது.

வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் அருங்காட்சியகத்தைப் பேணவும், பொருள்களைச் சேகரிக்கவும் இதை ஒரு தொழிலாகவே கொண்டு செயற்படுகின்றனர். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வோர் அருங்காட்சியகங்கள் உள்ளன. இலங்கையில் காலி, அம்பாந்தோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தான் அருங்காட்சியகம் அமைத்துப் பேணப்பட்டு வருகிறன.

விவசாயம், சுகாதாரம், உணவு, நாணயம், கைவினை சார்ந்த உற்பத்திகள், நாடகம், இசை, அரங்கம் ஆகியவையும் அருங்காட்சியகங்களில் பேணப்படவேண்டியவை.

நம்மவர்கள் பண்பாடுகள், கலாசாரங்கள் பற்றிப் பேசுவதோ, சிந்திப்பதோ கிடையா. எமது தொல்பொருள் சொத்துக்களை உரிமை கோருவது. சமுதாயக் கட்டமைப்பில் இருந்து விடுபட்டுள்ளனர்.

தென்னிலங்கையிலிருந்து வரும் வியாபாரிகளிடம் எமது பாரம்பரிய சொத்துக்களைக் கொடுத்து விடுகின்றனர். பணத்துக்காக அதன் அருமையை உணராது விற்கின்றனர்.

அருங்கலைகளை மீள் வழக்கத்துக்குக் கொண்டு வரவேண்டும். பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், வீடுகள் மற்றும் நூல் நிலையங்கள் ஆகிய இடங்களில் ஒரு பகுதியை அரும் பொருள்களைப் பேணும் இடமாக மாற்றவேண்டும்.

மாணவர்களிடையே சரியான கல்வியைப் புகட்டுவதன் மூலம் எமது பாரம்பரிய சொத்துக்களை ஆவணப்படுத்திப் பேணக் கூடிய மனோநிலையை ஏற்படுத்த முடியும்- என்றார்.(ம-311)

# சைவ வித்தகர் கற்கை நெறி

யாழ்ப்பாணம், மே 28

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 இளைஞர்களுக்கு யாழ்.நல்லூரில் அகில இலங்கை இந்து மாமன்றம் நிறுவியுள்ள இந்து ஆராய்ச்சி நிலையத்தில் இலவச தங்குமிட வசதியுடன் கூடிய ஓர் ஆண்டு பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

சமய பிரசாரத்திலும் சிவ தொண்டிலும் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதுடன் ஆங்கிலம், கணினி அறிவும் வழங்கப்படும். இந்தக் கற்கை நெறி நிறைவு பெற்றதும் இந்து சமய விவகார திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சை நடத்தப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தக் கற்கை நெறியை முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகும் சிவதொண்டர் மாநாட்டின்போது ஆரம்பித்து வைப்பார். செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், இந்தப் பயிற்சியின் இயக்குநர், யாழ்.பல்கலைக்கழகப் பேரசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் இந்தப் பயிற்சியை நடத்துவார்கள். (த)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 28

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஆயுர்வேத பாதுகாப்புச் சபை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களைக் கலந்துகொள்ளுமாறு வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்துள்ளார். (ம-9)

# தொழில்நுட்ப கற்கைநெறி

இலங்கை தொழிற் பயிற்சி அதி காரசபை கைதடி, தொழிற் பயிற்சி நிலையத்தில் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு ஆர்வமுடைய இளைஞர், யுவதிகள் எதிர்வரும் ஜூன் மாதம் நான்காம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக ஏ-9 வீதி, கைதடியில் உள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தருமாறு நிலையப் பொறுப்பதிகாரி சு.கிரிதாஸ் அறிவித்துள்ளார். (ம-313)

# கரவெட்டிக் கோட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

வடமராட்சி, மே 28

கரவெட்டிக் கோட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகளின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியது. வருமாறு:

**கட்டுரை வரைதல் - இலக்கியம் நயத்தல் - பிரிவு -4**

ஈ.தர்சினி (விக்னேஸ்வரக் கல்லூரி), இ.ஸ்ரீதிவாகரன் (நெல்லியடி ம.ம.வி.), செ. கீர்த்தனா (இமையாணன் அ.த.க.பா.)

**இலக்கணப்போட்டி - பிரிவு -4**

த.சஞ்சியா (வல்வெட்டி இ.த.க.பா.), மு.சஞ்சிகா (ஞானாசாரியர்), யோ.ஸ்ரீநங்கை (தேவரையாளி இ.க.).

**குறுநாடக ஆக்கம் - பிரிவு - 4**

ஸ்ரீ.கார்த்திக் (நெல்லியடி ம.ம.வி.), தி.நிவேதா (இமையாணன் அ.த.க.பா.).

**கவிதை ஆக்கம் - பிரிவு - 4**

செ.தர்சன் (நெல்லியடி ம.ம.வி.), சி.செல்வந்தினி (வல்வெட்டி இ.த.க.), ந.நிலோஜினி (ஞானாசாரியர்).

**சிறுகதை ஆக்கம் - பிரிவு - 4**

சீ.ஜசிந்தா (ஞானாசாரியர்),எ.பார்த்திபா (கரணவாய் ம.வி.), நி.சாமந்தி (நெல்லியடி ம.ம.வி.)

**பேச்சு - பிரிவு 4**

லி.விதுர்சா (நெல்லியடி ம.ம.வி.), ப.நிரோஜினி (இமையாணன் அ.த.க.பா.), பா.சந்த் குமார் (சுப்பர்மடை அ.த.க.பா.)

**பாவோதல் - பிரிவு - 4**

கி.சாயிரூபன் (நெல்லியடி ம.ம.வி.), செ.நீலாம்பரி (உடுப்பிட்டி ம.கல்லூரி), அ.கீர்த்திகா (ஞானாச்சாரியர்)

**தமிழியற் கட்டுரை (இலக்கியம் நயத்தல்)- பிரிவு - 5**

அ.அருச்சுனா (உடுப்பிட்டி மகல்லூரி), லோ.தேனுஷா (விக் னேஸ்வரக் கல்லூரி), ந.துவாரகன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

**இலக்கணப்போட்டி - பிரிவு- 4**

கி.கோபிகா (விக்னேஸ்வரக் கல்லூரி), பா.அபிராமி (வடமராட்சி ம.ம.க.), பா.சந்திரிக்கா (தேவரையாளி இ.க.).

**திறனாய்வுப் போட்டி பிரிவு- 5**

ஜெ.ஜெசிதா (உடுப்பிட்டி ம. கல்லூரி), பு.ஆர்த்தியா (வடமராட்சி ம.ம.க.), வி.விஸ் ணுப்பிரியா (விக்னேஸ்வரக் கல்லூரி).

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை கொண்டுவர அரசு அஞ்சுவது ஏன்?

## ஐ.தே.கட்சி கேள்வி

கொழும்பு, மே 28

தகவல் சுதந்திர சட்டமூலத்தை அரசு துரித கதியில் நாடாளு மன்றத்துக்குக் கொண்டுவர வேண்டும். தகவல் சுதந்திர சட்ட மூலத்துக்கு அரசு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டியதன் அவசியம் என்ன என்று தெரியவில்லை. எட்டு மாதங்களுக்கு முன்னர் இதனைக் கொண்டு வருவதாக தெரிவித்த அரசு இதனைக் கொண்டுவருவதற்கு ஏன் அஞ்சுகின்றது?

ஐக்கிய தேசியக் கட்சி, இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது.

அரசைக் கவிழ்க்கவோ, அசௌகரியத்துக்கு உள்ளாக்கவோ நாம் முயற்சி செய்யவில்லை. ஜனநாயக நாடொன்றிலுள்ள மக்களுக்கான உரிமையை பெற்றுக்கொடுக்கவே எமது கட்சி முயலுகின்றது.

நாடாளுமன்றத்தில் மக்கள் தொடர்பாக கலந்துரையாடும் உரிமையை வழங்காவிட்டால், அந்த நாட்டில் ஜனநாயகம் இருக்க முடியாது. எனவே அரசு தகவல் சுதந்திரம் தொடர்பான உத்தேச சட்டமூலத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும்.

- இவ்வாறு ஐ.தே. கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் காலை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற போது கரு ஜெயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தகவல் பெற்றுக்கொள்ளும் சுதந்திரத்துக்கான சட்டமூலத்தை 2004 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்தது.

பல ஜனநாயக நாடுகளில் தகவல் பெற்றுக்கொள்ளும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உலகில் 85 நாடுகளில் தகவல் சுதந்திரத்தால் மக்கள் நன்மையடைந்து வருகின்றனர். இன்னும் 16 நாடுகளில் இதனை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளில் இந்தச் சட்டம் அமுலில் உள்ளது. அதனால்தான் 2004இல் நாம் இதன்ன முன்வைத்தோம். அத்துடன் அந்த நேரத்தில் எதிர்க் கட்சியாக இருந்த தற் போதைய அரசுடனும் நாம் இது தொடர்பில் கலந்துரையாடினோம்.

ஐ.தே.கட்சி அரசு 2004 ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டதும் இந்தச் சட்டமுலம் செல்லுபடியற்றதாகிவிட்டது. இந்தச் சட்டமூலத்தை எனது தனிப் பட்ட சிறப்புரிமையைப் பயன்படுத்தி கடந்த செப்ரெம்பர் மாதம் மீள நாடாளுமன்றத்துக்கு கொண்டுவந்தேன். இதனை வாபஸ் வாங்குமாறு அமைச்சர் தினேஷ் குணவர்தன என்னிடம் கூறினார்.

அத்துடன் அரசு இதற்குப் பதிலாக வேறொரு சட்டமூலத்தை கொண்டுவரவுள்ளது என அவர் குறிப்பிட்டார். நான் அதனை மீளப் பெற்றுக்கொண்டேன். இதனால் சிவில் சமூகத்தைச் சேர்ந்த பலரது விமர்சனங்களுக்கு நான் உள்ளானேன்.

தகவல் சுதந்திர சட்டமூலத்துக்கு அரசு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது? 8 மாதங்களுக்கு முன்னர் இதனை கொண்டுவருவதாகத் தெரிவித்த அரசு இதனை கொண்டுவருவதற்கு ஏன் பயப்பட வேண்டும்?

நாடாளுமன்றத்தில் மக்கள் தொடர்பாக கலந்துரையாடும் உரிமையை வழங்காவிட்டால், அந்த நாட்டில் ஜனநாயகம் இருக்க முடியாது. எனவே அரசு தகவல் சுதந்திரம் தொடர்பான உத்தேச சட்டமூலத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் -என்றார்.

## சுற்றாடல் பராமரிப்பில் தமிழ்ப் பாடசாலைகள் மத்திய மாகாணத்தில் தெரிவு

கொழும்பு, மே28

மத்திய மாகாண தமிழ்ப் பாடசாலைகள் மத்தியில் சிறந்த சுற்றாடல் பராமரிப்பை நடைமுறைப்படுத்திய ஒன்பது பாடசாலைகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

கம்பளை இந்துக் கல்லூரி, நுவரெலியா மராயா தமிழ் வித்தியாலயம், ஹற்றன் கார்பெக்ஸ் தமிழ் வித்தியாலயம் என்பன முதலாம் இடத்தையும், ஹற்றன் பினோயா தமிழ் வித்தியாலயம், மாத்தளை கணேஸ்வரா தமிழ் வித்தியாலயம், பேராதனை அப்லண்ட் தமிழ் வித்தியாலயம் என்பன இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

ஹற்றன் புளும்பீல்ட் தமிழ் வித்தியாலயம், வத்தேகம கந்தகெடிய தமிழ் வித்தியாலயம், மாத்தளை கந்தேனுவர தமிழ் வித்தி யாலயம் ஆகியன மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## போதையில் வாகனம் செலுத்திய 22 சாரதிகள் கண்டியில் கைது

கண்டி, மே 28

பேராதனை பொலிஸ் வலயத்துக்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, கண்டி வீதிச் சோதனை மோட்டார் சைக்கிள் செயலணிப் பிரிவு மேற்கொண்ட திடீர் வீதிச் சோதனைகளின்போது மதுபோதையில் வாகனம் செலுத்திய 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் நாட்டின் பிரபல மதுபானத் தயாரிப்பு நிறுவனமொன்றின் அதிகாரிகள் எனவும் தெரியவருகிறது. கைதானவர்களில் ஐவருக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

கண்டி மாவட்ட வீதிச் சோதனை செயலனிப் பிரிவுப் பொறுப்பதிகாரி சரத் விஜேசிங்க தலைமையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச)

## மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா?



முயற்சி திருவினையாக்கும்: நோர்வே அரசியலமைப்பு தின நிகழ்வு நோர்வே தூதரகத்தினால் கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நாடாளு மன்ற உறுப்பினர்களான ரவிகருணாநாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் சந்தித்து கலந்துரை யாடுகின்றனர். அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள சஜித் பிரேமதாஸ ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (ச)

## லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வேகமடைகின்றன

கொழும்பு, மே 28

தற்போது மீண்டும் புத்துயிர் பெற்றுள்ள லஞ்ச, ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் சம்பந்தமான ஆணைக்குழு தனக்குக் கடந்த காலங்களில் கிடைத்த முறைப்பாடுகளில் விசாரணை செய்யவேண்டிய முக்கியமான முறைப்பாடுகள் குறித்து கவனம் செலுத்தி வருகின்றது.

லஞ்ச, ஊழல் மற்றும் துஷ்பிர யோகம் சம்பந்தமான ஆணைக்குழு செயலிழந்து இருந்த காலப் பகுதியில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் விசாரணைக்கு எடுக்கக்கூடிய முறைப்பாடுகளைத் தேர்ந்தெடுப் பதற்காக விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் புதிய தலைவரான ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் டீ.ஜே.டி.பால பட்டபெந்தி கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சில முறைப்பாடுகள் ஏற்கனவே ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்திய சுற்றுலாப் பயணிகளின் விஸா வழங்கலில் புதிய நடைமுறை

கொழும்பு,மே28

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குப் பின் இலங்கை வர உள்ள இந்திய சுற்றுலாப் பயணிகள் இணையம் மூலம் விஸாவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் அல்லது இலங்கைத் தூதரகத்துக்குச் சென்று விண்ணப்பிக்க வேண்டும் என்று இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 80 நாள்களுக்குள் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படும். இந்திய சுற்றுலாப் பயணிகள் மாத்திரம் அன்றி இன்னும் 78 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இப்புதிய நடைமுறைக்கு அமையவே விஸா எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர்,மலேசியா ஆகிய இரு நாடுகள் மாத்திரம் இலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையத்தில் விஸா வழங்குகின்றன, எனவே சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை தொடர்ந்தும் விமான நிலையத்தில் வைத்து விசா வழங்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## மாவன்னல்ல வைத்தியசாலை விரைவில் கணினி மயமாகும்

கொழும்பு, மே 28

வைத்தியசாலைகளை கணினி மயப்படுத்தும் தேசிய திட்டத்தில் மாவன்னல்ல ஆதார வைத்தியசாலை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளின் தரவுகள், நோயாளிகளின் தகவல்கள் ஆகியவற்றைத் திரட்டி கணினிமயப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மாவனல்ல ஆதார வைத்தியசாலைக்கு புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான வைபவம் சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர் அதாவுட செனவிரத்ன, அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கணினி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஊடாக உலகிலுள்ள எந்த ஒரு வைத்திய நிபுணரின் சேவையையும் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றும், உலகின் முன்னணி தொழில்நுட்ப முறைகள் நாட்டில் விரைவில் அமுல்படுத்தவுள்ளன என்றும் அமைச்சர் ரஞ்சித்சியம் பலாபிட்டிய தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் இந்த தொழில்நுட்பம் ஏற்கனவே கரவனல்ல வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வீதிகள் புனரமைப்பு

மட்டக்களப்பு, மே28

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமப்புற வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துள்ளது. உணவுக்காக வேலை எனும் இந்தத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் வீதி புனரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை அலுவலக பொது சன தொடர்பு பணிப்பாளர் டிலூகா பியசேன கலந்து கொண்டார்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 190 குடும்பங்களும் இந்தப் புனரமைப்புப் பணியில் ஈடுபட்ட[illegible] (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தின் முதற் பெண் கவிஞர்



(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈழத்தில் 1925 ஆம் ஆண்டு பண்டிதை பத்மாசனியின் புலோலி பசுபதீசுவரர் பதிற்றுப் பத்தந்தாதி பற்றிய தகவல் வெளிவந்ததையடுத்து ஈழத்தின் முதலாவது பெண் புலவருக்குரிய மதிப்பை மலையகத்தைச் சேர்ந்த திருமதி மீனாட்சி நடேசையரே பெறத் தொடங்கினார்.

100 பாடல்களைக் கொண்ட மேற்படி அந்தாதியில் கடவுள் வாழ்த்தாக ஒரு பாடலும் உண்டு.

ஒரு பாடலின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதற்பகுதியாக வருமாறு பாடப்பெறுவது அந்தாதிப் பிரபந்தம் ஆகும். பத்மாசனி 22 ஆவது வயதிற் பாடி வெளியிடப்பட்ட இந்த நூல் 1925, 1997, 2000 ஆம் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. 2000 ஆம் ஆண்டில் வெளிவந்த 3 ஆம் பதிப்புக்கு உரையும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நூலில்

1. புலோலி நகர்ச்சிறப்பு
2. பசுபதீஸ்வரர் வீற்றிருக்கும் கோயில் சிறப்பு
3. பசுபதீஸ்வரர் அருட் சிறப்பு

ஆகிய மூன்று விடயங்களும் முதன்மைப்படுத்தப் பட்டு மீண்டும் மீண்டும் அழுத்திக் கூறப்பட்டுள்ளன.

சீரார் புலோலி, மாலயன் தொழும் மடைக்கயல் வாழை பாயும் வான்புகழ் புலோலி, மாயாத நல்வளமே செறி புலோலி என்பன புலோலி நகரைச் சிறப்பிக்க அவர் பயன்படுத்திய சில அடைமொழிகளாகும்.

பசுபதீஸ்வரர் கோயிலில் அடியவர்கள் மலரிட்டு வணங்குவதும் வழிபாட்டில் தான் ஒன்றியிருக்கும் நிலையும் வழிபாட்டால் ஏற்படும் நன்மைகளும் இங்கு பக்தியுணர்வுடன் பாடப்பெற்றுள்ளன.

தேவார திருவாசகங்களிலும் ஏனைய சமய இலக்கியங்களிலும் பரீச்சயமுள்ள பத்மாசனி அம்மாளின் பாடல்களில் அவற்றின் செல்வாக்கை நன்கு உணர முடிகின்றது. சிறப்பாக மாணிக்கவாச கரதும் காரைக்கால் அம்மையாரதும் பதிப்புக்கள் அதிகமாகவே உள்ளன.

*வேண்டுவார்க் கருளுவானே வினையினேன்*
*உன்பாதத்தைப்*
*பூண்டிடும் அன்பினோடு போற்றவும் செய்ய மாட்டேன்*
*தீண்டுதற்கு அரிய உந்தன் திருவுரு நினைத்தல்*
*செய்யேன்*
*[பாடல் 24]*

*செய்வதொன்று அறியா நாயேன் தீவினைப்*
*பிறவிநோயே*
*உய்வதோர் வழியும் காணேன் உன்னருள் அதுவும்*
*பேணேன்* *[25]*

*அறிவில்லேன் அன்பில்லேன் வாய்மை ஆதி*
*அடுத்தகுணம் ஒன்றில்லேன் அடியார் கூட்டம்*
*செறிவில்லேன் இல்லையென வந்த பேர்க்கு*
*சித்தம் இரங்கிக் கொடுக்கும் திறமும் இல்லேன்*
*பிறிதில்லேன் பல வினையேன் ஆனாலும் நின்*
*பிரசமலர்ப் பதம் காட்டி ஆள்வாய் கண்டாய்*
*[43]*

என்னும் பாடற் பகுதிகள் இதற்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன.

இவர் வடமொழிப் புலமையும் உடையவராக இருந்தமையால் சில இடங்களில் வட சொற்களின் பயன்பாடும் தவிர்க்க முடியாததாகி உள்ளன.

*கொள்ளரிய சதுர்வேதப் ப்ரணவார்த்த*
*கோமள சந்திரவதன லளித நாத*
*தெள்ளு திராவிட கானப் பிர்ய மோக*
*திவாகர சந்திரமௌலீ சுவர யோக* *[50]*

என்னும்பாடல் அடிகள் வட மொழிச் செல்வாக்கைத் தெளிவுபடுத்துகின்றன.

இத்தகைய ஓரிரு பாடலடிகளை விட்டால் ஏனைய கவிதைகள் எளிமையான்வையாகவே காணப்படுகின்றன. தங்குதடையற்ற ஆற்றொழுக்கான கவிதை ஓட்டம் பொருட் புலப்பாட்டுக்கு ஏற்றவகையில் அறுசீர்க் கழிநெடிலடி விருத்தம், கலித்துறை கலி விருத்தம் ஆகிய யாப்புக்களை மாற்றி மாற்றிக் கையாளும் திறன் என்பவை இவரை ஈழத்தின் முதற்பெண் கவிஞராக மட்டு மன்றிச் சிறந்த கவிஞராகவும் கொள்ளலாம் என்பதையும் வலியுறுத்து கின்றன.

**ம.பா.மகாலிங்கசிவம்**

### 3. ஈழத்தின் முதற் பெண் மொழிபெயர்ப்பாளர்

மரபு வழித் தமிழ்ப்புலமையாளராகவும் வடமொழிப் புலமை நிறைந்தவராகவும் விளங்கிய பண்டிதை பத்மாசனி அம்மாள், ஆங்கில கவிதைகளை மொழிபெயர்த்ததன் மூலம் தமது மும்மொழிப் பாண்டித்தியத்தையும் வெளிப்படுத்தி உள்ளார்.

தொமஸ் கிரே (Thomas Grahy) என்பவர் இயற்றிய 'Elegy Written in a country churchyard' என்னும் கவிதையை 'ஒரு நாட்டுப் புறத் தேவாலயத்தில் எடுக்கப்பட்ட இரங்கற்பா' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இந்த மொழிபெயர்ப்புப் பாடல்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செந்தமிழ் சஞ்சிகையின் 25 ஆம் (1926- 1927), 26 ஆம் (1927-1928) தொகுதிகளில் வெளிவந்துள்ளன.

நாற்பத்தெட்டுப் பாடல்களில் அமைந்த இந்த மொழி பெயர்ப்பிற்கு பெருமளவான பாடல்கள் (42) அறுசீர்விருத்த யாப்பில் அமைந்துள்ளன.

(தொடரும்)

# சங்ககால மக்கள் வாழ்வியல் (இல்) ஆடல்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சங்ககாலப் போர் மரபை விளக்கும் கூத்துக்களில் குரவை, துணங்கை, வேலன் வெறியாட்டம் என்பன விளங்குகின்றன. அவற்றில் வேலன், வெறியாட்டு பற்றி சிறப்பாக நோக்கலாம்.

தெய்வம் ஏறி உணர்ச்சி மேலிட்டால் இந்த வெறியாட்டு நிகழ்ந்தமையால் இங்கு அமைப்பியலில் செம்மையைக் காணமுடியாது. நோய்வாய்ப்பட்ட மகளிரை அணங்குறு மகளிர், வெறி மகளிர் என்று கூறுவர்.

*"....படிஞர் தேய்ந்த பல் புகழ் தடக்கை*
*நெடுவோட்ப் போணங் தணிகுவள் இவள் என*
*முதுவாய் பெண்டிர் அதுவாய்க் கூற*
*கழம் இளைத்து கண்ணீர் சூட்டி*
*வளநகர் சிலம்பம் பாடிப் பலிகொடுத்து*
*உறுவைச் செந்தினை குருதியோடு தூ உஈ*
*முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்*
*ஆரம் நாற அருவிடைத் ததைந்த*
*சாரற் பல்பூ வண்டுபட சூடி*
*களிற்று இரை தேரீஇய பாவல் ஒதுக்கின்*
*....எழில் வேலற்கு*
*உவந்தமை கண்டே..."*

இந்தப் பாடலடிகள் அகநானூறிண் பாடல் (22) ஆகும். காதல் நோயால் உடல்மெலிந்த பெண்ணுக் குத் தெய்வக் குற்றம் நிகழ்ந்ததென்று முதிர் பெண்டிர் கூற வெறியாடலுக்குரிய களம் அமைக்கப்பட்டு, முருகனை நினைத்துப் பாடிப் பலிகொடுக்கப்பட் டிருக்க, பெண்ணின் தலைவன் அவர்களை அறியாமல் தலைவியிடம் வந்து அவளை அணைத்துக் காதல் நோய்க்கு மருந்திட்டுச் செல்ல, அவள் தெளிவடை யவே தெய்வக் குற்றம் நீங்கியதாக வெறியாட்டை ஏற் படுத்தியவர் நினைப்பர் என்பதாக வேலன் வெறி யாட்டு முறை பற்றி இதுபோன்ற பாடல் கூறியுள்ளது.

இது இவ்வாறு இருக்க, இன்னொரு முறையில் நோக்குவோமாயின் தீமை விளைவிக்கும் சக்திகளாய் இளம் பெண்களுக்கு ஏற்படும் நோயைப் பிரதான சமய தெய்வமாகிய முருகனையும் அவருக்குரிய மந்திர சடங்குகளையும் கொண்டு நிவர்த்தி செய்வ தாகும். இந்த நோய் நிவர்த்தி செய்யும் சடங்கான வெறியாட்டை நிகழ்த்துபவன் வேலன் எனப் படுவான். இன்றைய நிலையில் உள்ள உள நல மருத்துவரின் செயலையும் பெயரையும் அன்றைய வெறியாட்டு நிகழ்வும் வேலனும் பெறுகின்றன . அதே வேளை, பெண்கள் முருகனை நினைந்து வெறியாடி யதைப் பட்டினப் பாலை பின்வருமாறு கூறுகிறது.

*"செறி தெடி முன்கை கூப்பி செவ்வேள்*
*வெறி ஆடு மகளிர்......"*

*"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்*
*வெறியாட்டு அயர்ந்த காந்தமும் உறுவகை"*

என்பது தொல்காப்பிய குறிஞ்சி நிலப்பாடல் அடியாகும். குறிஞ்சி நில மக்கள் குமரக் கடவுளை நினைந்து வழிபட்டு வெறியாடுவர். இதனை ஆடும்போது வெறியாட்டுப் பறையும் தொண் டகப் பறையும் கொண்டு இசை முழக்கி ஆடுவர்.

போர்க் களத்தில் பிணங்களைத் திண்று பேய்கள் ஆடும் கூத்தும் பிணங்களை எரியூட்டி அதன் நிண நீரை உண்டு ஆடும் களவேள்ளி ஆடல்களும் மற்றும் இறந்த வீரனின் நினைவாக நடப்பட்ட நடு கைக்கல்லில் வழிபாடு செய்து ஆடும் நடுகை வழி பாடு ஆடல்கள் எனப் பலவகைச் சந்தர்ப்பங் களில் சங்க கால மக்கள் ஆடல் புனைந்த செய்தியைக் காணலாம்.

ஆடற்கலையின் ஓர் அங்கம் ஆடை, ஆபரண ஒப் பனை ஆகும். இந்த ஆடை, ஆபரண ஒப்பனைகளை சங்க காலத்து மகளிரும் மேற்கொள்ளத் தவறவில்லை.

*"கணங்குழை மகளீர் ஓடு....."*
*"மையுண்ட கண்ணரான ......"*
*"கிண்கிணி மணித்தாரோடு ஒலித்து ஆர்ப்ப"*
*"சீரார் செய்யிளை ஒலிப்பர்....."*
*"அவை புகழ் அரங்கின் மேல் ஆடுவாள்...."*
*அணுநுதல் வகை பெற செயரீஇய*
*வயந்தகம் போல......"*
*"சுடர்விரிந்தள்ள சுரி நெற்றிக்காறி....."*
*"மகரவாய் நுங்கிய சிகளிகை......"*

போன்ற பாடல் வரிகளின் ஊடாக அழகிய தோடு கண்ணிற்கு மை, சலங்கை - சிவந்த சலங்கை, நெற்றியில் அணியும் வயந்தகம் - நெற்றிச்சுட்டி, மீனின் வாயை ஒத்த மாலை, காப்பு போன்ற அணிகலன்கள் அந்தக் கால ஆடல் மகளிர் அணிந்து சபையோர் புகழ அரங்கின் மேல் ஆடினாள் என்று சங்க இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன. அதேபோல ஆடலுக்குப் பயன்படுத்தப் பட்ட இசைக் கருவிகள் பற்றிய செய்திகளை நோக்கும்போது சங்க கால இசை நிகழ்வு, நாட்டிய நிகழ்வு களில் குழல், யாழ், மிருதங்கம் போன்றன பயன்படுத்தப்பட் டமையை அறியலாம். மிருதங்கம்-மத்தளம் என்ற பெயரில் பயன்படுத்தப்பட்டாலும் மாச் சனை பயன் படுத்தப்பட்ட செய்தியைக் கொண்டு மிருதங் கத்தின் பயன்பாடே என்ற தெளிவைப்பெறலாம்.



*"மாச்சனை செறிந்த மத்தளத்தோடு*
*காண்பவருக்கு மகிழ்ச்சி பெருகுமாறு*
*யாங்கள் கூத்தாடினோம்..."*

*"மண்கணை மிளவோடு மகிழ் மிக தூங்க*
*தன் துறை ஊரர்ம் எம் சேரி வந்தென....."*

என்ற வரிகள்மிருதங்கபயன்பாட்டுக்கு ஆதராமாகின்றன.

இயற்கையோடு இசைந்து எழுந்த இசை வடிவங்கள் அதாவது மூங்கிற் துளையில் காற்றினால் எழுந்த நாதம், விழுகின்ற அருவி இசை, கலைமான் கூட்டத் தின் குரல் இசையும் பூஞ்சோலைகளில் வண்டுகளின் இசையும் ஒத்து ஒலிக்க அந்த இசையின் இனிமைக்கு மயில்கள் ஆடுகின்றன. இந்த இயற்கை அன்னையின் ஆடல் இசைக் கச்சேரியை அனுபவித்த சங்க மக்கள் வாழ்வியியல் அம்சமாகத் தமக்கான ஆடலையும் பாடலையும் தமது இன்ப, துன்பங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தித் தமதாக்கிக் கொண்டனர். இவை சங்ககால மக்கள் வாழ்வியலில் ஆடல்கள் ஆகின.

(முற்றும்)

**அ.உமாமகேஸ்வரி,**
உடுவில் தெற்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப் பூதாகரமான பெரிய விடயமாக வந்துவிடும் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. நான் இந்த விடயத்தை ரொம்பச் சீரியசாக மூளைக்குள் புகுத்திக் கொள்ளவில்லை. நான் என் பாட்டுக்கு எனது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தேன். அப்போது பிரச்சினை கொடுக்கவில்லை. ஆனால் இப்போது சமாளிக்க முடியாத கட்டமாக வந்துவிட்டது. இனியும் இந்தச் சுமையைச் குறைக்காமல் விட்டால் நிலைமை கவலைக் கிடமாக மாறிவிடும்.

''பொறுத்ததுபோதும் பொங்கியெழு'' என்பது போல் எழவேண்டியதுதான் (எங்கோ உடனே பொங்கியெழுவது அது விட்டால்தானே) என்ன யோசிக்கிறீர்கள்? ஏதோ நான் பெரிய பிரச்சினையில் சிக்கி இருப்பது போல் உங்களுக்குத் தெரிகின்றது. சுமையைக் குறைக்க வேண்டுமென்று சொல்வதும் உங்கள் காதில் விழுகின்றது. எனக்கு உதவ உங்கள் மனம் துடிக்கின்றது. அட எங்கட எழுத்தாளருக்கு ஏதாவது கடன் பிரச்சினையோ? பலமாக யோசிக்கிறீர்கள் அல்லது வேறு பிரச்சினைகளையும் நீங்கள் ஊகிக்கலாம்.

கொஞ்சம் பொறுங்கள் நீங்கள் பலமாக யோசித்துக் கஷ்ரப்படுகிறீர்கள். நீங்கள் நினைப்பது போல் எனக்குக் கடன் பிரச்சினை இல்லை.... அது ....வந்து ஆண்களுக்கே உரிய பொதுவான பிரச்சினை. ஒரு வயது எல்லையைக் கடந்த பின்னர் ஏற்படுகின்ற உடல் ரீதியான பிரச்சினை... அதுதான் ''தொப்பைப் பிரச்சினை..... இப்போது என் வயதை நீங்கள் கண்டுபிடித்து இருப்பீர்கள் (கடவுளே என் நட்சத்திர அந்தஸ்து சூப்பர் ஸ்ரார் தகுதி எவ்வளவு தூரம் குறைந்து இருக்கும்)

இப்போது என் வயதை ஒத்த எல்லா ஆண்களும் என் பக்கம் வந்து இருப்பீர்கள் என்பதை அறிகின்றேன். ''ஓமண்ணை எங்களுக்கும் இதே பிரச்சினைதான் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் கிடக்குது. எங்களுக்கு ஒபீசில வேலை பளுவில இந்த தொப்பை யோசனை வராது. சும்மா இருக்கேக்க இந்த யோசனை வந்திடும். தெரிஞ்ச ஆக்கள் தொப்பையைச் சுட்டிக்காட்டி (ஏதோ பத்தவாது உலக அதிசயம் போல்) கதைக்க சரியான சங்கடமாய் கிடக்கு. தொப்பையைக் குறைக்க பல வழிமுறை, ஆலோசனைகள் பேப்பரில் வருகுது. அதுகளை ஒழுங்கா செய்தாத்தானே?

மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்த நோயாளர்களைப் பார்த்து பொதுவாகக் கேள்வி கேட்போம் ''ஐயா என்ன பிரச்சினைக்காக இங்கு வந்தனீங்கள்?'' அவர் தகுந்த விடையைச் சொல்வார். அடுத்த கேள்வி அவரிடம் கேட்போம். ''அதுசரி ஐயா, எப்ப தொடக்கம் இந்தப் பிரச்சினை ஆரம்பமானது?''.... அவர் யோசித்து நாள்களைக் கணக்கிட்டுத் தெளிவான விடையைச் சொல்வார். அது சரி மருத்துவர் தொப்பை காட்டி எப்ப தொடக்கம் ஆரம்பமானதென்று கேட்டால் நாங்கள் என்ன பதில் சொல்வது?

நாங்கள் கொஞ்சம் யோசிக்கவேண்டும். கலியாணத்துக்கு முன்பிருந்த கால கட்டத்தில் நான் எப்படி இருக்கேன்? அதை எப்படிச் சொல்வது? அந்தக் காலகட்டத்தை எப்படி மறப்பது? அப்போது நானிருந்த கோலம் தெரிந்தவர்கள் சொந்தக்காரர்கள் எண்டு நானும் நகைச்சுவை நடிகர் வடிவேலுவைப் போல் பாவம் ஓடி ஒளிய வேண்டிய நிலை. காரணம் அவர்கள் தொடுக்கும் சரமாரியான கேள்விக்கணைகள்தான்.

நீங்களும் என்னைப் போன்ற சங்கடத்தில் சிக்கி இருக்கலாம். வீட்டிலோ, சாப்பாட்டிலோ பிரச்சினை இல்லை. ''அம்மாவின் கைப்பக்குவம் கிராமத்துக்கே தெரியும்'' என்ன சாப் பிட்டாலும் உடம்பு வைக்குதில்லையே அப்ப சாப்பிடுகிற சாப்பாடு எங்க போகுது? இப்படி யாகப் பல கேள்விகள் அன்று என் முன் வைக்கப்பட்டன. இப்படியான பதில் அன்று வந்தது.

''உவனுக்கு சாரைப் பாம்புக்குடல் அதுதான் சாப்பிடுற சாப்பாடு உள்ளுக்க போகுது'' (யாழ்ப்பாணத்து மரியாதைக்குரிய மருத்துவர்களே நீங்கள் இதனை உண்மை எனக் கருதுகிறீர்களா? நீங்கள் சத்திரசிகிச்சை செய்யும் போது சாரைப்பாம்பின் குடல் தொகுதியைக் கொண்ட மனிதனைப் பார்த்தீர்களா?)

ஆனால், அம்மா எனக்கு ஆதரவாக இருந்தால் உவனுக்கு கணச்சூடு உடம்பு அதுதான் மெலிஞ்சுபோய் இருக்கிறான். கலியாணம் முடிச்சால் சரிவரும் என்றால் உண்மையில் கலியாணத்துக்குப் பிறகுதான் உடல் நிலையில் பிரகாசமான மாற்றம் தெரிந்தது. தொப்பை யின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தைக் கலியாணம் கட்டின நாளில் இருந்துதான் கணக்கிட வேண்டும்.

**தொல்புரம் சி.கதிர்காமநாதன்**

காற்சட்டையும், அரைக்கைச் சட்டையும் போட்டு வெளிக்கிட்டு நிண்டால் எனக்கே என்னில் ஆசைவரும் மனுசியும் புழுகித் தள்ளுவாள் ''இப்பதான் வடிவாய் இருக்கிறியள்'' (அப்ப முதல் பாக்கேக்க நான் வடிவில்லை என்பதை ஒத்துக் கொள்ளுறாபோல) இந்த புழுகில் யார் தொப்பை பற்றி யோசித்தார்கள். எனது தொப்பைக்கு முந்திய கலியாண படங்களைப் பார்த்து பிள்ளைகள் தமிழரின் தீர்வுப் பொதி போல் தூக்கி அப்பால் போட்டார்கள் அவ்வளவு வெறுப்பு என்று கலியாண வீடு போக காற்சட்டையைப் போட்டு முடிக்க கஷ்ரப்பட்டுக் கொண்டிருந்தேன். அரசு தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சு போல் இழுபறிப்பட்டது. மனுசி கடுகடுத்தாள்.

''சே... என்ன உது... தொப்பை... பழைய மாதிரி எப்ப வரப் போறியள்?

# மழைக்காலம்

மழைக்கன்னி
பாடிவர
வறண்ட நிலம்
புன்னகைக்க
மண்மணக்கும்
அதில் என்
தமிழ் இனிக்கும்

தென்றலிலே
அசைந்தாடி
மழையிலே
நீராடி மரங்கள்
குளிர்ச்சி கொள்ளும்

பூக்கள் சிரித்திருக்க
வண்டுகள்
காதல் செய்யும்

தூரதேச பறவைகளின்
சங்கமத்தால்
எந்தன் தேசத்து
பரவைக் கடல்களும்
வயல்வெளிகளும்
களைகட்டும்

கடலோரக்
கவிதைகளாய்
முருகக் கற்பூக்கள்
பூத்திருக்கும்

இவை கண்டு
என் மனம்
உவகை கொள்ளும்

**ஆ.முல்லைதிவ்யன்**
**(பொலிகையூர்)**

# காலச் சிறையில்

காலச்சிறையில்
கனவுக் கைதிகள்
நாங்கள்
கன்னி விலங்கிட்டு
விதிக் காவலர்கள்
எம்மைச் சூழ
வாழ்க்கை விடுதலைக்காய்
திருமண நீதிபதிகளின்
தீர்ப்பு வரும் வரை- என்றும்
கனவுக் கைதிகள்
நாங்கள்

– ரமணன்

# 'சபாஷ்' சரியான நடவடிக்கை எங்கும் பரவட்டும்




''பொலிஸார் சுகாதாரப் பிரிவினர் இணைந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதி களில் உள்ள விடுதிகள், 'நெற்கபே' ஆகியவற்றில் திடீர் சோதனை''

ஆஹா! தகவல் அறிந்ததும் 'சபாஷ்' சரியான நட வடிக்கை என்று பாராட்டவேண்டும் என்று மனம் சொல்லியது.

அந்தப் பணியில் முதற்தடவையாக இணைந்த அந்தக் குழுவினரை நிச்சயமாக எல்லோரும் பாராட் டத்தான் வேண்டும். நெடுகாணும் குறை சொல்லு வதை விடுத்து அவ்வப்போது ஆங்காங்கே நடக்கும் நல்ல விடயங்களைத் தட்டிக் கொடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் இன்றைய இளம் சமுதாயம் பாழ்பட்டுப் போவதற்கு உல்லாச விடுதிகள், 'நெற்கபே', 'கான்போன்' ஆகியன தமது முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. ''நாங்கள் பட்டு வேட்டிக்குக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். ஆனால் ஏதோவெல் லாம் இப்போ களவாடப்படுகின்றன.

''கண்டதே காட்சி, கொண்டதே கோலம்'' என்று அலங்கோலமாய் அலைகிறது எம் இளம் சமுதாயம்.

இதனைத் தடுக்க எல்லோரும் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய வரலாற்றுத் தேவை எம்முன்னே இன்று அவசரமாக ஒப்படைக்கப்பட் டுள்ளது. நாம் அழிந்து எமது அடையாளங்கள் அடியோடு சிதைந்து போகட்டும் என்று ஒரு சாரார் திரைமறைவில் சதிராடுகின்றனர். இவ்வாறான இவர்களது எண்ணங்களைச் சிதறடிக்க வேண்டும். பலரும் கரங்களை ஒருங்கிணைக்க வேண்டும்.

''குடாநாட்டைக் குறுக்கியெடுத்த டெங்கினை அழித்தொழிக்க'' அனைத்துத் துறையினரும் ஒருங்கிணைந்துச் செயற்பட்டது போன்று, எமது சமூகத்தில் இன்று தலையெடுத்தாடுகின்ற கலாசாரப் பிறழ்வு, பாலியல் வியாதி என்பவற்றையும் கட்டுப்படுத்த நல்லூர் பிரதேச செயலர் பிரிவினர் முன்னெடுத்துள்ள முன் மாதிரியான செயற் பாடுகளில் ஏனையவர்களும் இறங்க வேண் டும்.

உல்லாச விடுதிகள், 'நெற்கபே' என்பவற்றில் சொல்லமுடியாத சீரழிவுகள் இடம்பெறுகின்றன என்று பலராலும் பல விதமான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் இது தொடர்பான தகுந்த நடவடிக்கைகளை முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும்.

சுகாதாரப் பிரிவினரே! நீங்கள் சுகாதாரம் சம்பந்தமான விட யங்களை ஆராய விரையுங்கள்.

கலாசாரப் பிரிவினரே! எமது கலாசார சீரழிவுகள் மேற்குறிப்பிட்ட இடங்களில் நடை பெறுகின்றனவா? என்பதை அவதானிக்கக் கள மிறங்குங்கள்.

பொலிஸாரே! நீங்கள் இவர்களுக்குப் பக்கப் பலமாக இருந்து சட்ட நடவடிக்கைகளுக்கு உத வுங்கள்.

மாவட்ட அரச அதிபரே! சுகாதார சேவைப்பணிப் பாளரே! டெங்கு நோயினைக் கட்டுப்படுத்த எத்த கைய திட்டங்களை வகுத்துத் திறம்படச் செயற்பட் டீர்களோ! அதுபோல் எமது சமூகத்தில் தொற்றியுள்ள கலாசாரச் சீரழிவென்னும் நோயைக் கட்டுப்படுத்த உடன் திட்டங்களை வகுத்துக் கொள்ளுங்கள்; செயலில் இறங்குங்கள்.

''நன்றே செய்யுங்கள் அதை இன்றே செய்யுங் கள்'' என்று அன்பான வேண்டுகோளை விடுக் கின்றோம்.

இப்போது எமது இனத்திடம் மிஞ்சியிருப்பது அடையாளங்கள் மட்டும்தான் அதுவும் தொலைந்து போய் ஆண்டியாவதா?

கவிநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி

## அமுதசுரபி அன்னதான சபை



அன்புளநீர் அகமேல்லாம் பொங்கப் பொங்க அறமேழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்றத் தோண்டு சேயப்பலஅன்பர் தோன்றத் தோன்றத் தோற்று சுவைச் சோறாக உண்ண உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்டக் கோண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமேல்லாம் வாழி வாழி

## கர வருட அன்னதானப் பெருவிழா

### Regd. No. S.236

### ஆரம்பம்-1960 (வரைவுள்ளது)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ஆம் ஆண்டுஆரம்பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 52ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம், பொருள் உதவிசெய்துவருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபிமண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடைமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தரும சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கர ஆண்டு ஆனி 16ஆம் நாள் 01.07.2011 வெள்ளிக்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஆனி 25ஆம் நாள் 10.07.2011 ஞாயிற்றுக்கிழமை மஞ்சத் திருவிழாவும், மறுநாள் 11.07.2011 திங்கட்கிழமை பூந்தண்டிகைத் திருவிழாவும் ஆனி 28ஆம் நாள் 13.07.2011 புதன்கிழமை சப்பறத்திருவிழாவும், 29ஆம் நாள் 14.07.2011 வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 30ஆம் நாள் 15.07.2011 வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், 31ஆம் நாள் 16.07.2011 சனிக்கிழமை பூங்காவனமும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாள்களும் இரவும் பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தர்மசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi Commercial Bank,, கண.இல. 1247985001 Peoples Bank கட்டடம், Pettah, அல்லது B.O.C கணக்கு இல.7687836, ஊர்காவற்றுறை கிளை வேலணை என்னும் விலா சத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். பணம், பொருள் என்பவற்றை வழங்குவதாயின் திரு.சி.சிவகுமார், வெற்றிலை மார் கட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவிக்கின்றோம். திருநெல்வேலி தேனு களஞ்சியத்திலும் (மார்கற் உட்புறம்) பொருள் பணம் வழங்கலாம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கிநின்று தரிசிப்பதற்கான நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லம் அமைக்கப் பெற்றுள்ளதென்பதை மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**" மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்"**

(49,21,22)

அமுதசுரபி மண்டபம்,
நயினாதீவு 02.
தொ.பே: 0213213575

சி.பொ.இராசரத்தினம்
(இடைக்காலச் செயலாளர்)
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதானசபை.

---

## மாதாந்த ஒன்று கூடலும் செய்தி மடல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 28

நூலக நிறுவனத்தின் மாதாந்த நூலக ஒன்று கூடல் நிகழ்வும் செய்தி மடல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சிந்தனைக் கூடப் பணிப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்பல்கலைக் கழக நுண்கலைத் துறை விரிவுரையாளர் பா. அகிலன் 'காத்தலும் பேணுதலும் இலங்கையில் மரபுரிமைகள்' என்ற தலைப்பில் சிறப்புரையையும், யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர் செல்வி ம.கோசலை பயனாளர் உரையையும் நிகழ்த்துவர்.

இந்த நிகழ்வில் புதிய நூலக செய்தி மடல் 5 இன் வெளியீடும் நடைபெறவுள்ளது. (எ)

---

## மணிவிழாக்காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்



### உயர்திரு.சபாபதி குகதாசன் அவர்கள்

(உபஅதிபர்-யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், இயக்குநர்- குகன் கல்வி நிறுவனம், ஆவரங்கால்)

சிறுப்பிட்டி மண் சிறந்திட
குகதாசன் எனும் குணக்குன்று
அவனியில் அவதரித்து
ஆவரங்கால் குகன் கல்வி நிறுவனத்தில்
ஆசானாகி ஆற்றிய அரும்பணியாய்
அகிலமதில் ஆற்றல் மிகு அறிவாளர்களை
உருவாக்கி உன்னத பணியாற்றி
உயர்நிலையெய்தி
அகவை அறுபதினை அடைந்து
மணிவிழாக்காணும் மகத்தான
இவ்வேளை இதய சுத்தியுடன்
இடைக்காடு மண்ணில் மலர்ந்த
இல்லற வாழ்வின் இனிவரும் காலங்கள்
மாட்சிமை மிக்கதாய் மிளிர்ந்திட
மனமார வாழ்த்துகின்றோம்.

இன்று (28.05.2011) சனிக்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் மணிவிழாக்காணும் எமது ஆசானை வாழ்த்தி வணங்குவதோடு அவரது எதிர்காலம் சிறக்க இறைவனின் அருளாசிகளை வேண்டுகின்றோம்.

(49,19,50)

"நாகபூஷணி இல்லம்",
சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

வாழ்த்துவோர்:
யோ.கார்த்திபன், யோ.சங்கவி,
திரு.திருமதி யோகநாதன் தவமணிதேவி.

---

## இந்து, பௌத்த கலாசார விழுமியங்களின் நோக்கமும் செயற்பாடும்

இலங்கைத் திருநாட்டில் தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைத் தன்னகத்தே பதித்து, தனக்கென்று தனி இடம் பிடித்த யாழ். மண் ணிலே, முதன்முதலாக இந்து, பௌத்த கலாசாரப் பேரவை, இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்புச் செயலாளரும் மேதகு ஜனாதிபதி அவர்களின் புலம் பெயர்ந்த மக்களுக்கான கௌரவ ஆலோசகரும் இணைப்பாளரும் EU Lanka Forum நிறுவனத்தின் தலைவரும், பிரபல சட்ட ஆலோசகருமான திரு. M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் சிங்களத்திலும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்தப் பேரவையின் கருப்பொருள் யாதெனில்



சமய மற்றும் சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் செவ்வனே கட்டியெழுப்புவதற்கும் மக்களுக்கு உரியநேரத்தில் உரிய சேவைகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கிலும் எதிர்காலத்தில் இரு மதங்களினூடாகவும் இதுவரை காலமும் செய்யப்படாத பல நிகழ்ச்சித் திட்டங்களையும் சமூக சேவைகளையும் இந்தப் பேரவையின் ஊடாக முன்னெடுப்பதுமேயாகும்.

இந்து, பௌத்த பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வன்று தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் ஊடாக இந்தச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தப் பேரவை உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மேதகு ஜனாதிபதி அவர்களின் எண்ணத்தில் எழுந்தவற்றைச் செயல் வடிவம் கொடுப்பதற்காக வணக்கத்துக்குரிய அத்துரலிய ரத்ன தேரரும் (M.P), பேரவையின் இணைப்பாளரான திரு. M.T.S. இராமச்சந்திரனும் இணைந்து முரண்பாடற்ற விதத்தில் சமூக சேவையையும் இன, மத, மொழி பேதமற்ற சமூகத்தை உருவாக்குவதற்காகவே இந்தப் பேரவை ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் ஊடகங்களில் வந்த முரண்பாடான கருத்துக்கள் யாழ். மக்களிடையே ஒரு பய உணர்வை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், மக்களின் மனதை எந்த விதத்திலும் புண்படுத்தாது ஓர் இணக்கப்பாடான சமூகத்தை இந்து, பௌத்த கலாசாரப் பேரவையின் ஊடாகக் கட்டியெழுப்ப முடியும் என்பது கலாசாரப் பேரவையின் இணைப்பாளரான திரு. M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் உறுதியான நம்பிக்கையாகும்.

திரு. M.T.S. இராமச்சந்திரன் கூறுகையில், பௌத்த சமயமும் இந்து சமய மும் எவரையும் வற்புறுத்தி நிர்ப்பந்தித்து ஒரு சமயத்தில் இருப்பவரை இன்னோர் சமயத்துக்கு மாற்றும் நடவடிக்கையிலோ அல்லது அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவோ, அப்படி வேறு யாராவது ஈடுபடுவதையோ அனுமதிக்கமாட்டா என்று தெரிவித்தார்.

**இணைப்புச் செயலாளர்,
இந்து, பௌத்த கலாசாரப் பேரவை,
யாழ்ப்பாணம்.**

29, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(4594)(41,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டர் அணியின் சீரிய பணிகள்

அகில இலங்கை இந்து மாமன்ற சிவதொண்டர் அணியின் மாநாடு இன்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஆரம்பமாகிறது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

எமது நாட்டிலுள்ள இந்து அமைப்புக்களின் உச்ச நிறுவனமாக விளங்கும் அகில இலங்கை இந்து மாமன்றம் 1955 ஆம் ஆண்டு உதயமானது. இந்த மன்றம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது. இது சமயப் பணியுடன் நின்றுவிடாது சமூக நலப் பணிகளையும் ஆற்றி வருகின்றது.

இன்று எமது இந்துமதம் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மொழி, பண்பாடு, மதம் என்பவை அழிந்து போகாமல் காக்க வேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. சைவநெறியில் வாழ்வாங்கு வாழ அவர்களை நெறிப்படுத்தும் தகுதியைக் கொண்ட சைவத் தொண்டர்களை உருவாக்கும் நோக்குடன் அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிவ தொண்டர் அணியை ஆரம்பித்து நடத்திவருகிறது.

இந்த வகையில் இந்து மாமன்றம் நாடளாவிய ரீதியில் கொழும்பு, யாழ்ப்பாணம், மஸ்கெலியா, பண்டாரவளை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் சிவதொண்டர் அணி பயிற்சிப் பட்டறையையும் பயிற்சிக் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நடத்தியிருக்கிறது.

மாமன்றத்தின் அங்கத்துவ நிறுவனமான விவேகானந்த சபையில் முதலாவது சிவதொண்டர் அணி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மாமன்ற முன்னாள் சமய விவகாரக் குழுத் தலைவர் அமரர் சிவஞானச் செல்வர் க.இராஜபுவனீஸ்வரனின் தீவிர முயற்சியால் சிவதொண்டர் அணி ஆரம்பிக்கப்பட்டது.

சிவதொண்டர் அணியை ஆரம்பிக்க வேண்டும் என்று முதற் கருத்தை விதைத்த மாமன்ற முகாமைப்பேரவை உறுப்பினர் அமரர் சரவணமுத்துவுக்கு மாமன்றம் 'மூத்த சிவதொண்டர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிவதொண்டர் அணி பல்வேறு குறிக்கோள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றுள் கடவுள் உண்டு என்பதில் அசையாத நம்பிக்கையையும் கடவுள் பக்தியையும் வளர்த்தல். சைவ சமயமே மெய்ச் சமயம் என்பதில் உறுதுணையான நம்பிக்கையையும் சைவ சமயப்பற்றையும் விருத்தி செய்தல், சைவசமய அடிப்படையில் உண்மைகள், தத்துவங்கள் பற்றிய அறிவை வளர்த்தல், சைவம் வளர்த்த நாயன்மார்கள் மற்றும் அருளாளர்கள் ஆகியோரின் வரலாறுகள், திருத்தொண்டுகள் என்பவற்றை அறியச் செய்தல், ஆலயங்களே சைவத்தின் உயிர்நாடிகள் என்பதை அறிந்து ஆலய அமைப்பு, ஆலயத்தில் நடைபெறும் நித்திய நைமித்தியக் கிரியைகள், ஆலய வழிபாட்டு முறைகள், சமய, சமூகத்தொண்டுகள் என்பன பற்றிய தெளிவான அறிவைப் பெறுதல், நடைமுறைவாழ்வில் சைவப் பழக்க வழக்கங்கள், ஒழுக்கங்கள், ஆசாரங்கள், மரபுகள், பண்பாடுகள், கலாசாரங்கள், விழுமியங்கள், பாரம்பரியங்கள் என்பவற்றை அறிந்து நடைமுறைப்படுத்தும் திறன்களை விருத்தி செய்தல், சைவத் திருமுறைகள் பற்றிய பொது அறிவையும், பஞ்ச புராணங்களைப் பண்ணிசையோடும், பக்தி உணர்வோடும் பாடுந்திறனையும் பெறுதல், கல்வி, சமய, சமூக மற்றும் மக்கள் சேவையில் ஈடுபடுதல் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

சிவதொண்டர் அணியின் ஆள் எண்ணிக்கை பத்தாகவோ நூறாகவோ அமையலாம். சிவதொண்டர் அணியில் உள்ளவர்கள் முன்மாதிரியாகவும், விடயங்களைப் பிறருக்கு விளங்கப்படுத்தக் கூடியவராகவும் இருப்பது அவசியம்.

சமயப் பிரசாரகர்களாகவும் இவர்கள் தொழிற்படுவர். இவர்கள் அனைவரும் அடிப்படைச் சமய அறிவைப் பெறுவதற்காக அகில இலங்கை இந்து மாமன்றம் 'இந்து மக்களுக்கு' ஒரு கையேடு எனும் நூலையும் 'சிவ வழிபாட்டு மலர்' போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது.

இந்த சிவதொண்டர் அணியானது கடந்த காலங்களில் பல்வேறு பணிகளை நாடளாவிய ரீதியில் ஆற்றி வந்துள்ளது. ஆலயத் தொண்டுகள் செய்தல், சமயப் பிரசாரங்களை மேற்கொள்ளுதல், அறநெறிப்பாடசாலையில் சமயக் கல்வியை வழங்க உதவுவதல் போன்ற பணிகளை இங்கு குறிப்பிடலாம்.

இன்று நாட்டில் மக்கள் பலர் அகதிகளாக பல்வேறுபட்ட அனர்த்தங்களால் அல்லற்படுவதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு நிவாரண புனருத்தாரண உதவிகளை இந்த அணி வழங்கி வருகின்றது. மேலும் மக்களுக்கு வாழ்வாதார வழிகளை வழங்கும் முகமாக தையற் பயிற்சி, கணினிப் பயிற்சி, ஆங்கில பயிற்சி என்பவற்றையும் மேற்கொண்டுள்ளது. அத்துடன், திருமண வைபவ உதவி, மருத்துவ முதற்சிகிச்சை போன்ற உதவிகளையும் செய்து வருகின்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம் சிவதொண்டர் அணியின் செயற்பாடுகள் வரிசையில் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் சிவதொண்டர் மாநாடு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

**கோபால் இளையராஜா**

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. உள்நாட்டு அறிஞர்களும் பிறநாட்டு அறிஞர்களும் கலந்து கொள்கின்றனர். அகில இலங்கை இந்துமாமன்ற சிவ தொண்டர் அணியினர் நடத்தும் இந்த மாநாட்டில் கொழும்பு, மன்னார், மலையகம், கிழக்கு மாகாணம் போன்ற பிரதேசங்களில் இருந்து வந்து கலந்து கொள்ளவுள்ளனர்.

## மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 28

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய நபருக்கு யாழ். நீதிமன்றம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

நேற்று முன்தினம் யாழ். நகரில் போக்குவரத்துப் பொலிசார் மேற்கொண்ட திடீர் சோதனையின்போது மேற்படி நபர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் மது போதையில் வாகனம் செலுத்தியமைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதித்தார்.

இதே வேளை அரச அனுமதிப்பத்திரமின்றி சாராயத்தை ஆட்டோவில் எடுத்துச் சென்ற நபருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

(ம-9)

**வேலையாள்கள் தேவை**

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு சகல விதமான வேலைகளுக்கும் ஆள் கள் தேவை.

தொடர்பு: சிற்சி ஹாட்வெயார் & ஸ்ரோர்ஸ்
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வீடு விற்பனைக்கு**

நல்லூர், செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது. தரகர் தேவையில்லை

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0772267191.

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் - 2011



28.05.2011 சனிக்கிழமை
மூன்றாம் நாள் திருவிழா
மாலை 07.00 மணி
சுவாமி வீதியுலா இடம்பெறும்
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
இணுவில்

யாழ்நகரில் City and Guilds (UK)
EC(UK) பொறியியல் வகுப்புக்கள்

O/L அல்லது A/L தகுதியோடு
நீங்களும் A BRITISH QUALIFIED CHARTERED ENGINEER / QUANTITY SURVEYOR ஆகலாம்.



Congratulation
Medal of Excellence 2010-2011
Advanced Diploma in Construction Industry (Civil Engineering)
City and Guilds (UK) Programme
செல்வி. நிதர்சனா நீதிராஜா

City & Guilds UK Dec. 2011

Diploma /Ad.Diploma in
*Telecommunication
*Electrical & Electronic
*Civil Engineering
*Quantity Surveying

நுழைவுத்தகுதி :-
Certificate - O/L, Diploma - O/L, A/L
Ad. Diploma - HNDE/NDT/NDES/NCT/Diploma

COMPUTER CLASSES
- Diploma in Computer Studies
- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Information Technology

ENGLISH CLASSES
- IELTS
- Spoken English

Application Closing Date: 05/06/2011

Course Director: Prof. கதிரவேலு சந்திரபோஸ்

APSS ENGINEERING (Pvt) Limited
Anna Vasa
Dr. Subramanium Road
Chunnakam, Jaffna
Tel: 021492[illegible]
Hotline: 077 2306642, 077 3867695, 077 2418804

**Computer Express**
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

10.06.2011 முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering
Diploma in Acc.Package.
Monday to Friday 9Am to 3.30Pm
Course Fee 1000/=

Batch I - 28.05.2011 - 9Am or 3Pm Batch II - 29.05.2011 - 9Am or 3Pm
Batch III - 01.06.2011 - 9Am or 3Pm Batch IV - 03.06.2011 - 9Am or 3Pm

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422, 0774907444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தற்கொலைப்படை தாக்குதல் 24 பேர் பலி, அலுவலகங்கள் தரைமட்டம்

இஸ்லாமபாத், மே 28

பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியான ஹாங்கு என்ற இடத்தில் வியாழக்கிழமை நிகழ்ந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் பொலிஸார் உள்பட 24 பேர் இறந்தனர்.

இரு குழந்தைகள் உட்பட 12க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். நீதிமன்றம் உட்பட ஏராளமான அரசுத்துறை அலுவலகங்கள் அமைந்துள்ள பாதுகாப்பு மிக்க இப்பகுதிக்கு மாலை 6.15 மணியளவில் வாகனம் ஒன்றில் சக்தி வாய்ந்த வெடிப்பொருள்களை ஏற்றி வந்த மர்ம நபர் அதை வெடிக்கச் செய்ததில் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

காயமடைந்த 12 பேரில் ஆறு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று மாவட்ட முதன்மை நிர்வாக அதிகாரி முகமத் சித்திக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாவட்ட காவல்துறை, நிர்வாக அலுவலகங்கள் இந்தக் குண்டு வெடிப்பில் தரைமட்டமாகின. வியாபார நிலையங்கள் மற்றும் அரசு அலுவலகப் பகுதியிலும், அருகே உள்ள பஸ் நிறுத்தத்திலும் காத்திருந்த ஏராளமான பொதுமக்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் அருகே உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அனைத்து மருத்துவமனைகளிலும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எந்தத் தீவிரவாத அமைப்பும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை பொறுப்பேற்கவில்லை.

கடந்த மே 2ஆம் திகதி பாகிஸ்தானின் அபோதாபாத்தில் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு ஆங்காங்கே பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.



இந்தோனேசியாவின் பாலிதீவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட எகிப்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் நபில் அல் அராபியை (வலது) வரவேற்கிறார் அதிபர் பாம்பங் யதோயோனோ.

# நாடு கடந்த திபெத் அரசின் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் தர்மசாலாவில் தொடங்கியது

தர்மசாலா, மே 26

நாடு கடந்த திபெத் அரசின் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் இமாசலப் பிரதேசத்தின் தர்மசாலாவில் வியாழக்கிழமை தொடங்கியது.

திபெத் அரசின் அரசியல், நிர்வாகப் பதவியில் இருந்து தலாய் லாமா விலகியதை அடுத்து எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள், நாடு கடந்த திபெத் அரசின் அரசியல் சாச னத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்டன.

இது தொடர்பாக நாடாளுமன்ற தலைவர் பென்பா டிசிரிங் கூறியதாவது:

திபெத் அரசியல் பொறுப்புகளில் இருந்த தலாய் லாமா விலகி விட்டதால் இதுவரை அவரிடம் இருந்த பொறுப்புகள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் அளிக்கப்படுகிறது என்றார்.

முன்னதாக நாடு கடந்த திபெத் அரசின் தலைவராக தலாய் லாமா பல ஆண்டுகளாக இருந்து வந்தார். கடந்த மார்ச் மாதத்தில் அவர் இந்த அரசியல் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதையடுத்து நாடு கடந்த திபெத் அரசின் பிரதமர் தேர்தல் கடந்த ஏப்ரல் 27 இல் நடத்தப்பட்டது. இதில் லாப்சாங் சாங்காய் பிரதமராகத் தேர்வு செய்யப்பட்டார்.

திபெத் அரசியல் பொறுப்புகளில் இருந்து விலகினாலும் பிரிட்டனின் அரசி இருப்பது போன்ற ஒரு பதவியை தலாய் லாமா வகிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் லாமா அதனை ஏற்கவில்லை.

# ஆயுதக் கிடங்கு வெடித்து 28 பேர் பலி

ஏமனில் அதிபர் சலே பதவி விலக மறுத்ததால், தலைநகர் சனாவில் அதிபரின் ஆதரவாளர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவரான ஷேக் சாதிக் அல் அமரின் ஆதரவாளர்களுக்கும், இடையில் கலவரம் வெடித்துள்ளது. இதில் 109 பேர் பலியாகினர். இதற்கிடையே, சனாவின் மேற்கு பகுதியில் உள்ள ஆயுதக் கிடங்கில் நேற்றுமுன்தினம் குண்டு வெடித்ததில் 28 பேர் பலியாகினர்.

# துருக்கி பஸ் நிலையத்தில் குண்டு வெடிப்பு

இஸ்தான்புல், மே 26

துருக்கி நாட்டில் தலைநகர் இஸ்தான்புல் பஸ் நிறுத்தம் ஒன்றில் குண்டு வெடித்து 7 பேர் காயம் அடைந்தனர்.

இஸ்தான்புல்லில் உள்ள பொலிஸ் பயிற்சி பள்ளி அருகே பஸ் நிறுத்ததில் வியாழக்கிழமை காலை மக்கள் நடமாட்டம் அதிகமாக இருந்த நேரத்தில் ஒரு குண்டு வெடித்துச் சிதறியது. அப்போது அங்கிருந்து ஒரு பஸ் புறப்பட்டது. குண்டு வெடிப்பில் பஸ்ஸின் பின்பகுதி பலத்த சேதம் அடைந்தது. பஸ்ஸில் இருந்த 7 பயணிகள் காயம் அடைந்தனர்.

அது சிறிய குண்டாக இருந்ததால் சேதம் அதிகம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். குண்டு வெடிப்பில் 7 பேர் காயம் அடைந்ததை இஸ்தான்புல் மாகாண ஆளுநர் ஹூசைன் உறுதி செய்தார்.

துருக்கி நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் குர்திஷ் இனத் தீவிரவாதிகள் தனி நாடு கேட்டுப் போராட்டம் நடத்தி வருகின்றனர். துருக்கியில் வருகிற ஜூன் 12ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தலுக்குப் பிறகு அரசு நடத்த முன்வராவிட்டால் தாக்குதல் தீவிரமாகும் என்று சிறையில் இருக்கும் தீவிரவாதிகளின் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


## மணிவிழா வாழ்த்துக்கள்



மணிவிழாக் காணும் திரு.சபாபதி குகதாசன் (பிரதி அதிபர்)
(யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

நல்லாசிரியராய், பகுதித் தலைவராய், பிரதி அதிபராய் அரும் பணி ஆற்றி, கல்வித் திணைக்களம், பெற்றோர் ஆசிரியர், மாணவர் அனைவரின் நன் மதிப்புக்குரியவராய், ஓய்வுபெற்று, மணி விழாக் காணும் திரு.சபாபதி குகதாசன் அவர்களின் கல்வி, சமூக, சமய கலாசாரப் பணிகள் தொடரப் பெரிய நாச்சியாரின் பேரருளை வேண்டுகின்றோம்.

திரு.திருமதி தி.சிவநேசபிள்ளை குடும்பத்தினர்,
திரு.திருமதி சீ.தங்கவேலு குடும்பத்தினர்.
இடைக்காடு.

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்
வாரம் 230
சீட்டிழுப்புத் திகதி 26.05.2011

வெற்றி இலக்கங்கள்: 01 06 13 33
சுப்பர் இலக்கம்: 02

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 6,046,520/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 63703 | ரூ. 20/= | ரூ. 1,274,060 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5801 | ரூ. 40/= | ரூ. 232,040 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4882 | ரூ. 100/= | ரூ. 488,200 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 451 | ரூ. 200/= | ரூ. 90,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 118 | ரூ. 1,500/= | ரூ. 177,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 7 | ரூ. 3,000/= | ரூ. 21,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 6,046,520/= | |
| மொத்த எண்ணிக்கை | 74962 | | ரூ. 2,282,500/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,239,810/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## ஆயுஷ்ஹோம வாழ்த்துக்கள்



நிகழும் மங்களகரமான கரவருஷம் வைகாசிமாதம் 14ஆம் நாள் (28.05.2011) சனிக்கிழமை ரேவதி நட்ஷத்திரத்தில் தனது இரண்டாவது ஆயுஷ்ஹோமம் (பிறந்த நட்ஷத்திரம்) கொண்டாடும் **சர்வேஸ்வரக் குருக்கள் காதம்பரி** தம்பதியரின் செல்வப் புதல்வன் **தேஜோவதனன்** பல்லாண்டு காலம் சீரும்சிறப்பும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துவதோடு இறையருள் கிடைக்கவேண்டுமென நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளையும் சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தேஜோவதனன்

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்கள் – ஸ்ரீமதி .ம.சீதாலக்ஷ்மி அம்மா தம்பதியர் (தாத்தா, பாட்டி)

பிரம்மஸ்ரீ ம.நகிசுதசர்மா – ஸ்ரீமதி.ந.ஜெயந்தகலா தம்பதியர் ந.மனஸ்வினி ந.நிஷேவிதா

பிரம்மஸ்ரீ ம.பாலகைலாசநாத சர்மா – ஸ்ரீமதி.பா.மஹாலக்ஷ்மி தம்பதியர் (மாமாமார், மாமிமார், மச்சாள்மார்)

(4597-19-21-43)

## சரவணா ரெக்ஸ்



குறைந்த விலையில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவருக்குமான தரமான ஆடைத் தெரிவுகளுக்கு.....

சரவணா ரெக்ஸ்

770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். TP: 021 222 0421, Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். TP: 021 222 1723.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மும்பைத் தாக்குதலுக்கு பாக். உளவு அமைப்பு பயிற்சி; நீதிமன்றில் ஹெட்லி விலாவாரியாகத் தகவல்

சிக்காக்கோ, மே 28

இந்தியாவுக்கு எதிராக உளவு பார்ப்பதற்கு பாகிஸ்தானின் உளவு அமைப்புத்தான் பயிற்சி கொடுத்தது என, மும்பைத் தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்டிக் கொடுத்த டேவிட் கோல்மென் ஹெட்லி, சிக்காக்கோ நீதிமன்றில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி, மும்பையில் தாஜ் ஹோட்டல் உள்ளிட்ட இடங்களில் லஷ்கர் -இ- தொய்பா பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், அமெரிக்கர்கள் ஆறு பேர் உட்பட 166 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தை நிறைவேற்றுவதற்காக, மும்பையின் பல இடங்களை ஆய்வு செய்து சதித் திட்டம் தீட்டிக் கொடுத்த அமெரிக்க வாழ் பாகிஸ்தானியரான டேவிட் கோல்மேன் ஹெட்லியை, சிக்காக்கோ பொலிஸார் கடந்த 2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கைது செய்தனர். தற்போது சிகாகோ நீதிமன்றில் சமீபத்தில் இந்த வழக்கு தொடர்பாக ஹெட்லியிடம் தொடர்ந்து மூன்று நாள் விசாரணை நடந்தது. விசாரணையின் போது ஹெட்லி கூறியதாவது:

இந்தியா மீது தாக்குதல் நடத்த லஷ்கர் -இ- தொய்பா முதலில் பயிற்சி அளித்தது. ஆனால், ''இந்த பயிற்சி குழந்தைத் தனமானது' என, ஐ.எஸ்.ஐ., உளவு அமைப்பின் அதிகாரி மேஜர் இக்பால் என்னிடம் தெரிவித்தார். கடந்த 2006ஆம் ஆண்டு மேஜர் அலி என்பவர், ஐ.எஸ்.ஐ.,அதிகாரியான மேஜர் இக்பாலிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். லாகூரில் விமான நிலைய வளாகத்தை ஒட்டிய இரண்டு அடுக்கு மாடியில் தான், உளவு பார்ப்பதற்குரிய பயிற்சியை பெற்றேன். மேஜர் இக்பால், பாதுகாப்புப் படையில் இருந்தாலும் அவர் சீருடை அணிந்து நான் பார்த்ததில்லை. ஆனால், அவர் ராணுவ வீரர்கள் புடைசூழ ஜீப்பில் வருவார். ஒரு இடத்தை எப்படி நோட்டமிடுவது, அங்கு வரும் மக்களை எப்படி மதிப்பிடுவது, இந்திய ராணுவத்துக்குரிய இடங்களை எப்படி கண்டறிவது, ராணுவத்தினரின் நடமாட்டங்களை கண்காணிப்பது, ரகசிய படங்களை எப்படி எடுப்பது, தாக்குதல் நடத்துவதற்குரிய இடங்களை எப்படித் தேர்வு செய்வது என்பது உள்ளிட்ட சகல வித்தைகளையும் ஐ.எஸ்.ஐ., தான் எனக்கு கற்றுக்கொடுத்தது.

நான் அமெரிக்க பிரஜை என்பதால், இந்திய அதிகாரிகளுக்கு சந்தேகம் வராது என்ற காரணத்தால்தான் என்னை வைத்து மும்பைத் தாக்குதலுக்குரிய இடங்களை நோட்டமிடச் செய்தனர். இந்தியாவில் தங்கி வியாபாரம் செய்தபடி மேலும் பல இடங்களை நோட்டமிடச் சொன்னார்கள். இதற்காகத்தான் நான் தகாவுர் ராணாவிடம் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டேன்.

கடந்த 2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ரம்ஜான் அன்றே லஷ்கர் -இ- தொய்பா அமைப்பினர், மும்பையில் தாக்குதல் நடத்த படகில் கிளம்பினர். செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி அவர்கள் தாக்குதல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் வந்த படகு பாறை ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானதால், அப்போது தாக்குதல் நடத்த முடியவில்லை, என லஷ்கர் -இ- தொய்பா அமைப்பைச் சேர்ந்த சஜத் மிர் என்பவர் எனக்கு கைத்தொலைபேசியில் தகவல் கொடுத்தார்.

மும்பை மீதான தாக்குதல் முயற்சியை கைவிட்டால் கடவுள் சந்தோஷமடையமாட்டார், என பாஷா என்பவர் கவலைப்பட்டார். அவரது வற்புறுத்தலுக்கிணங்க, ஒக்டோபர் மாதம் மீண்டும் ஒரு படகை வாடகைக்கு அமர்த்தி, மும்பை நோக்கி புறப்பட்டபோது, மும்பை அருகே கடலோரப் பாதுகாப்புப் படையினர், லஷ்கர் -இ- தொய்பா அமைப்பினர் சென்ற படகை நோக்கி சுட்டனர். இதில் கராச்சியிலிருந்து புறப்பட்ட படகு தீப் பிடித்து நாசமானது. இதனால், இரண்டாவது முயற்சியும் தோல் வியடைந்தது.

மூன்றாவது கட்டமாக நவம்பர் 26ஆம் திகதி லஷ்கர் -இ- தொய்பா வினர் வெற்றிகரமாக மும்பை சென்று வாகனம் ஒன்றை பிடித்து, நான் சொன்ன இடங்களில் சாமர்த்தியமாகத் தாக்குதல் நடத்தினர். மும்பை யில் தாக்குதல் நடத்திய சம்பவத்தை சஜத் எனக்கு தெரியப்படுத் தினார். தாக்குதலில் ஈடுபடுவர்கள் முஸ்லிம்கள் என்ற சந்தேகம் வரக்கூடாது, என்பதற்காக, இந்துக் கோயிலுக்கு சென்று 15 சிவப்பு நோன்பு கயிறுகளை வாங்கிக்கொடுக்க அவற்றை மேஜர் இக்பால், தாக்குதல் நடத்தும் நபர்களின் கைகளில் அவற்றைக் கட்டி விட்டார். இவ்வாறு ஹெட்லி, நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தார்.

## ஈரானில் தூக்குத் தண்டனை

ஈரானில் பல்வேறு குற்ற வழக்கில் ஈடுபட்ட 5 குற்றவாளிகளுக்கு பொது இடத்தில் வைத்து தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஈரானில் கொலை, கற்பழிப்பு ,போதைமருந்து கடத்துதல் உள்ளிட்ட குற்றச் செயல்களுக்கு அதிக பட்சமாகத் தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. அதுவும் பொது இடத்தில் வைத்து பலர் முன்னிலையில் வழங்கப்படுவது வழக்கமாக உள்ளது.

அந்த வகையில் ஈரானில் தொடர் கொலை செய்தவர், கற்பழிப்பு குற்றம் செய்தவர்கள், போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டவர்கள் என மொத்தம் 5 பேர் நேற்று டெஹரானில் உள்ள ஷிராஸ் நகரில் பொது இடத்தில் வைத்து தூக்கிலிடப்பட்டதாக ஈரான் குடியரசுச் செய்தித் தொடர்பகம் செய்தி வெளியிட்டுள்ளது. ஈரானின் இந்தக் கொடூர தண்டனைக்கு சர்வதேச மனித உரிமை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆண்டில் இதுவரை ஈரானில் 130 பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரபு நாடுகளின் போராட்டங்கள் குறித்து ஜி 8 மாநாட்டில் முக்கியமாக விவாதம்

பிரான்சின் சுற்றுலாத் தளமான டெவ்விலியில் ஜி 8 மாநாட்டில் பங்கேற்பதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் கூடியுள்ளார்கள்.

இந்த மாநாட்டில் அரபு நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏற்பட்டு வரும் போராட்டம் குறித்து முக்கியமாக விவாதிக்கப்படுகிறது.

ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக புகுஷிமா அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட கதிர்வீச்சு பரவல் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படுகிறது. ஜி8 மாநாட்டில் இணையத்தள சேவையை முறைமைப் படுத்துதல், உலகப்பொருளாதாரம் மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றம் குறித்தும் முக்கியமாக விவாதிக்கப்படுகிறது.

பிரிட்டனில் 3 நாள் அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்த மாநாட்டுக்கு வந்துள்ளார். பின்னர் அவர் போலந்துக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

பிரான்சில் நடைபெறும் வளர்ந்த 8 நாடுகளின் கூட்டத்தில் டுனிஷியா அரபு லீக் மற்றும் எகிப்து பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள். இந்த 2 நாடுகளில் ஜனநாயகம் மாற்றம் ஏற்பட பெரும் உதவி அளிக்கவும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

லிபியாவில் நேட்டோ படைகள் தாக்குதல் நடத்துவதை ரஷ்யா கடுமையாக எதிர்க்கிறது. இதனால் ஜி8 மாநாட்டில் கருத்து வேறுபாடு காணப்படும். பிரிட்டனில் இருந்து பிரான்சுக்கு ஒபாமா புறப்படுவதற்கு முன்னர் கூறியதாவது:

''சீனாவும் இந்தியாவும் உலக பொருளாதாரத்தில் உயர்ந்து வருவதால், உலக விடயங்களில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாது'' என்றார்.

ஜி8 அமைப்பில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.

### சந்திப்பு...



வளர்ந்த நாடுகளின் உச்சிமாநாடான ஜி- 8 பிரான்ஸ் நாட்டில் தொடங்கியது. இதில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா (இடது) ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் (நடுவில்) பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஹொலிவூட்டில் படமாகிறது பின்லேடனின் கொலைச் சம்பவம்

அல்குவைதா பயங்கரவாத அமைப்பின் தலைவன் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட சம்பவம் ஹொலிவூட்டில் திரைப் படமாக விரைவில் எடுக்கப் படவுள்ளது. ஹொலிவூட்டின் மிகவும் பிரபலமான கொலம்பியா பிக்சர்ஸ் என்ற திரைப்பட நிறுவனம்தான் இந்தத் திரைப் படத்தை எடுக்கவுள்ளது.

பயங்கரவாதி ஒசாமா பின்லேடன் கடந்த 2ஆம் திகதி பாகிஸ்தானின், அபோதாபாத்தில் உள்ள சொகுசு மாளிகை ஒன்றில் பதுங்கியிருந்த போது அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் பின்லேடனின் உடல் கடலில் வீசப்பட்டது. இந்த நிலையில் பின்லேடன் சூட்டுச் சம்பவங்களை ஹொலிவூட்டின் கொலம்பியா பிக்சர்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து சோனி பிக்சர்ஸ் என்டர்டெய்ன்மென்ட் நிறுவனமும் திரைப் படமாக எடுக்கவுள்ளது.

ஒஸ்கார் விருது பெற்ற பிரபல திரைப்பட இயக்குநர் கேத்ரின் பிக்லோ மற்றும், திரைக்கதையை 'மார்க்போயல் என்பவர் எழுதுகிறார். மார்க் போயல் ஏற்கனவே தி ஹர்ட் லாக்கர் -2010 என்ற பெயரில் , ஈராக்கில் வெடிகுண்டு எதிர்ப்புப் படையினர் பற்றித் திரைப்படம் எடுத்துள்ளார். முன்னதாக கடந்த 2008ஆம் ஆண்டு பின்லேடன் பற்றி ஒசாமா, தி கேப்சர், தி கில்லர் என்ற பெயரில் திரைப் படம் தயாரிக்கத் திட்டமிடப் பட்டிருந்தது.

தற்போது அவர் கொல்லப் பட்டதால் அவரது கொலை குறித்து ஹொலிவூட்டில் திரைப் படமாக விரைவில் எடுக்கப் படவுள்ளது.

## தேர்தலில் போட்டியிட சாரா போலின் ஆர்வம்

அமெரிக்கக் குடியரசுக் கட்சி சார்பில் அடுத்த அதிபர் தேர்தலில் அதிபர் வேட்பாளராகக் களமிறங்குவது குறித்து சாராபோலின் தீவிரமாக அவரது சகாக்களுடன் ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரிசோனா மாகாணத்தில் இருக்கும் அவரது வீட்டில் சாராபோலின் கட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் இது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

கடந்த தேர்தலின் போது சாரா போலின் குடியரசுக் கட்சி சார்பில் அமெரிக்க துணை அதிபர் வேட்பாளாராகப் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குண்டு வெடிப்பில் ஜேர்மன் வீரர் பலி

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட ஜேர்மனியின் பண்டேஸ்வெர் ராணுவ வீரர் சாலைக் குண்டு வெடிப்பில் உயிரிழந்தார்.

அவர் இறந்த தகவல் ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்பில் மேலும் ஒரு ஜேர்மனிய வீரரும், ஜேர்மனி மொழிபெயர்ப்பாளரும் காயம் அடைந்தனர்.

வீரரின் உயிரை பலி வாங்கிய குண்டைத் தீவிரவாதிகள் தங்கள் கைகளில் கிடைத்த பொருள்களைக் கொண்டு செய்துள்ளனர். ஜேர்மனிய வீரர் மரணத்தை பண்டேஸ்வர் ஐ.ஜி உறுதிப்படுத்தி உள்ளார். இந்தத் தகவலை டெர் ஸ்பைகல் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ஜேர்மன் வீரர் கொல்லப் பட்டது எமது இதயத்தை தொடுவதாக உள்ளது. தீவிரவாதிகள் கோழைத்தனமான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளால் ஜேர்மன் தனது தாக்குதல் நடவடிக்கையை ஆப்கானிஸ்தானில் மாற்றிக் கொள்ளாது எனப் பாதுகாப்புத் துறை அமைச்சர் தாமஸ் டேமெய்ஸ்ரே தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் தமது நாட்டு வீரர் கொல்லப்பட்டதற்கு ஜேர்மனின் அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

ப்ரீ டெமாக்ரேடிக் கட்சி (எப்.டி.பி) தலைவர் ரைனர் ப்ருடெர்லே கூறுகையில்,

''தீவிரவாதிகள் கோழைத்தனமான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்'' என்றார்.

இதற்கிடையே ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள ஜேர்மனிய வீரர்களை உடனடியாகத் திருப்பி அழைக்க வேண்டும் என இடதுசாரிக் கட்சி வலியுறுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோவில் கட்டுவது சுலபம்.**
சாமி நம்மோடு சண்டைக்கு வருவதில்லை. குறைசொல்லி சங்கடப்படுவது இல்லை!.

ஆனால் நாலு முதியவர் களைப் பாதுகாப்பது சங்கடத்திலும் சங்கடம். அதைச் சந்தோஷமாகச் செய்கிறவர் யாரோ அவர் நிச்சம் உயர்ந்த மனிதர். பெரிய மனிதர்.

குறைபாடுகளுடைய குழந்தைகளைக் கவனிப்பது துன்பத்திலும் துன்பம். அழகிய குழந்தைகளுடன் ஆடிப் பாடுவது இன்பத்திலும் இன்பம். துன்பத்தைத் தேர்ந்தெடுக்கத் துணிவு வேண்டும்.

தனக்கென வாழ்வது சுகமானது. பிறர்க்கென வாழ்வது சுமையானது. சுகங்களைத் தான் பெருவாரி மனிதர் தேர்ந்தெடுப்பர். சுமையைத் தேர்கிறவரே பெரிய மனிதர். பொறுமை வேண்டும். சகிப்புத் தன்மை வேண்டும்.

பொறுப்பேற்றுக் கொள்ளத் தைரியம் வேண்டும்.

இத்தனை வர்ணனைகளும் தமக்குச் சிக்கெனப் பொருந்தும் இனிய இளவல் அன்பு நண்பர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.

இலங்கையில் எல்லோர் வாழ்வுமே போராட்டமானது. இவரது வாழ்வோ போராட்டத்திலும் போராடுவது! நல்லது செய்வது பெரிதல்ல... நாலு பேர் உதவினாலும் நம்மை நோக நோக விமர்சிப்பவர் விமர்சனங்களைப் பொறுத்துப் போவது பெரிதினும் பெரிது!

விமர்சனங்களை வீசும் தன் சனங்களை மதிக்கும் விமர்சையான வீரர் தம்பி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன். நான் நேரில் கண்டேன். நிலைமை உணர்ந்தேன். அவர் வாழ்வு ஒரு தவம்.



பேச்சாற்றல், உலகம் சுற்றுதல், தலைமை ஆசிரியர் பணி என்பதெல்லாம் அவருக்குக் கூடுதல் அலங்காரம். பொறுமை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, கூடுதல் உழைப்பு, பணிவு, பண்புமிக்க செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் பொன் விழா கடந்து பலப்பல ஆண்டு வாழ்வது பலருக்கும் நல்லது. அவர் வாழ்ந்தால் பலர் வாழ்வர்.

**வாழ்க பல்லாண்டு.**
**அன்பினிய,**
**சுகி.சிவம். BA,BL.**



அன்போடு வணங்கும்
**க. புருசோத்தமன்**
*தென்னிந்திய சிற்பக்கலைஞர்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக சட்டப்பேரவைச் சபாநாயகராக ஜெயக்குமார் போட்டியின்றித் தெரிவு

சென்னை, மே 28

தமிழகத்தின் 14 ஆவது சட்டப்பேரவை சபாநாயகராக டி.ஜெயக்குமாரும், துணை சபாநாயகராக ராசிபுரம் சட்ட சபை உறுப்பினர் தனபாலுவும் போட்டியின்றி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதை தற்காலிக பேரவைத் தலைவர் செ.கு.தமிழரசன் அறிவித்தார்.

புதிய பேரவைத் தலைவர் தேர்ந் தெடுக் கப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிக பேரவைத் தலைவரின் பதவிக் காலம் முடிவுக்கு வந்துள்ளது.

தமிழக சட்டசபையின் சபாநாயகர் பதவிக்கு அ.தி.மு.கவின் ஜெயக்குமாரும், துணை சபாநாயகர் பதவிக்கு அ.தி.மு.கவின் ப.தனபாலும் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இவர்களை எதிர்த்து யாரும் மனு சமர்ப்பிக்கவில்லை. இதையடுத்து இருவரும் இன்று ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இதையடுத்து நேற்றுக் காலை சபை கூடியதும் அவை முன்னவரும், நிதியமைச்சருமான ஓ.பன்னீர்செல்வமும், எதிர்க்கட்சித் தலைவர் விஜயகாந்த்தும் இணைந்து ஜெயக்குமாரை அவரது இருக்கைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தனர்.

பின்னர் பேசிய சபாநாயகர் ஜெயக்குமார் தன்னை சபாநாயகராகத் தேர்வு செய்த முதல்வர் ஜெயலலிதா உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரி வித்தார்.

சட்டசபையின் மாண்பு, மரபைச் சீர்குலைக்காமல் கண்ணியத்துடன் செயற்படுவேன். கட்சி பாகுபாடின்றிச் செயற்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெறுவேன்.

சட்ட சபையில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசுவதற்கு உரிய வாய்ப்பளிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

முதல்வர் ஜெயலலிதா, சட்டப்பேரவை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். (வ)

# மரணதண்டனைக் கைதிகள் இருவரின் கருணை மனு ஜனாதிபதியால் நிராகரிப்பு

டில்லி, மே 28

கடந்த 1993 ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தீவிரவாதி தேவிந்தர் பால்சிங் பல்லார் தனது தண்டனையைக் குறைத்து ஆயுள் தண்டனை விதிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட கருணை மனுவை ஜனாதிபதி பிரதீபா பட்டீல் நிராகரித்துள்ளார்.

மேற்படி வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட தீவிரவாதி பல்லார் சார்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அதில், நீண்ட காலமாக கருணை மனுவில் முடிவு எடுக்கப்படாததால், அவருடைய தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும் படி வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருந்தது.



இந்த கருணை மனு கடந்த ஏழரை ஆண்டுகளாக ஜனாதி பதியின் பரிசீலனையில் இருந்து வந்தது. இந்த நிலையில், மனுவை ஜனாதிபதி பிரதீபா பட்டீல் நேற்று முன்தினம் நிராகரித்துவிட்டார். இதேபோல் கொலை வழக்கு ஒன்றில் மரண தண்டனை பெற்ற அசாம் மாநிலத்தைச் சேர்ந்த மகேந்திர நாத்தாஸ் என்பவருடைய கருணை மனுவையும் ஜனாதிபதி நிராகரித்துவிட்டார். இதனால் அவர்கள் இரு வரும் விரைவில் தூக்கிலிடப்படவுள்ளனர். (வ)



தமிழக 14-வது சட்டசபையின் சபாநாயகராக ஜெயக்குமார் ஏகமனதாகத் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். தெரிவு செய்யப்பட்ட சபாநாயகர் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

# ஜனநாயகத்தேரை இழுத்துச் செல்ல தி.மு.க முழு ஒத்துழைப்பை வழங்கும்

## ஸ்டாலின் தெரிவிப்பு

எதிர்க்கட்சியினரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் நம்பிக்கையை பெறும் வகையில், ஆளும் கட்சியினர் நடந்துகொள்ள வேண்டும் - என்று தி.மு.க. சட்டமன்றத் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப் பேரவை சபாநாயகராக ஜெயக்குமாரும், துணை சபாநாயகராக தனபாலுவும் நேற்றுப் பொறுப் பேற்றுக்கொண்டனர். அவர்களுக்கு பல்வேறு கட்சியினர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

தி.மு.க. சட்டமன்ற தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்திப் பேசியவை வருமாறு -

சபாநாயகர் ஜெயக்குமார் அனைத்து உறுப்பினர்களின் மனநிலையை அறிந்த சிறந்த அனுபவம் பெற்றவர். ஒரு தேருக்கு அச்சாணி போன்று எதிர்க்கட்சி விளங்குகிறது. சிறிய கட்சி, பெரிய கட்சி என்ற பாகுபாடு காட்டாமல் அனைத்து உறுப்பினர்களின் உணர்வு களுக்கு மதிப்பளித்து, அவர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

5 விரல்களும் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டாலும், அவை இணைந்து ஒன்று கூடினால்தான் ஒரு காரியத்தை வெற்றிகரமாக முடிக்க முடியும். ஊர் கூடி தேர் இழுப்பது போன்று ஜனநாயகத் தேரை இழுத்துச் செல்ல தி.மு.க. உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பை வழங்குவார்கள்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நீண்ட நேரம் பயணிக்க முடியாததால் ரஜனிக்கு சிங்கப்பூரில் சிகிச்சை

சிறுநீரகப் பாதிப்புக்கு நவீன டயாலிஸிஸ் சிகிச்சை பெறுவதற்காக நடிகர் ரஜனிகாந் ஓரிரு நாள்களில் சிங்கப்பூர் செல்ல உள்ளார். சிறுநீரகப் பாதிப்புக்கு நவீன சிகிச்சை அளிக்க நடிகர் ரஜனிகாந்தை முதலில் லண்டன் அழைத்துச் செல்ல குடும்பத்தினர் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், நீண்ட நேர பயணத்தைத் தவிர்க்க, சென்னையிலிருந்து 4 மணித்தியாலங்கள் பயணம் கொண்ட சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்ல அவர்கள் முடிவு செய் துள்ளனர். சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திராவில் அனுமதிக்கப்பட்டுள்ள ரஜனிகாந்தின் உடல் நிலை, உட்கார்ந்து பயணம் செய்யும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சென்னையிலிருந்து அவரை தனி விமானத்தில் அழைத்துச் செல்வதா அல்லது சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் அழைத்துச் செல்வதா என குடும்பத்தினர் பரிசீலனை செய்து வருகின்றனர். (வ)

# ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணை

சென்னை, மே 28

பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை நாளை மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1991-96 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் அளவுக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்தார் என்று தமிழக முதல்வரும், அ.தி. மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா மீது வழக்குத் தொடரப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, அந்த வழக்கு விசாரணை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நீதிபதி பி.எம். மல்லிகார்ஜுனையா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கபட்டது.

ஜெயலலிதா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் கந்தசாமி, இந்த வழக்கில் ஆஜராகி வந்த மூத்த வழக்கறிஞர் நவநீத கிருஷ்ணன் தமிழக அட்வகேட் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், அவரால் இந்த வழக்கில் ஆஜராகி வாதாட முடியவில்லை.

எதிர்தரப்பில் (ஜெய லலிதா) வாதாட புதிய வழக்கறிஞரை நியமிக்க கால அவகாசம் தேவை என்பதால் வழக்கை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு அரசு வழக்கறிஞர் பி.வி.ஆச்சார்யா எதிர்ப்புத் தெரிவிக்காததால், வழக்கு விசாரணையை நாளை மறு தினத்துக்கு ஒத்திவைக்க் நீதிபதி உத்தரவிட்டார். (வ)

# கருவிலேயே கருகும் பெண் சிசுக்கள்; 30 வருடங்களில் 1.2 கோடி என மதிப்பீடு

## உலக சுகாதார ஆய்வு நிறுவனம் தகவல்

கடந்த 30 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவில் 12 மில்லியன் பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்பட்டிருக்கின்றன என்று கனடா நாட்டின் ரொறண்டோவில் உள்ள உலக சுகாதார ஆய்வு நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

பெண்களைத் தெய்வமாக வணக்கும் இந்தியாவில்தான் பெண் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள அநேகம் பேர் தயக்கம் காட்டுகின்றனர். ஆண் குழந்தைகளை மட்டுமே பலரும் விரும்புவதால் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

பணக்கார குடும்பத்தைச் சேர்ந்த, அதிகம் படித்த பெண்களே இந்தப் பாதகமான செயலைச் செய்துள்ளார்கள் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் ஆண், பெண் விகிதாசாரத்தில் அதிக வேறுபாடு எழுந்துள்ளது.

இந்தியாவில் ஆண் குழந்தைகளுக்கு அதிக அளவில முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமாகவே முதலில் உருவாகும் பெண் குழந்தைகளைக் கருக்கலைப்புச் செய்து விடுகின்றனர்.

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் வசதி வந்தபின்னர் படித்த பெண்கள் பலரும் கருவில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தெரிந்து கொண்டு பெண் என்றால் தயங்காமல் கருக்கலைப்பு செய்து விடுகின்றனர். இப்படி கருவிலேயே கொல்லப்பட்ட பெண்குழந்தைகளின் எண்ணிக்கை கடந்த முப்பதாண்டுகளில் மட்டும் 12 மில்லியனை எட்டியுள்ளதாக கனடா நாட்டின் ரொறண்டோவில் உள்ள உலக சுகாதார ஆய்வு நிறுவனம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
28 மே 2011 சனிக்கிழமை

# நல்லிணக்க குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை சர்வதேச தரத்தை திருப்திப்படுத்துவதாக இல்லை

## பதவிக்கு வந்த அரசுகள் பொறுப்புக் கூறல் விடயத்தில் அசமந்தம் காட்டின

''மீள் நல்லிணக்கக்குழுவின் (எல்.எல்.ஆர்.சி) ஆணையானது பொறுப்புக் கூறும் பொறிமுறைக்கான ஆணையை தெளிவுபடுத்தும் சர்வதேச தரத்தினை திருப்திப் படுத்துவதாக இல்லை. மோதலில் சம்பந்தப்படும் அரசு அல்லது அதன் முகவர்கள் உள்பட்டவர்களால் மேற்கொள்ளப்படும் சர்வதேச மனிதத்துவ அல்லது மனித உரிமை சட்ட மீறல்களை ஆராய்வதற்கு அதற்குரிய அதிகாரங்களை அது தெளிவாக குறிப்பிடுவதாக இருக்கவேண்டும்'' என்று நிபுணர்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*(நேற்றைய தொடர்ச்சி)*

294. இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு எல்.எல்.ஆர்.சியின் செயற்பாட்டை நேரடியாக அவதானிப்பதற்கு குழுவினால் சாத்தியப்படவில்லை என்றபோதிலும், அரசின் பதிலுக்கு மேலதிகமாக, குறிப்பாக எல். எல்.ஆர். சி.அதன் இணையத்தளத்தில் பகிரங்கமாகப் பிரசுரித்த அமர்வுகளின் எழுத்துப்படிகளைப் பெற்றுக்கொள்ளவும், ஏனைய அரச மூலங்களில் இருந்து இலக்கியங்களுக்கான பிரவேசத்தைப் பெற்றுக்கொள்ளவும் குழுவுக்கு முடிந்தது. அது தேசிய மற்றும் சர்வதேச ஊடக அறிக்கைகளையும் தேசிய மற்றும் சர்வதேச சிவில் சமூகத்தின் சாட்சியத்தையும் எல்.எல்.ஆர்.சி.யுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்களின் விளக்கங்களையும் பகுப்பாய்வு செய்தது.

295. இது போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது ஆணைக்குழுவாக எல்.எல்.ஆர்.சி. இல்லை. எல்.எல்.ஆர்.சி. இனை உள்ளிட்ட இந்த ஆணைக்குழுக்கள் விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (1948) கீழ், பொதுச்சேவைகளின் நிருவாகத்தை மற்றும் அரச ஊழியர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கானதோர் சட்டகத்தை வழங்குவதற்காகவன்றி, அப்படியாக மனித உரிமைகள் மீறல்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கான பொறித்தொகுதியொன்றாக அமைக் கப்படவில்லை. ஆயினும், சட்டத்தின் பொதுவான மக்கள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி உட்பிரிவு மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணை ஆணைக்குழுக்களை அமைப்பதற்கான சட்ட அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதாக உள்ளது. இந்தச் சட்டம் ஜனாதிபதிக்கு விரிவான அதிகாரங்களை வழங்குவதோடு, அவை கடந்தகாலத்தில் ஆணைக்குழுக்களைக் கட்டுப்படுத்தி பெரிய முறையில் அவற்றின் சுயாதீனத் தன்மையையும் தாக்கத்தையும் பாதித்துள்ளது.

296. பெரிய மற்றும் திட்டமிடப்பட்ட மனித உரிமைகளின் துஷ்பிரயோகம் பற்றிய பொறுப்புக் கூறலுக்கான வேண்டுகோள்களுக்குப் பதில் அளிக்குமுகமாக அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் தொடர்ச்சியாக சஞ்சலத்தை ஏற்படுத்தக் கூடியவை என்ற அனுபவம் உண்டு. 30 வருட காலப்பகுதியொன்றில் 1977ஆம் ஆண்டு சன்சோனி ஆணைக்குழுவுடன் ஆரம்பித்து இந்த ஆணைக்குழுக்கள் பல தவறுகள் காரணமாக அவற்றின் நடவடிக்கைகளைச் சரிவரச் செய்ய முடியாமலிருந்துள்ளன. இந்தப் பெரிய கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும்,சில ஆணைக்குழுக்கள் உண்மையைக் கண்டறிவதில் ஓரளவு மற்றும் பொறுப்புக்கூறல் பற்றிய முக்கியமான பரிந்துரைகளைச் செய்துள்ளன. இருந்தபோதிலும், குழு முன்னிலையில் உள்ள தகவலின் படி 1977 இல் இந்த ஆரம்பப் பொறித்தொகுதி ஆரம்பிக்கப்பட்ட 33 வருட காலப்பகுதியில், ஆணைக் குழுவொன்றின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந் துரைகள் தனிநபர் அல்லது அமைப்பு மட்டத்தில் மிகக்குறைந்த அளவிலான பொறுப்புக்கூறலை மாத்திரமே ஏற்படுத்தியுள்ளன. சர்வதேசத் தரங்களுடன் ஒத்திருக்கும் விதத்தில் பொறுப்புக்கூறல் விடயங்கள் மீது நடவடிக்கை எடுக்க ஒன்றன்பின் ஒன்றாக பதவிக்கு வந்த அரசுகள் காட்டிய அரசியல் மனவுறுதிப் பாடின்மை இந்த முன்னைய செயற்பாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய முக்கிய பாடங் களாகவுள்ளன. எல்.எல்.ஆர்.சி. எவ்வளவு தூரத்துக்கு உண்மையான பொறுப் புக்கூறலுக்கான பங்களிப்பை வழங்குவதற்கான நிலைச்சக்தியைக் கொண்டிருப்பது என்பதை மதிப்பீடு செய் வதற்கு இந்த கடந்தகால அனுபவம் பொருத்தமாய்யிருக்கிறது.

### 1. எல்.எல்.ஆர்.சி.இன் ஆணை

297. பயனுறு பொறுப்புக்கூறல் பொறித் தொகுதியாக எல்.எல்.ஆர்.சி. இன் நிலைத்தகவினை மதிப்பீடு செய்வதற்கு அதன் முக்கிய ஆக்கக்கூறுகளை வழங்குகிறது. 2010 மே 15 ஆம் திகதி ஜனாதிபதி ஆணையில் குறித்துள்ளபடி, எல்.எல்.ஆர்.சி. '2002 பெப்ரவரி 21 ஆம் திகதி மற்றும் 2009 மே 19 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலான பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, அதாவது:

(I) 2002 பெப்ரவரி 27 ஆம் திகதி அமுலுக்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தோல்விக்கு வழிகோலிய உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் மற்றும் 2009 மே 19 ஆம் திகதி வரை, அதன் பின்னர் நிகழ்ந்த நடவடிக்கைகளின் தொடர்;

(II) இது தொடர்பாக ஏதும் ஒரு நபர், குழு அல்லது நிறுவகம் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்க வேண்டிய பொறுப்பு;

(III) மீண்டும் நேராமலிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நாம் அந்தநிகழ்வில் இருந்து மற்றும் அவற்றுடன் சார்ந்த அவதானங்கள் தொடர்பில் கற்கக் கூடியபாடங்கள்;

(IV) அந்தநிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட ஏதும் நபர்கள் அல்லது அவர்களைச் சார்ந்திருப்போர் அல்லது அவர்களின் வாரிசுகளுக்கு இழப்பீட்டினை செயற்படுத்தக் கூடிய முறைமைகள்;

(V) அத்தகைய அவதானங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நேர்வதைத் தடுப்பதற்காக, சகல சமூகங்களுக்கிடையேயும் மேலும் தேசிய ஐக்கியம் அத்துடன் மீளிணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்காக மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய நிறுவக, நிருவாக மற்றும் சட்டவாக்க நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகள்.

298. அதன் ஆணைக்கு எவ்வாறு அது விளக்கமளிக்கிறது என்பதை எல்.எல்.ஆர்.சி. தெளிவாகக் குறிப்பிட வில்லை என்பதோடு, அதன் முன் ஆஜராக விரும்புவோருக்கு இந்த விடயத்தில் ஏதும் வழிகாட்டல்களை வழங்கவுமில்லை. போர் நிறுத்த ஒப்பந்தத் தின் தோல்வியைத் தொடர்ந்துவந்த நிகழ்வுகளின் தொடர் பற்றி ஆராய்வதற்காக தெளிவாக எல்.எல்.ஆர்.சி. பணிக்கப்பட்ட போதிலும், அதன் ஆணையின் விதிகள் பொறுப்புக்கூறலை பொதுவான சொற்களில் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களைக் குறிப்பாகவோ தெளிவான முறையில் அணுகவில்லை.

299. எல்.எல்.ஆர்.சி. இனைக் குழு நேரடியாகச் சந்திக்க முடியாதிருந்ததால், எல்.எல்.ஆர்.சி. பற்றிய குழுவின் கேள்விகளுக்கு ஜனாதிபதிச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட அரசின் எழுத்து மூலமான பதில்கள் மற்றும் பெப்ரவரி 22ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது சட்டமா அதிபர் இந்த விடயங்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய கருத்துக்கள் மீது குழு மாறாகத் தங்கியிருந்தது. உண்மையிலேயே யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் தொடர்பான பொறுப்புக் கூறல் விடயங்களை ஆராய்வதற்கான ஆணை எல்.எல்.ஆர்.சிக்கு வழங்கப்பட்டுள்ளதாக விளக்கிய சட்ட மா அதிபர், பொறுப்பு க்கூறல் பற்றிய கருத்து பொறுப்புடன் சமமான தொன்றாகும் என உறுதிப்படுத்தி ஆணைக்குழு அத்தகைய ஏதும் விடயங்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு அதற்கு அனுமதி வழங் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஆயினும், சர்வதேசத் தரங்கள் மற்றும் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட மீறலுக்குப் பொறுப்பு எனக் காணப்பட்ட தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு விளைவுகளை அமர்த்துவதன் மூலம் பொறுப்புக் கூறல் முன்செல்வதால், இரு மனவுருக்களும் நன்கு வரையறுக்கப்பட்டனவாக உள்ளன. பொறுப்பினைச் சாட்டுவது பொறுப்புக் கூறலுக்கு நிலைச் சக்தி கொண்ட முக்கியமான முன் நிபந்தனையாக இருந்தபோதிலும், மனித உரிமைகள் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பெரிய மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய கடமையிலிருந்து அது ஒரு அரசை விடுவிக்காது.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 26**

300. தென் ஆபிரிக்காவின் ரி.ஆர்.சி. மற்றும் ஐக்கிய இராஜதானியின் ஈராக் பற்றிய விசாரணை (சில்கொட் விசாரணை) ஆகியவற்றின் அனுபவத்தை அரசாங்கம் பெற்றதாகக் குறிப்பிட்ட சட்ட மா அதிபர், எனவே அந்த அமைப்புக்களுக்குச் சமமான தொன்றாக எல்.எல்.ஆர்.சி. கணிக்கப்படவேண்டும் என்றார். ஆயினும், இரு விடங்களிலும் முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. மேலே கூறப்பட்டதுபோன்று, எல். எல்.ஆர்.சிக்கு முற்றிலும் மாறுபட்டதாக, சம்பந்தப்பட்ட ஆள்களின் மற்றும் நிறுவனங்களின் அடையாளத்தை உள்ளிட்ட பெரிய மனித உரிமைகள் மீறல்களைப் புலனாய்வு செய்வதற்கு தென் ஆபிரிக்க ரி.ஆர்.சி.க்குத் தெளிவானதொரு ஆணை வழங்கப்பட்டிருந்தது. இது போன்ற சந்தர்ப்பங்களில் இலங்கை அரசு குறிப்பிட்ட சிலி மற்றும் கென்யா போன்ற ஏனைய உதாரணங்கள் உள்ளிட்ட ஏனைய நாடுகள் அபிவிருத்தி செய்த சிறந்த பழக்கங்கள் அவர்களது ஆணைக்குழுக் களுக்கு பெரிய மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சட்டத்தின் மீறல்களைப் புலனாய்வு செய்யுமாறு ஆணையை வழங்கியிருந்தன.

301. 'தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகள் எப்படி எடுக்கப்பட்டன என்பதை உள்ளிட்ட ஐக்கிய இராஜதானியின் ஈடுபாட்டை மற்றும் என்ன நேர்ந்தது என்பதை சரியாகவும் நம்பகமான முறையிலும் இனங்காண்பதற்காக மற்றும் கற்றுக்கொள்ளக் கூடியபாடங்களை இனங்காண்பதற்காகவும்' 2001 - 2009 வரையிலான எட்டு வருடகாலப் பகுதியொன்றை மறு புறத்தில் ஈராக் பற்றிய விசாரணை பரிசீலிக்கிறது. அதன் ஆணை, எல்.எல்.ஆர்.சியுடன் நெருக்கமான சமாந்திரத்தைக் கொண்டதாகக் கூறப்பட்ட போதிலும், தனியார் அல்லது நிறுவக பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக அது தெளிவாகவே வடிவமைக்கப்படவில்லை என்றாலும் அது ஆணைக்குட்பட்ட காலப் பகுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான அரசியல் பொறுப்புக்களை ஆராய்ந்து எதிர்காலத்துக்கு அதிலிருந்து பாடங்களைப் பெறுவதைக் குறிப்பதாகவுள்ளது. தனது விளக்கத்தில் இது பற்றிய புரிந்துணர்வை உறுதிப்படுத்திய சட்ட மா அதிபர், நாட்டின் இடப்பரப்பில் உள்ளவர்களைத் பொருத்தமானவாறு பாதுகாப்பதற்காக நீண்ட காலமாக ஒன்றன் பின் ஒன்றாகப் பதவிக்கு வந்த அரசுகளின் தவறுகளுக்கான பொறுப்பை அரசு ஏற்கிறது என்றார். இது முக்கியமானதொரு உத்தரவாதம் என்ற போதிலும்,சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் பெரிய மீறல்களுக்கான பொறுப்புக்கூறலுக்கான கடமையை நிறைவேற்றுவது போன்றதாக அது இல்லை. மற்றும் இருக்க முடியாது என்பதோடு, பாதிக்கப்பட்டோரின் உண்மை, நீதி மற்றும் இழப்பீட்டுக்கான உரிமைகளை மதிப்பதென்றுமாகாது.

302. பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பான எல்.எல்.ஆர்.சியின் ஆணை பற்றி ஒன்றுக்கு ஒன்று மாற்றமானதாக அரசின் பகிரங்க நிலை காணப்படுகிறது. ஒரு புறத்தில், சிரேஷ்ட இலங்கை அதிகாரிகள் கடந்த கால மீறல்கள் தொடர்பில் தண்டனை அளிக்கும் பொறுப்புக் கூறல் அமைப்பாக இல்லாது மீளிணக்கப்பாட்டை நோக்காகக் கொண்ட எதிர்காலத்தை நோக்கியதாக எல்.எல். ஆர்.சி. உள்ளது என்பதை வலியுறுத்துகின்றனர். அதே நேரம் அரச அதிகாரிகள் விடுக்கும் ஏனைய அறிக்கைகள், சில குறிப்பிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் சம்பவங்களை புலனாய்வுசெய்வதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றன. வெளிவிவகார அமைச்சர், ஜி.எல்.பீரிஸ், சர்வதேச சட்டதின் குற்றஞ்சாட்டப்பட்ட தனியான மீறல்களை ஆராய்வதற்கு போதியளவாக' எல்.எல்.ஆர்.சியின் ஆணை இருப்பதாக பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார். பின்பொருசந்தர்ப்பத்தில், தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றின் போது, குறிப்பிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட போர்க் குற்றங்களை புலனாய்வு செய்வதற்கான உகந்த இடம் எல்.எல்.ஆர்.சியே என அவர்கள் அழுத்தமாகத்தெரிவித்தனர்.

303. இறுதியாக, எல்.எல்.ஆர்.சியின் காலஞ்சார்ந்த ஆணை தெளிவாக 2009, மே 19 ஆம் திகதி முடிவுக்கு வருகிறது. என்பதோடு அம்முடிவுத் தேதியில் இருந்து அதற்குப் பின் யுத்தத்தின் முடிவுக்குப் பின்னால் நிகழ்ந்த நம்பகமான மீறல்களை எல்.எல்.ஆர்.சி. கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவது அதற்குத்தடையாக இருக்கும்.

304. அது எவ்வாறிருப்பினும், அரசு அல்லது அதன் முகவர்களை உள்ளிட்ட யுத்தத்தின் எந்தவொருதரப்பினராலும் புரியப்பட்ட சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களைப் புலனாய்வு செய்வதற்கான தெளிவான அதிகாரத்தைக் கொண்ட பொறுப்புக்கூறும் பொறிமுறை தொகுதியொன்றுக்கான தெளிவான சர்வதேச தரங்களை எல்.எல்.ஆர்.சியின் ஆணை திருப்திப்படுத்தவில்லை.

### ஆணைக்குழுவின் சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்ற தன்மை

305 குற்றஞ்சாட்டப்பட்ட மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்களை புலனாய்வு செய்யும் அமைப்பொன்று சுயாதீனமான,பக்கசார்பற்ற மற்றும் திறமை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதைச் சர்வதேச சட்டம் தேவைப்படுத்துகிறது.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 550 புள்ளிகளைப் பெற்று வலிகாமம் வலயம் முதலிடம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் வலிகாமம் கல்வி வலயம் 550 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் 449 புள்ளிகளைப் பெற்று யாழ். கல்வி வலயம் இரண்டாம் இடத்தையும், 194 புள்ளிகளைப் பெற்று வடமராட்சி கல்வி வலயம் முன்றாமிடத்தையும், 107 புள்ளிகளைப்பெற்று தென்மராட்சிக் கல்வி வலயம் 4 ஆம் இடத்தையும், 50 புள்ளிகளைப் பெற்று தீவகக் கல்வி வலயம் ஐந்தாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (த-23)



# நெல்லியடி ம.வி. நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 28

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி போட்டிகளை அது நடத்தவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் ஏழு பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியும் அழைக்கப்பட்ட பாடசாலைகளின் பெண் அணிகளுக்கான வலைபந்தாட்ட சுற்றுப் போட்டியும் வடமராட்சிப் பகுதியில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான 11 பேர் பங்குபற்றும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தால் நடத்தப்படவுள்ளன.

இதில் பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர் வரும் 7 ஆம் 8 ஆம் திகதிகளிலும் பெண்களுக்கான வலைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(த-23)

# யாழ். குத்துச் சண்டை அணி மாகாணப் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண பெரு விளையாட்டுப் போட்டியில் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட குத்துச் சண்டைப் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெறுகிறது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு மாவட்ட அணி பெற்றுக்கொண்டது.

மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விவரங்கள் வருமாறு:

**49 கிலோ பிரிவுக்கு உட்பட்டோர்**

என்.கதிரவன் (யாழ்ப்பாணம்), என்.கஜன் (யாழ்ப்பாணம்), ஜெ.ஆதவன் (முல்லைத்தீவு)

**52 கிலோ பிரிவுக்கு உட்பட்டோர்**

எம்.வரதாஸ் (முல்லைத்தீவு), ஏ.மிலானியஸ் (முல்லைத்தீவு), எஸ். மதனராஜ் (யாழ்ப்பாணம்), இ.நிரேசன் (யாழ்ப்பாணம்).

**56 கிலோ பிரிவுக்கு உட்பட்டோர்**

எஸ். திவாகர் (யாழ்ப்பாணம்), எஸ்.சதீஸ்குமார் (யாழ்ப்பாணம்), எம். ஜனார்த்தன் (முல்லைத்தீவு), இ.ராஜ்குமார் (முல்லைத்தீவு)

**60 கிலோ பிரிவுக்கு உட்பட்டோர்**

பி.அருள்தீபன் (யாழ்ப்பாணம்), இ. ராசலிங்கம் (முல்லைத்தீவு)

**64 கிலோ பிரிவுக்கு உட்பட்டோர்**

எம்.தர்மராஜ் (யாழ்ப்பாணம்), எ. அருள் (யாழ்ப்பாணம்)

**65 கிலோவுக்கு உட்பட்டோர்**

எஸ். சதீஸ் (முல்லைத்தீவு)

**75 கிலோவுக்கு உட்பட்டோர்**

ஆர்.ரமேஸ் (யாழ்ப்பாணம்)

முதாலாமிடத்தைப் பெற்ற வீரர்கள் ஜூலை மாதம் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும் தேசியப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ளனர் என்று வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (த-23)

# வட மாகாணப் பாடசாலைகளுக்கு கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம்



யாழ்ப்பாணம், மே 28

கல்வி அமைச்சும் இலங்கைப் பாடசாலைகள் கரப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து வடமாகாணப் பாடசாலைகளின் கரப்பந்தாட்டப் பயிற்றுநர்கள், ஆசிரியர்கள், மாண வர்களுக்குக் கரப்பந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றை நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தின.

இந்த முகாமில் பயிற்சிகளை சிதுவ தேவ தாமர வித்தியாலயத்தின் கரப்பந்தாட்டப் பயிற்றுனர் சமித்த லக்ஸ்மன், தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களான கபில பண்ணாயக்க, நெல்லகாந்த ஆகியோர் வழங்கினர்.

இந்தப் பயிற்சி முகாமில் கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நிகால் பெர்ணான்டோ, சிதுவதேவ தாமர வித்தியாலய அதிபரும் இலங்கைப் பாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவருமான லக்ஸ்மன் விஜயரட்ண, வடமாகாண விளையாட்டுத் துறை உதவி கல்விப் பணிப்பாளர் எ.சத்தியபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவின் வழிகாட்டலில் யாழ். படைப் பிரிவு இந்த முகாமுக்கு அனுசரணை வழங்கியிருந்தது.

(த-23)

# சென். ஜோன்ஸுக்கு 31 இடங்கள்



யாழ்ப்பாணம், மே 28

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் கடந்த வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற மெய்வன்மைப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 31 இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டிகளில் 17 முதலிடங்களையும், 6 இரண்டாம் இடங்களையும், 8 மூன்றாம் இடங்களையும் சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்றுக்கொண்டது. (த-23)

# மெய்வன்மை தொழில் நுட்ப அலுவலர் பரீட்சை

யாழ்ப்பாணம், மே 28

இலங்கை மெய்வன்மைத் தொழில் நுட்ப அலுவலர்கள் தரம் 2 இற்கான பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்பும் அலுவலர்கள் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் செ. ரமணனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-23)

# கிரிக்கெட் போட்டி வவுனியாவில்

யாழ்ப்பாணம், மே 28

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் பெரு விளையாட்டுப் போட்டிகளில் ஆண், பெண் அணிகளுக்கிடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டி இந்த மாத இறுதியில் வவுனியாவில் நடைபெறும் என்று வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்தார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் எதிர்வரும் 3 ஆம் திகதி இப் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் விளையாட்டு அணிகளும் பங்கு பற்றவுள்ளன. (த-26-23)

# முதன்மை வீராங்கனையாக மானிப்பாய் மாணவி தெரிவு



யாழ்ப்பாணம், மே 28

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 5 மாணவி நிர்மலேஸ்வரன் விதுசனா மாவட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் முதன்மை வீராங்கனையாகத் தெரிவாகியுள்ளார்.

11 வயதுப் பெண்கள் பிரிவுக்கான போட்டிகளில் திறமையாக செயற்பட்டமைக்காக இவர் முதன்மை வீரங்கனையாகத் தெரிவாகி மாகாண மட்டப் போட்டிக்கு செல்லவுள்ளார்.

பாடசாலை அதிபர் திருமதி க.சரவணபவன், விளையாட்டு துறை பொறுப்பாசிரியர் திருமதி கௌரிவாசன் ஆகியோரின் வழிகாட்டலில் இவர் விளையாட்டுப் போட்டிகளில் பிரகாசித்து வருகிறார். (த-26)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுத் துறையினால் நடத்தப்பட்ட ஆனந்த ரட்ணம் வெற்றிக்கிண்ணத்துக்கான 19 வயதுப் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் முதற் தடவையாக பங்குபற்றி மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்ட யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியினர். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்கந்தாவின் வாழ்த்துக்கள்



இன்று ஐம்பது அகவை காணும்
எங்கள் அதிபர்
செஞ்சொற் செல்வர்
திரு.ஆறு. திருமுருகன்

செஞ்சொல்லின் செல்வர் நீர்
சிவ நெறித் தவமகன் நீர்
அஞ்சாது எங்கும்
அறமுரைக்கும் வள்ளலும் நீர்
யாருமற்ற முதியோர்க்காய்
சிவபூமி இல்லமுடன்
மனநலம் குறைந்தோர்க்கும்
மகிழ்வளித்த பெரியோர் நீர்
ஸ்கந்தாவின் மாணவர்க்கு
சிறந்ததோர் அதிபரும் நீர்
அன்னையாம் துர்க்கையவள்
அருள் நெறியில் உம் வாழ்வு
என்றென்றும் வாழ்ந்திடுக!
எல்லோரும் வாழ்வதற்காய்

(49,20,22)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.
(சி/231)
ஸ்கந்தா சமூகம்


# நானாட்டானில் இன்றும் நாளையும் தடகளப் போட்டி

வலி.வடக்கு, மே 28

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்றும் நாளையும் நானாட்டான் பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் காலை 8 மணி முதல் பிரதேச செயலாளர் சி.சந்திரஐயா தலைமையில் நடைபெறவுள்ளன.

நாளை பிற்பகல் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் எ.ஆர். அன்புராஜ் லெம்பேட்டும் சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேச 542ஆவது படைகளின் கட்டளைத் தளபதி கேணல் பிக்கும் லியனகே, நானாட்டான் பிரதேச வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினராகப் பிரபல வர்த்தகர் கே.இம்மானுவேல்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஐ-86)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள், சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 01.06.2011 விநியோகிக்கப்படும்.

- ராஜின், நாவலர் வீதி, ஆனைக்கோட்டை.
- ஜெனசி பாம், பருத்தித்துறை-(0773541771)
- துர்க்கா பாம், சுன்னாகம்-(0779346599)

T.P- 0776090926, 0212222867

## கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ். நகரின் மையப்பகுதியில் இல. 60 ஜும்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாக கட்டப்படும் 7 கடைகளைக் கொண்ட கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு.

தொ.பே.: 0778995431, 0750434277

## காணி விற்பனைக்கு

3 பரப்பு விசாலமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகத்துக்கும் மாநகர சபை அலுவலகத்துக்கும் அருகில் விற்பனைக்குண்டு.தரகர்தேவையில்லை.

தொடர்பு:- 0772363537.

## கட்டடம் வாடகைக்கு உண்டு

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் 900 சதுர அடிகொண்ட வாகனத்தரிப் பிடத்துடன் கூடிய கட்டடம் வாடகைக்கு உண்டு.[களஞ்சியம் மற்றும் வேறு தேவைக்கும் உகந்தது]

தொடர்பு: 0750403190

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை 2ம் குறுக்குத் தெரு இல. 37 இல் அமைந்துள்ள வீடு சிறிய குடும்பத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு வாடகைக்கு விடப்படும். தொ.பே.: 0776284687, 0759442414.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 28

அளவெட்டி வடக்கு சாத்தனார் கலட்டி பூரணி, புட்கலாதேவி ஐயனார் ஆலயத்தின் விசாகப் பொங்கல் விழா இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

***

யாழ்ப்பாணம், மே 28

மல்லாகம்தெல்லியம்பற்றை ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா இன்று சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-313)

***

யாழ்ப்பாணம், மே 28

இளவாலை பேச்சி அம்பாள் ஆலயத்தில் அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை சங்காபி ஷேகமும் அம்பாள் வீதியுலா வருதலும் இடம் பெறும். (ற)

# விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி, மே 28

ஜக்கிளும்மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர்மோதிக் கொண்டதில் இருவர்காயமடைந்தனர்.

அதேஇடத்தைச் சேர்ந்த கந்தையா சிவப்பிரகாசம் (வயது-70)நுணாவிலைச் சேர்ந்த செல்வராசா இராதீபன் (வயது-26) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-27)


## PATRICIAN INSTITUTES
## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

புதிய இலவச பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம்: 06.06.2011**

குறிப்பு : போரில் பாதிக்கப்பட்ட, வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பிள்ளைகளுக்கு தகுதி அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

பின்வரும் பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படும்.

1. COMPUTER COURSES (கணினி பயிற்சிநெறி)
2. Short Hand Typing(English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Typing(Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்
4. Sewing (தையல்)
5. General Moto Mechanism(மோட்டார் வாகனம் திருத்துதல்)
6. General Electrician (ஜெனரல் எலக்ரிஸன்)
7. Radio ,T.V Repairing (வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல்)
8. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
9. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
10. Carpentry (மரவேலை)
11. Refrigeration and Air conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)

மேற்படி நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு 30.05.2011 - 01.06.2011 வரை எமது அலுவலகத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.
நேரம்: காலை 9.00 - 12.00 வரை
இடம்: பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தரவும்
1. போரில் அல்லது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாணவர்கள் பங்குத்தந்தை அல்லது கிராம சேவகரின் அத்தாட்சி கடிதம்
2. கணினிப்பயிற்சி நெறி பெற விரும்புவோர் (G.C.E.(O/L) கல்விச்சான்றிதழ்.

மேலதிக விவரங்களுக்கு:
Register, Patrician Institute, 61 (59), St. Patrick s Road, Jaffna.
T.p:0212226148 Fax: 0212226148 Email: Spitee @ Sltnet.lk
(சி/230)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்துக்கு உத்தியோகபூர்வமான அதிகாரிகள் வந்து தங்கிச் செல்வதற்கான சகல வசதிகளையும் கொண்ட (குறைந்தது 03 அறை, (attach bathroom) வாகனம் நிறுத்துவதற்கு உரிய வசதியுடன்) வீடு ஒன்று வாடகைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது. எனவே தகுதி வாய்ந்த உரிமையாளர்கள் எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

இவற்றுக்கான கூறுவிலை படிவங்களை 06.06.2011 பி.ப. 3.00 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்களை எதிர்வரும் 14.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்துக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

விலாசம்: பிரதித் திட்டப்பணிப்பாளர்,
மீள் எழுச்சித் திட்டம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம்: 0212225068

## கண்ணீர் அஞ்சலி

*செல்வி இராசமலர் இராசதுரை*



எமது கல்லூரியில் ஆசிரியையாக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக கடமையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக நீண்டகாலமாக உழைத்த செல்வி இராசமலர் இராசதுரை அகாலமரணமான செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன், அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்,
அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.
(C/233) (34)

## கண்ணீர்க் காணிக்கை



எமது வித்தியாலய ஆசிரியரும், ஆசிரிய நலன்புரி கழக செயலாளரும் ஆகிய சு.சிவானந்தன் அவர்களின் அன்புத் தாய்

**சுந்தரமூர்த்தி சிவகாமிப்பிள்ளை**

அவர்களின் திடீர் மறைவை அறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்.
கல்விசாரா ஊழியர்கள்.

## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 870 திகதி: 26.05.2011

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| S | 13 | 17 | 30 | 46 | 05 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 10,000,000.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 03 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 300 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14183 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 198017 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 29420 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**7,867,040.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**10,334,618.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாவட்டங்களில் 14 வீடுகள் மழை மற்றும் வெள்ள அனர்த்தங்களால் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 21 வயதுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகைத்தல் எதிர்ப்பு தினமாகும். இந்தத் தினம் சர்வதேச ரீதியில் கொண்டாப் படவுள்ளது. இந்தத் தினத்தை ஒட்டி யாழ். பிராந்தியத்திலும் புகைத்தல் எதிர்ப்பு தினம் கொண்டாடப் படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொது இடங்களில் புகைத்தல், மது அருந்துதல் மற்றும் 21 வயதுக்கு உட் பட்டவர்களுக்கு போதைப் பொருள்களை விற்பனை செய்தல் என்பன இலங்கையில் ஏற்கனவே சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளன. சர்வதேச நாடுகள் பலவற்றிலும் இந்தச் சட்டம் அமுலில் உள்ளது. இலங்கையில் உள்ள இந்தச் சட்டம் அமுலில் உள்ளபோதும் அனைத்துப் பிரதேசங்களிலும் இது கடுமையாக அமுல்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்திலும் இந்த நிலைமை காணப்படுகிறது.

யுத்தத்துக்கு பின்னரான தற்போதைய சூழ்நிலையால் இந்தச் சட்ட விரோத செயற்பாடுகள் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளன. குறிப்பாக பாட சாலை மாணவர்கள் புகைப் பொருள் பாவனை போதைவஸ்து பாவனை, மதுபாவனை என்பவற்றில் முன்னரை விட அதிகளவில் ஈடுபடுகின்றனர்.

எனவே இந்தச் சட்ட விரோத செயற் பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்காக இந் தச் சட்டங்கள் கடுமையாக அமுல் படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை பிரதேச ரீதியாகவும், பாட சாலைகள் ரீதியாகவும் அடுத்த மாதத் தில் முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ-4)

## வன்னேரிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் பொ. சிவகுமார், யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன், அக்கராயன் பொலிஸார் ஆகியோரின் முன்னிலை யிலேயே விசாரணை இடம்பெற்றது.

மனித மண்டையோட்டுடன் மீட்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளினால் போராளிகளுக்கு வழங்கப்படும் 'த.வி.பு ஐ 7176' என்ற தகடு இரண்டும் காணப்பட்டது. அத்துடன் ரவைக்கூடு தாங்கி (ஜக்கற்) மீட்கப்பட்டது.

அதிலிருந்து வெடிக்காத நிலையில் இரண்டு கைக் குண்டுகளும், மகசின் இரண்டும், துப்பாக்கிரவைகள் சில, சிறிய ஒயில் குப்பியொன்றும், பற்தூரிகை, ரோச், பற்றரி சார்ஜர் என்பனவும் மீட்கப்பட்டன.

இடுப்பின் கீழ் பகுதிகள் மண்ணில் புதையுண்ட நிலையில் இருந்தன. பின்னர் இராணுவத்தினரால் அது இழுத்து எடுக்கப்பட்டது. இதன்போது ஜீன்ஸிலிருந்து மேலும் சில எலும்புகள் மீட்கப்பட்டன.

அத்துடன் இவற்றுக்கருகில் வீழ்ந்து வெடித்த நிலையில் புதையுண்டிருந்த ஆர்.பி.ஜி.யின் எஞ்சிய பாகங்களும் மீட்கப்பட்டன.

யுத்தத்தின் போது ஆர்.பி.ஜி. தாக்குதலில் கொல்லப்பட்ட புலி உறுப்பினருடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-15-6)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் சுப்பையா



அனலைதீவைப் பிறப்பிடமாகவும், இல.95, சிவிக் சென்ரர், உருத்திரபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சுப்பையா நேற்று(27.05.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் தில்லைமலர் தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கவேலு, இராசாத்தி மற்றும் இலட்சுமி(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலச்சந்திரன், லோகநாதன் (லோகன் பந்தல் சேவை, திருநகர், கிளிநொச்சி) ஆகியோரின் தந்தையும் பிரதீபாவின் அன்பு மாமனாரும் , நிகார்ஜன், வைஷ்ணவி, ஜானுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.05.2011) சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.95, சிவிக் சென்ரர்,*
*உருத்திரபுரம் , கிளிநொச்சி.*

தகவல்:
லோகநாதன்(மகன்).

## சிகிச்சை பயனின்றி பெண் மரணம்

புலோலியைச் சேர்ந்த இளம் பெண்ணொருவர் எரிகாயங்களுக்குள்ளாகி யாழ். வைத்தியசாலையில் 13 நாள்களாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சைபலனின்றி அங்கு மரணமானார்.

சின்னத்தம்பி தர்சினி (வயது -22) என்ற இளம் பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

குறித்த பெண் வீட்டில் சமையல் செய்யும் போது அடுப்புக்குள் மண்ணெண்ணை ஊற்றிய போது ஏற்பட்ட தீ குறித்த பெண்ணின் உடை மீது பற்றிக்கொண்டதாக தெரிவிக்கப் படுகிறது. (ஐ-15-05)

## பஸில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் உதவிகளும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 60 பேருக்கு நஷ்டஈடு கொடுப்பனவுகளும் வழங்கப் படவுள்ளன.

இந்த நிகழ்வினை புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலை அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## இன்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது தேடப்படுவோர் பட்டியலில் கே.பியின் பெயரை மீண்டும் உள்ளடக்கியுள்ளனர்.

இதற்கு முன்னர் சர்வதேச ஆயுதக் கடத்தல் தொடர்பான குற்றச்சாட்டுகளின் பேரில் கே.பியின் பெயர் இன்டர்போல் பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப் பட்டது. இருந்தும் இலங்கை அரசு அவரைக் கைது செய்ததை அடுத்து கே.பியின் பெயரை இன்டர் போல் பொலிஸார் தேடப்படுவோர் பட்டியலில் இருந்து நீக்கியிருந்தனர்.

இப்படியிருக்க இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளே திட்டமிட்டு மேற்கொண்டனர் என்ற தகவலை அண்மையில் இந்திய தொலைக் காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கே.பி. கூறினார். அவரால் வழங்கப்பட்ட இத்தகவலை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் நீதி மன்ற தேடப்படுவோர் பட்டியலிலும், இன்டர் போல் பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டியலிலும் கே.பியின் பெயர் மீண்டும் உள்ளடக் கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பின்னர் கிளிநொச்சி பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டனர்.

''தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்க'', ''சரத் பொன்சேகாவை உடன் விடுதலை செய்க'', அவசரகாலச் சட்டத்தை உடன் நீக்குக'' மற்றும் ''ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துக'' ஆகிய வசனங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு ஜே.வி.பியின் ஆதரவாளர்களை கைதுசெய்வதனால் அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள கருத்துகளை வெளியிடுவதற்கான உரிமை மீறப்பட்டுள்ளது.

இதேவேளை, சுவரொட்டிகளை ஒட்டுவது சட்டவிரோதமான செயல் அல்ல. சுவரொட்டிகளை ஒட்டும்போதே எமது ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டனர். இது சட்டவிரோதச் செயல் என்பதுடன், ஜனநாயகத்துக்கு எதிரான செயலுமாகும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு வாக்காளர் இடாப்பு தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படும்.

முன்னதாக எஞ்சியுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இம்மாதம் 31ஆம் திகதி காலாவதியாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அவ்வாறு காலாவதியாகவில்லை என தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

வேட்பு மனு பிரச்சினை மற்றும் நாட்டின் குறிப்பிட்ட இடங்களில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி காரணமாக சில உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள்ஒத்தி வைக்கப்பட்டமை தெரிந்ததே.

இந்நிலையில், இந்த உள்நாட்டு சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான திகதி எதிர் வரும் வாரம் தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவிக்கப்பட உள்ளது என்று தேர்தல்கள் செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

## எமது பிரச்சினைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலட்சம் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்துள்ளோம். இன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோம். காலிமுகத்திடலில் சுத்தமான காற்றைச் சுவாசிக்கின்றோம். அதேபோன்று, இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் தமிழர், சிங்களவர், இஸ்லாமி யர் என்ற பேதம் இன்றி சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டும். இன, மத, மொழிச் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதே எனது நோக்கம்.

இந்தப் பணியில் வெற்றி பெறுவதற்கு முப்படையினரின் பங்களிப்பும், தியாகமும் கௌரவிக்கப்படவேண்டும்.

அன்று பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக இரத்தம் சிந்திய படையினர் இன்று இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வியர்வை சிந்தி உழைக்கின்றனர்.

மனித உரிமை, மனித உரிமை என்று கூச்சல் போடுகின்றனர். தான் ஒரு மனிதன் சுதந்திரமாக வாழ முடியாத நிலையில் மனித உரிமையால் என்ன லாபம்?

ஆனால், நாம் பயங்கரவாதப்பிடியில் சிக்கியிருந்த மக்களை மீட்டு, அவர்கள் சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்தி உள்ளோம்.

பயங்கரவாதிகளினால் அழிக்கப்பட்ட தேசிய சொத்துகளையும், வடக்கு,கிழக்கு வாழ் மக்களின் வாழ்க்கையையும் மீண்டும் கட்டி எழுப்ப பாரிய அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றோம்.

கோயில்கள், பாடசாலைகள், பாலங்கள், பெருந் தெருக்கள், வைத்தியசாலைகள் என அடிப்படைக் கட்டமைப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படுத்துவதே எமது நோக்கம்.

பயங்கரவாத ஒழிப்புப் போராட்டத்தினால், அகதிகளாக்கப்பட்ட பல இலட்சம் தமிழ் மக்களை மீண்டும் மீளக் குடியமர்த்தி உள்ளோம். அவர்களுக்குத் தேவையான பாய், படுக்கைகளுடன் நுளம்புத் திரிகளையும் கூட வழங்கி உள்ளோம்.

அரச படைகளுடன் நேரடியாக யுத்தம் புரிந்தவர்களுக்கும் புனர்வாழ்வும், உணவும், மருந்தும், ஏனைய அடிப்படை வசதிகளையும் வழங்கிப்பாதுகாத்த ஒரே நாடு இலங்கை மட்டும்தான். வேறு எந்த நாடும் இப்படி நடந்துகொண்டதாக சரித்திரமே இல்லை.

ஆனால், வெளிநாடுகளில் வாழும் பழைய புலிகள் மீண்டும் உணர்வுகளைத் தூண்டிவிட்டு கிளர்ச்சிகளை ஏற்படுத்த முனைகின்றனர்.

யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. புலம்பெயர்ந்து சொகுசு வாழ்க்கை வாழும் இவர்கள், வன்னியில் பாதிக்கப்பட்ட தமது மக்களுக்காக எதைச் செய்தனர்?

நிதி திரட்டுகின்றனர். கப்பம் வசூலிக்கின்றனர். ஆயுதங்களைச் சேர்க்கின்றனர். கோடிக்கணக்கில் பணத்தை தம் வசம் வைத்துள்ளனர். தமிழ் மக்களின் வாழ்வாதாரத்துக்காக ஒரு துளியளவும் செலவிடவில்லை.

பிரபாகரனின் மறைவுக்குப் பின் அவரது பெற்றோர் கடைசிவரை எங்களின் பாதுகாப்புடனேயே இருந்தனர். புலிகளின் பிரதானிகளின் குடும்பங்களுக்கும், உறவினர்களுக்கும் எந்தவிதமான பாகுபாடும் இன்றி புனர்வாழ்வளித்துள்ளோம்.

நாம் தனி ஓர் இனத்துக்கு எதிராகவோ, தனி ஒரு சமூகத்துக்கு எதிராகவோ அல்லது எந்த ஒரு சமூகத்தையும் பழிவாங்க வேண்டும் என்ற நோக்குடனோ யுத்தம் புரியவில்லை. பயங்கர வாதத்துக்கு எதிராகவே யுத்தம் புரிந்தோம். அதில் வெற்றி கண்டுள்ளோம்.

தற்கொலைப் படையினரின் கண்ணிவெடிகளுக்கு மத்தியில் மரண பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்த மக்கள் இன்று எந்தவிதமான அச்சமும் இன்றி வாழும் நிலையை ஏற்படுத்தி உள்ளோம்.

சயனைட் குப்பிகளைக் கழுத்தில் கட்டிக் கொண்டு அலைந்த சிறுவர்கள் இன்று வெள்ளைச் சீருடையுடன் புத்தகமும் கையுமாகச் செல்லும் நிலையை ஏற்படுத்தி உள்ளோம்.

இன்று நாட்டில் சகல இன மக்களும் நல்லுறவுடன் வாழும் நிலையை ஏற்படுத்தி உள்ளோம். அண்மையில் இடம்பெற்ற 2600ஆவது பௌத்த ஜயந்தி தினத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பெருந்தொகையான தமிழ் மக்கள் கொழும்புக்கு வந்து கலந்துகொண்டனர். அதே போன்று வெசாக் பண்டிகையில் தமிழ், முஸ்லிம் மக்கள் பௌத்தர்களுடன் இணைந்து கொண்டா டினர்.

நாட்டில் வாழும் சகல இன மக்களும் நல்லுறவுடன் வாழும் நிலையை ஏற்படுத்தி வருகின்றோம். எமது நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் ஈடுபடக்கூடாது.

நமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும். அந்நிய தலையீடுகளினாலோ அழுத்தங்களினாலோ தீர்க்கமுடியாது என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
வைகாசி 25, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள் -
அனைத்துப்பங்கு(ASPI) 7452.68↑
மிலங்கா(MPI) 6879.94↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2.5Bn
பங்குகளின் அளவு(No.) 115.23Mn
வியாபாரம்(No.) 20663
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
டியுனமிஸ் 22.70
கொழும்பு லேண்ட் 30.60
கெள்சி 21.10
எஸ் எம் பி லீசிங் 0.60
பெ(F)ஸ்ர் கபிரல் 26.90
குறைவு(Top 5 losers) - விலை Rs.
மேகன்ரைல் ஸிப்பிங் 241.00
யூனியன் கெமிகல் 800.80
அவீவா என்.டீ.பீ. 290.20
லங்கா அசோக் 5900.00
புளுடயமன்ட் 1.90
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யாழ். நகரை புராதன நகராக்குவது குறித்து வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் ஆராய்கின்றனர்

நெல்லியடி, மே 28

புராதன நகரமாக மாற்றுவது பற்றிய விளக்க பயிற்சிப்பட்டறை கடந்த திங்கட்கிழமை யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் நெதர்லாந்து அரசில் கலாசார அமைச்சை சேர்ந்த உயர் அதிகாரிகள், யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் புஷ்பரட்ணம், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் இலங்கை தொல்லியலாளர் சபையின் செயலாளருமாகிய பேராசிரியர் பிரசாந்த பி. மண்டாவல, மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர் எஸ். மானவல கட்டட கலைஞரும் தொல்லியலாளருமான ஜெயதிஸ்ஸ ஹேரத் ஆகியோர் உட்பட தொல்லியல் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டு விளக்கங்களை அளித்தனர்.

தொல்லியல் அம்சங்கள், யாழ்ப்பாண புராதன நகர் வடிவமைப்பு ஆகியன பற்றிய பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாநகரசபை மற்றும் பிரதேச சபை அதிகாரிகள் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண கோட்டை புனரமைப்பு சம்பந்தமான நடவடிக்கைகள், ஒல்லாந்தர் கால வீடுகளை இனங்காணுதல் ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டது.

இலங்கையிலுள்ள முக்கியமான பல்கலைக்கழகங்களை சேர்ந்த வரலாற்றுத்துறை பேராசிரியர் பங்குபற்றி தமது விளக்கங்களை வழங்கிவருகின்றனர்.

இந்த நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-319)

## கலப்பட நல்லெண்ணெ விற்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 28

கலப்பட நல்லெண்ணெய் விற்பனை செய்த நபருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கலப்பட நல்லெண்ணெய் விற்பனை செய்ததாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பந்தப்பட்ட வர்த்தகர் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஐ-9)

## ஞாயிறு மின்தடை

யாழ்ப்பாணம், மே 28

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

# அச்சுவேலியில் நேற்று விபத்து; இளைப்பாறிய அதிபர் மரணம்

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நேற்று காலை நடைபெற்ற வாகன விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி இராசமலர் இராசதுரை (வயது - 62) தலை நசியுண்ட சம்பவ இடத்திலேயே பலியானார்.

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த இவர் அச்சுவேலி புனித தெரேசாள் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபராவார்.

காலையில் பிள்ளையார் கோயிலுக்கு சென்று வணங்கிவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக்கொண்டிருக்கும் போது, வடமராட்சிக்கு சட்ட விரோதமான முறையில் கல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரத்தினால் மோதுண்டு விழுந்த போது உழவுயந்திரத்தின் சக்கரத்தினுள் தலை நசியுண்டது.

அவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு, மல்லாகம் நீதிவான் சம்பவத்தை பார்வையிட்டதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டது.

உழவுயந்திரத்தை செலுத்தி வந்த வடமராட்சியைச் சேர்ந்த சாரதி தலைமறைவாகிப் போனதும் பின்னர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் சரண் அடைந்தார். அச்சுவேலி பொலிஸார் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-11)

# வர்த்தகரின் போலி 5 ஆயிரம் ரூபாதாள் வங்கி அதிகாரிகளால் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கி ஒன்றில் ஒருவரால் வைப்பிலிடப்பட்ட ஒரு தொகைப் பணத்தினுள் ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கோப்பாயில் உள்ள வர்த்தகநிலையமொன்றுக்கு 'ஹயெஸ்' வாகனமொன்றில் சென்ற ஒரு குழுவினர் ஒரு தொகைப் பொருள்களைக் கொள்வனவு செய்து குறித்த ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளைக் கொடுத்து மிகுதிப் பணத்தையும் வாங்கிச் சென்றுவிட்டனர். குறித்த வர்த்தக உரிமையாளர் அந்த ஐயாயிரம் ரூபா தாளுடன் மேலும் ஒரு தொகைப் பணத்தினை தான் பொருள்கள் கொள்வனவு செய்யும் பிறிதொரு வியாபாரிக்கு மறுநாள் கொடுத்துள்ளார். அந்த வியாபாரி அந்தப் பணத்தினைப் பெற்று குறிப்பிட்ட வங்கியொன்றில் வைப்புச் செய்து விட்டுச் சென்றுள்ளார்.

குறித்த வங்கியில் நாணயத்தாள்களை ஒழுங்குபடுத்திய போது குறித்த ஐயாயிரம் ரூபா தாள் போலியானது என்பது அந்த வங்கி அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் குறித்த பணத்தை வைப்பிலிட்ட வாடிக்கையாளருக்கு குறித்த நாணயத்தாள் போலியானது, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படவில்லை எனத் தெரிவித்து குறித்த வங்கியால் சம்பந்தப்பட்டவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-4-72)

# கொழும்பு - வவுனியா ரயில் ஓமந்தை வரை நீடிப்பு

கொழும்பு, மே 28

கொழும்பு-வவுனியா ரயில் சேவை நேற்றுமுதல் ஓமந்தை வரை நீடிக்கப்பட்டுள்ளது. சுமார் 21 வருடங்களுக்குப் பின்னர் வவுனியா-ஓமந்தைக்கு இடையில் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புனரமைப்பு செய்யப்பட்ட ஓமந்தை ரயில் நிலையமும் பயணிகளின் பாவனைக்காக நேற்று பகல் 12.10மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது என்று ரயில்வே திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

21 வருடங்களுக்குப் பின்னர் ஓமந்தை ரயில் நிலையம் நேற்று திறக்கப்பட்டு கொழும்பிலிருந்து சென்ற யாழ்தேவி ரயில் இந்த ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

இதேவேளை, ஓமந்தை முதல் பளை வரையிலான ரயில்பாதை புனரமைப்புப் பணிகளை இந்தியநிறுவனம் ஒன்று மேற்கொண்டு வருகின்றது. (ஐ-சி)

# பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்க முதல்வர் மறுப்பதற்கு காரணம் என்ன?

## விந்தன் கேள்வி எழுப்புகிறார்

யாழ்ப்பாணம், மே 28

தென்னிலங்கையின் தேவைகளுக்கு யாழ். மாநகர சபையால் நிதி ஒதுக்க முடிகின்றது. ஆனால், சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொடுப்பதுக்காக சபை உறுப்பினர்கள் நிதி ஒதுக்குவதுக்கு முதல்வரால் அனுமதி மறுக்கப்படுகிறது. இது எந்த விதத்தில் நியாயம் எனக் காட்டமாக கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

யாழ். மாநகர சபையின் ஐந்தாவது மாதாந்தக் கூட்டத்தின் போதே முதல்வரிடம் இவ்வாறு அவர் கேட்டார்.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு தேவையான உபகரணங்களை வழங்குவதற்காக தனது நிதியை ஒதுக்குவதற்கு அனுமதிக்குமாறு விந்தன் கனகரத்தினம் கேட்டார்.

அதற்கு பாடசாலைகளின் தேவைகளை கல்வித் திணைக்களம் கவனித்துக் கொள்ளும். அதற்கு என மாநகர சபை நிதியை ஒதுக்க முடியாது என கூறி யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மறுத்து விட்டார்.

இதற்கு பதிலளித்துப் பேசும் போது விந்தன் கனகரத்தினம் கூறியவை வருமாறு -

கடந்த வெசாக் தினத்தின் போது யாழ். நகரில் இராணுவத்தினால் பல்வேறு வெசாக் அலங்கார கூடுகள் அமைக்கப்பட்டன. மின் விளக்குகளால் அமைக்கப்பட்ட அவற்றுக்கு மின்சாரம் வழங்கியதன் காரணமாக மின் கட்டணம் சுமார் மூன்றரை லட்சம் ரூபா மின்சார சபைக்கு வழங்கவேண்டி ஏற்பட்டது.

அந்தத் தொகையை யாழ். மாநகர சபையே செலுத்தியுள்ளது. அதேபோல் கடந்த வருடம் தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் உதவிக்காக ஒரு லட்சம் ரூபாவை யாழ். மாநகர சபை வழங்கியது.

இவ்வாறு தென்னிலங்கையின் தேவைகளுக்கு முண்டியடித்து உதவ முன்வரும் யாழ். மாநகர சபை யாழ்ப்பாண மக்களின் விடயத்திலும் அக்கறை காட்டவேண்டும்.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் பாடசாலைகள் பலவற்றுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். அதற்கு சபை உறுப்பினர்கள் நிதி ஒதுக்குவதற்கு முதல்வர் அனுமதி வழங்க வேண்டும் என்றார். (ஐ-14)

# நிகழ்வுகள்

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மே 28

கைதடி லயன்ஸ் கழகம் நடத்தும் ''இலவச மருத்துவ முகாம்'' நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கைதடி முத்துக் குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சலரோக பரிசோதனை, கண்பரிசோதனை மற்றும் சகல சிகிச்சைகளும் இடம்பெறவுள்ளதுடன் மருந்துகளும் வழங்கப்படவுள்ளது. வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு கண்ணாடி தேவைப்படின் கண்ணாடியும் வழங்கப்படும்.

இந்த மருத்துவ பரிசோதனையில் டாக்டர் எஸ். குகநாதன், டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், டாக்டர் திருமதி க. சௌந்தரராஜன் ஆகிய வைத்திய நிபுணர்கள் சிகிச்சைகளை வழங்கவுள்ளனர். (ற-313)

## வருடாந்த பரிசளிப்பு விழா

நாவற்குழி, மே 28

வடமாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களினதும் சமூக சேவைகள் அதிகாரிகளுக்கான ஒருநாள் செயலமர்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிறுவனத்தின் முக்கிய வேலைத்திட்டங்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | SUBJECTS | COLOM | JAFFNA | KILI | MAN | MULLAI | VAVU | TRINCO | BATTI | AMPA |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | MEDICINE | 1.977 | 1.8366 | 1.4671 | 1.3925 | 0.595 | 1.8127 | 1.5444 | 1.7438 | 1.7295 |
| 2 | DENTAL SURGERY | 1.9464 | 1.8255 | 1.4107 | 1.3455 | 0.5741 | 1.8089 | 1.5074 | 1.7269 | 1.713 |
| 3 | VETERINARY SCIENCE | 1.8291 | 1.7282 | 1.014 | 1.2184 | 0.5504 | 1.7223 | 1.4954 | 1.6453 | 1.6559 |
| 4 | MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.9093 | 1.7983 | 1.0577 | 1.3086 | 0.5732 | 1.7313 | 1.3713 | 1.7144 | 1.7087 |
| 5 | AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.614 | 1.6737 | 0.8552 | 1.1257 | 0.422 | 1.4227 | 1.2272 | 1.429 | 1.5237 |
| 6 | AGRICULTURE | 1.172 | 1.113 | 0.2752 | 0.3554 | 0.1138 | 0.828 | 0.9656 | 1.0525 | 1.12 |
| 7 | FOOD SCIENCE & NUTRITION | 1.5843 | 1.6135 | 0.8928 | 1.1125 | 0.5334 | 1.503 | 1.296 | 1.5166 | 1.5646 |
| 8 | FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7814 | 1.7688 | 0.8552 | 0.9217 | 0.539 | 1.666 | 1.3594 | 1.6069 | 1.6091 |
| 9 | BIOLOGICAL SCIENCE | 1.4853 | 0.9807 | 0.1861 | 0.1721 | -0.424 | 0.706 | 0.8101 | 0.8746 | 0.9974 |
| 10 | APPLIED SCIENCES (BIO.SC) | 1.3287 | 0.9356 | 0.2212 | 0.78 | -0.1324 | 0.7673 | 1.0295 | 0.8469 | 0.9541 |
| 11 | ENGINEERING | 1.8968 | 1.8217 | 1.0539 | 1.4088 | 0.8469 | 1.5752 | 1.3198 | 1.3874 | 1.4118 |
| 12 | ENGINEERING (EM) | 1.8769 | 1.8005 | 0.9292 | 1.2932 | 0.8371 | 1.4291 | 1.2526 | 1.3842 | 1.3815 |
| 13 | ENGINEERING (TM) | 1.8944 | 1.745 | 0.9691 | 1.1619 | 0.7098 | 1.42 | 1.2198 | 1.3468 | 1.3726 |
| 14 | QUANTITY SURVEYING | 1.8062 | 1.7907 | 1.0144 | 1.0647 | 0.6579 | 1.4367 | 1.2727 | 1.3562 | 1.3161 |
| 15 | COMPUTER SCIENCE | 1.675 | 1.556 | 0.6069 | 0.732 | 0.3858 | 1.1523 | 1.1803 | 1.1989 | 1.2291 |
| 16 | PHYSICAL SCIENCE | 1.2788 | 0.9491 | 0.374 | 0.0171 | -0.2552 | 0.4514 | 0.3362 | 0.4925 | 0.704 |
| 17 | SURVEYING SCIENCE | 1.5827 | 1.5696 | 0.8328 | 0.9735 | 0.3665 | 1.1958 | 1.0495 | 1.3235 | 1.1881 |
| 18 | APPLIED SCIENCES (PHY.SC) | 1.1391 | 0.9048 | 0.3647 | 0.2697 | -0.2554 | 0.9675 | 0.4943 | 0.8651 | 1 |
| 19 | MANAGEMENT | 1.6674 | 1.2336 | 0.9704 | 1.0643 | 0.7234 | 1.125 | 1.0128 | 1.1504 | 1.1929 |
| 20 | ESTATE MANAGEMENT & VALUATION | 1.7169 | 1.5418 | 1.2753 | 1.3417 | 1.0402 | 1.5521 | 1.4249 | 1.7131 | 1.751 |
| 21 | COMMERCE | 1.6112 | 1.2003 | 0.938 | 1.0182 | 0.6975 | 1.0552 | 0.9649 | 1.1161 | 1.1463 |
| 22 | PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.7195 | 1.5947 | 1.3846 | 1.5164 | 1.5422 | 1.6266 | 1.6587 | 1.798 | 1.8055 |
| 23 | BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.7219 | 1.5577 | 1.2848 | 1.5427 | 0.6339 | 1.6694 | 1.5251 | 1.5793 | 1.635 |
| 24 | ARTS * | 1.3127 | 1.3966 | 1.3966 | 1.1393 | 1.2895 | 1.3966 | 1.327 | 1.3966 | 1.3966 |
| 25 | ARTS (SP) / MASS MEDIA* | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 | 1.2639 |
| 26 | ARTS (SP) / PERFORMING ARTS * | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 | 1.0976 |
| 27 | ARTS (SAB) - A * | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 | 1.3894 |
| 28 | ARTS (SAB) - B * | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 | 1.4719 |
| 29 | MANAGEMENT STUDIES (TV) - A | 1.4707 | 1.1853 | 0.9485 | 1.009 | 0.6772 | 1.2028 | 0.9546 | 1.0931 | 1.1139 |
| 30 | MANAGEMENT STUDIES (TV) - B | 1.4507 | 1.3886 | 1.3882 | 1.301 | 1.2753 | 1.4631 | 1.4662 | 1.4746 | 1.4101 |
| 31 | ARCHITECTURE | 1.0392 | | | | | | | | |
| 32 | DESIGN (ARCHITECTURE) | 0.5573 | | | | | | | | |
| 33 | TOWN & COUNTRY PLANNING | 1.7422 | 1.7604 | 0.9028 | 1.0997 | 0.8486 | 1.39 | 1.6065 | 1.332 | 1.7686 |
| 34 | FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT | 0.951 | 0.8868 | | | | 1.2368 | | | |
| 35 | INFORMATION TECHNOLOGY | 1.7477 | 1.7179 | 0.8553 | 0.9435 | 0.5252 | 1.3919 | 1.1046 | 1.1619 | 1.3906 |
| 36 | INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.7499 | 1.6555 | 1.6523 | 1.5738 | 0.2625 | 1.5621 | 1.5432 | 1.6763 | 1.7443 |
| 37 | FACILITIES MANAGEMENT | 1.658 | 1.6589 | 0.8053 | 1.3754 | 0.3469 | 1.6146 | 1.5463 | 1.6507 | 1.4042 |
| 38 | TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.8633 | 1.7675 | 0.9231 | 0.9805 | 0.6315 | 1.38 | 1.2626 | 1.3538 | 1.287 |
| 39 | LAW | 1.8181 | 1.776 | 1.7375 | 1.9082 | 1.5616 | 1.6975 | 1.7085 | 1.7971 | 1.8096 |
| 40 | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY | 1.6496 | 1.4817 | | 0.356 | | 1.3203 | 0.8654 | 0.7798 | 1.2028 |
| 41 | COMMUNICATION STUDIES * | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 | 1.3701 |
| 42 | PEACE & CONFLICT RESOLUTION * | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 | 1.6569 |
| 43 | AYURVEDIC MEDICINE & SURGERY | 1.1773 | | | | | | -0.0943 | | 0.7414 |
| 44 | UNANI MEDICINE & SURGERY | 0.8547 | 1.0445 | 0.0011 | 0.8225 | | 0.8086 | 1.0493 | 1.1091 | 1.0948 |
| 45 | SIDDHA MEDICINE | 0.7869 | 0.8736 | 0.2204 | 0.3177 | 0.232 | 0.7862 | 0.8225 | 0.8521 | 0.8639 |
| 46 | INFORMATION & COMMUNICATION TECHNOLOGY | 1.4047 | 0.2854 | | -0.1425 | | 1.017 | 0.4972 | 0.4012 | 0.7187 |
| 47 | HEALTH PROMOTION | 1.3018 | 1.3199 | 0.2582 | 0.3975 | -0.0453 | 1.1632 | 1.0466 | 1.3285 | 1.3154 |
| 48 | NURSING | 1.3456 | 1.3889 | 0.4837 | 0.8756 | -0.0879 | 1.2442 | 1.1335 | 1.2277 | 1.3488 |
| 49 | PHARMACY | 1.6887 | 1.7029 | 0.8303 | 0.9493 | 0.3027 | 1.5681 | 1.2559 | 1.4329 | 1.587 |
| 50 | MEDICAL LABORATORY SCIENCES | 1.7551 | 1.7269 | 0.844 | 1.0309 | 0.3534 | 1.6195 | 1.4202 | 1.6177 | 1.6113 |
| 51 | RADIOGRAPHY | 1.6617 | 1.6328 | 0.7147 | 0.8952 | 0.3829 | 1.3969 | 1.3141 | 1.3005 | 1.5488 |
| 52 | PHYSIOTHERAPY | 1.849 | 1.7917 | 0.8322 | 0.9838 | 0.4676 | 1.6882 | 1.3581 | 1.6954 | 1.6217 |

| | SUBJECTS | COLOM | JAFFNA | KILI | MAN | MULLAI | VAVU | TRINCO | BATTI | AMPA |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 53<br>54 | ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.3892 | 1.3755 | 0.3719 | 0.6204 | 0.0279 | 1.0834 | 1.089 | 1.1858 | 1.3656 |
| 55 | INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.6428 | 1.6451 | 0.6497 | 0.8708 | 0.3217 | 1.1373 | 1.157 | 1.2411 | 1.2603 |
| 56 | STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5854 | 1.5903 | 0.828 | 0.9276 | 0.257 | 1.1469 | 1.1107 | 1.2563 | 1.3927 |
| 57 | COMPUTATION & MANAGEMENT | 1.6187 | 1.5796 | 0.9777 | 1.4549 | 1.0775 | 1.5701 | 1.6102 | 1.7081 | 1.7229 |
| 58 | FISHERIES & MARINE SCIENCES | 1.3465 | 1.3236 | 0.2207 | 0.8683 | -0.5318 | 1.0803 | 1.036 | 1.1856 | 1.3197 |
| 59 | ANIMAL SCIENCE & FISHERIES | 1.4397 | 1.4553 | 0.3672 | 0.7768 | 0.3241 | 1.1535 | 1.0514 | 1.2133 | 1.4609 |
| 60 | FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4001 | 1.4829 | 0.6175 | 0.6487 | 0.0657 | 1.3481 | 1.136 | 1.3676 | 1.4711 |
| 61 | ISLAMIC STUDIES * | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 | 1.2515 |
| 62 | ARABIC LANGUAGE * | 0.773 | 0.773 | 0.773 | 0.773 | 0.773 | 0.773 | 0.773 | 0.773 | 0.773 |
| 63 | SCIENCE & TECHNOLOGY | 1.1825 | 1.2309 | 0.1292 | 0.4708 | -0.2222 | 1.208 | 0.7376 | 1.0821 | 1.0101 |
| 64 | COMPUTER SCIENCE & TECHNOLOGY | 1.2214 | 1.3015 | 0.5947 | | | 1.0209 | -0.0644 | 1.0451 | 1.2815 |
| 65 | ENTREPRENEURSHIP & MANAGEMENT | 1.4777 | 1.2798 | 0.6011 | 1.1918 | | 1.014 | 1.3023 | 1.239 | 1.3133 |
| 66 | ANIMAL SCIENCE | 0.9438 | 0.8268 | -0.1243 | 0.4162 | | 0.6871 | 0.4034 | 0.8213 | 0.6633 |
| 67 | EXPORT AGRICULTURE | 1.0862 | 0.8836 | | 0.0259 | | 0.622 | 0.3966 | 0.6021 | 0.9158 |
| 68 | TEA TECHNOLOGY & VALUE ADDITION | 0.9777 | 0.7681 | -0.1994 | 0.0334 | | -0.1167 | 0.2012 | 0.0845 | 0.6411 |
| 69 | INDUSTRIAL INFORMATION TECHNOLOGY | 1.2732 | 1.3033 | 1.0847 | 0.9849 | -0.115 | 1.032 | 1.3166 | 1.1222 | 1.1955 |
| 70 | MINERAL RESOURCES & TECHNOLOGY | 1.1089 | 1.1345 | 0.3738 | 0.5162 | | 0.7944 | 0.576 | 1.025 | 1.0752 |
| 71 | AQUATIC RESOURCES TECHNOLOGY | 0.9399 | 0.8798 | -0.3148 | -0.1431 | | 0.6658 | 0.2953 | 0.6666 | 0.8695 |
| 72 | PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION | 0.862 | 0.4702 | | | | 0.1936 | -0.4404 | 0.4552 | 0.4902 |
| 73 | HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT (Uwa Wellassa University) | 1.4066 | 1.4372 | 0.3698 | 0.9192 | | 1.2374 | 1.2616 | 1.4154 | 1.2883 |
| 74 | MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.4935 | 1.4878 | 1.384 | 1.5135 | 1.326 | 1.5334 | 1.4849 | 1.5923 | 1.57 |
| 75 | COMPUTING & INFORMATION SYSTEMS | 0.8015 | 0.6972 | | | | 1.0286 | | | 0.555 |
| 76 | PHYSICAL EDUCATION | 0.8602 | | | | | 0.2619 | 0.9974 | 0.8173 | 1.176 |
| 77 | SPORTS SCIENCES & MANAGEMENT | 1.2236 | 1.2032 | | | | 0.6888 | 1.1789 | -0.6339 | 1.168 |
| 78 | SPEECH & HEARING SCIENCES | 1.4063 | 1.2258 | 1.2896 | 1.0054 | 1.1339 | 1.0943 | 1.526 | 1.4419 | 1.3578 |
| 79 | ART & SCULPTURE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | 0.5366 | | | | | | | | 0.3688 |
| 80 | MUSIC (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | 0.8361 | | | | | | | | 0.4093 |
| 81 | DANCE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | 0.9931 | | | | | | 0.9181 | | 0.8241 |
| 82 | DRAMA & THEATRE (UNIVERSITY OF VISUAL & PERFORMING ARTS) | 0.9713 | | | | | | | | |
| 83 | ART & DESIGN (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | | 0.3645 | | | 0.5918 | | 0.4211 | -0.0696 | 0.5247 |
| 84 | MUSIC (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.0757 | 0.0909 | 0.0345 | 0.5358 | 0.4226 | 0.215 | -0.5284 | 0.2785 | -0.1432 |
| 85 | DANCE (RAMANATHAN ACADEMY OF FINE ARTS) | 0.4289 | 0.2343 | 0.2569 | 0.0378 | 0.4416 | -0.0859 | 0.1314 | 0.4496 | 0.5118 |
| 86 | VISUAL & TECHNOLOGICAL ARTS (SWAMI VIPULANANDA INSTITUTE) | | 0.9328 | 0.5402 | 0.503 | 0.7581 | 0.7219 | 0.9561 | 0.856 | 0.8906 |
| 87 | MUSIC (SWAMI VIPULANANDA INSTITUTE) | | 0.8569 | 0.7344 | 0.4425 | 0.6481 | 0.5612 | -0.1124 | 0.4343 | 0.3401 |
| 88 | DANCE (SWAMI VIPULANANDA INSTITUTE) | 0.0317 | 0.7997 | 0.8908 | | 0.6147 | 0.6606 | -0.1103 | 0.4499 | 0.5964 |
| 89 | DRAMA & THEATRE (SWAMI VIPULANANDA INSTITUTE) | | 1.3199 | 1.1333 | 1.1078 | 1.0575 | 0.8211 | 0.9063 | 1.2697 | 1.1989 |
| 90 | TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.5422 | 1.4725 | 1.3147 | 1.523 | 1.257 | 1.5595 | 1.35 | 1.3828 | 1.3523 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியுடன் விரிவுரையாளர்கள் நடத்திய பேச்சு தோல்வியில் முடிவு

## போராட்டத்தைத் தொடரப் போவதாக அறிவிப்பு

கொழும்பு, மே 28

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்துக்கும் இடையில் புதன்கிழமை இடம்பெற்ற பேச்சு வெற்றி அளிக்காததால் தொடர்ந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் ஹேவசிறி இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்ட போதிலும் அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொருத்தமான பதிலை அவர் கூறவில்லை.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு இரு தரப்பினரும் வெற்றி பெறுவதாய் அமைய வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார். இதன் அர்த்தம் என்னவென்று எமக்குத் தெரியவில்லை.

எமது தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஒன்றாக நாம் வகித்து வந்த நிர்வாகப் பதவிகள் இராஜிநாமாச் செய்யப்பட்டன. இது எமது தொழிற்சங்க நடவடிக்கையின் பொதுவெற்றியாகும்.

பல பல்கலைக்கழகங்களில் கற்றல் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன. அதிகமான மாணவர்கள் எமது கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கற்றல் நடவடிக்கைகளில் இருந்து தவிர்த்து வருகின்றனர்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு நடவடிக்கையில் இருந்து விலகிக்கொள்ள விரிவுரையாளர்கள் தீர்மானித்துள்ளனர்- என்றார்.

(இ-07)

# காலிமுகத்திடலில் வெற்றிக் கொண்டாட்டம்

கொழும்பு, மே 28

யுத்த வெற்றியின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நேற்று மழைக்கு மத்தியில் ஜனாதிபதியின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கொழும்பு காலிமுகத்திடலில் குறைந்த அளவிலான பொதுமக்களும், பல ஆயிரக் கணக்கான படையினரும், அரசியல் பிரமுகர்களும், விசேட விருந்தினர்களும் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

நேற்று அதிகாலை முதலே கொழும்பு புறநகரில் கடும் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. இதனால் பொதுமக்கள் இந்த வெற்றி விழாவில் கலந்துகொள்வதில் ஆர்வம் காட்டவில்லை.

காலை எட்டு மணி முதல் விசேட விருந்தினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் வருகை தந்து தத்தமது ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளான சபாநாயகரும், பிரதமரும் மோட்டார் பவனியாக வந்து சேர்ந்தனர். இவர்களை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், முப்படைத் தளபதிகளும் வரவேற்றனர்.

பின்னர் கோல உடை தரித்த குதிரைப்படையினர் முன்னே அணிவகுத்து வர ஜனாதிபதியும், அவரது பாரியாரும் மோட்டார் பவனியில் வந்தடைந்தனர்.

இவர்களைப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் வரவேற்று விசேட மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் மங்கள பேரிசை முழங்க ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து முப்படைகளை யும் சேர்ந்த நாற்பது பேர் தேசிய கீதம் இசைத்த பின்னர் விழா நிகழ்வுகள் ஆரம் பமாகின.

நேற்றைய நிகழ்வின்போது இறுதிக்கட்ட யுத்தத்தில் நேரடியாகக் கலந்து கொண்ட 8,800 (முப்படை) சிப்பாய்களும், அவர்கள் பயன்படுத்திய கனரக ஆயுதங்களுடன் பேரணி ஒன்றை நடத்தினர்.

இவர்களுடைய பேரணிக்கு முன் ஜனா திபதி நாட்டு மக்களுக்கு விசேட உரை யாற்றினார்.

பின்னர் முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸ் படையினர் நடத்திய அணிவகுப்பும், கனரக ஆயுத ஊர்திகளினதும், பீரங்கிகளினதும் ஊர்வ லமும் இடம் பெற் றமை குறிப்பிடத் தக்கது.



வன்னேரிக்குளம் ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்றுகிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதியை படத்தில் காணலாம். (15-6)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்தவர் பெண்ணை மோதினார்

யாழ்ப்பாணம், மே 28

மோட்டார் சைக்கிளில் சென்றவர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபப் பெண்ணை மோதி வீழ்த்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

தலையில் படுகாயமடைந்த அவர் இரத்தம் சிந்திய நிலையில் சிகிச் சைக் கென யாழ். போதனா வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத் தைச் சேர்ந்த இ.தங்கம்மா (வயது - 72) என்பவரே படுகாய மடைந்தார்.

ஏற்கனவே விபத்தொன்றில் சிக்கி காயமடைந்த இவர் கடந்த 3 வாரங் களுக்கு முன்னரே வைத்திய சாலையிலிருந்து வீடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை இரத்தினபூபதி (வாத்தியம்மா)



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரம், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இரத்தின பூபதி நேற்று (27.5.2011) வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கொல்வேலாயுதம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை (ஆசிரியர்-முத்தையா மாஸ்ரர்) அன்பு மனைவியும் குணரெத்தினம்-கௌரிதேவி, ஸ்ரீகுகன், ஸ்ரீ ஈஸ்வரன், ஸ்ரீபகவான் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மட்டக்களப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

289, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
(4639) (34)
தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குமாரவேலு காசிப்பிள்ளை



தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரவேலு காசிப்பிள்ளை நேற்று (27.05.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10. மணியளவில் நடைபெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
(4637)

**விற்பனையாளர்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும்
**ஆர்க் என்ரப்பிறைசஸ்**
நிறுவனத்துக்கு விற்பனையாற்றல் மிக்க இளைஞர் தேவை. சுயவிவரக் கோவையுடன் 30.05.2011 திங்கட் கிழமை நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு:-
**ஆர்க் என்ரப் பிறைஸ்,**
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**G.C.E (A/L) - ICT**
**2013/2012**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
A சித்திபெறுவதற்கான உத்தரவாதம்.
Mr.R. Kumaran - B.Sc. - Contact No:-077 657 7359.
MIS, 74, Sabapathy Lane, Thalaiyali, Pirambadi, Jaffna.




பல வண்ணங்களில் தரை ஓடுகளையும் குளியலறைச் சாதனங்களையும் பெற்றுக் கொள்ளலாம். கிர்னைட் கற்கள் (சகல அளவுகளிலும்) குறைந்த விலையில் எம்மிடம்
**ஆர்க் என்ரப்பிறைசஸ்**
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)




**ஸ்ரீ ராம் ஜிம்,**
மூத்த பயிற்சியாளர்கள், T.P:-077 900 4304.

யாழ்ப்பாணத்தில் முதன்மை வகிக்கும் "ஸ்ரீ ராம் ஜிம்" ஆனது தனது 13ஆவது ஆண்டு நிறைவுடன் புதிய பரிமாணத்துடனும், நவீன உடற்பயிற்சி சாதனங்களுடனும் "லதுசயன் பிளாசா" 650, 2/1, K.K.S Road, இணுவில் என்னும் இடத்தில் அமைந்துள்ள விசாலமான 2ஆம் மாடியில் இன்று உதயமாகிறது என்பதனை மிக மகிழ்ச்சியுடன் யாவருக்கும் அறியத்தருவதுடன், அனைத்துப் பயிற்சியாளர்களையும் பி.ப. 3 மணிக்கு வருகைதந்து இந்த நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

* புதிய அனுமதிகள் விஷேட கட்டணக்கழிவுகளுடன் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
* ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உரிய வகையில் நேரம் ஒதுக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் விஷேட கவனம் செலுத்தப்படுகிறது.

புதிய விலாசம், "லதுசயன் பிளாசா" 650, 2/1, K.K.S Road, இணுவில்.

**நிழல் அல்ல நிஜம் !!!!**
ஒரே வாரத்திலே
★ உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்!
★ முகப்பருக்கள், கரும்புள்ளிகள், கழுத்துக் கருமை, உதடு கருமை, சரும வரட்சி, கருவளையம் போன்றவற்றுக்கான சிகிச்சைகள்!
★ இடுப்பு மற்றும் வயிறு தசைகள் குறைப்பதற்கான சிகிச்சைகள்.
★ உடல் அழகுச் சிகிச்சைகள்.
★ உடற் பருமன் கூட்டுதல், குறைத்தல்.
" முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள்"
SANEYA HERBAL CARE
"நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை"
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
முற்பதிவுகளுக்கு: 0777 351954, 0774011129. " WE CARE ALWAYS"

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
**O/L DAY CLASS**
(8.30-2.00மணி)
**புதிய பிரிவு**
ஆரம்பம்:-30.06.2011 8.30am
இப்பிரிவுக்கு 75 மாணவர்களுக்கு மட்டுமே.
★ தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி.

**வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**
**விசேட சலுகை**



லண்டன், சுவிஸ் 450/=
கனடா 500/=
**72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்**
**லண்டன் 1Kg 800 /=**
கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்,சுவிஸ், டென்மார்க் ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
**1Kg 950 /=**
**ARRUL GLOBAL EXPRESS**
**International Courier & Cargo Service**
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். T.P : 021 222 6113

'இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org